# மந்திரச் சாவி!

## 1. இந்த நிலை மாறிவிடும்!’



உலகையே சிரிக்கவைத்தவர் சார்லி சாப்ளின்! ஆனால், அவரது வாழ்க்கை சந்தோஷமாக இருந்ததே இல்லை. பிறந்ததில் இருந்தே துன்பங்கள், அவமானங்கள், தோல்விகள்..!

1889... லண்டன் நகரில் சாப்ளின் பிறந்து, ஓரிரு வருடங்களிலேயே பெற்றோரிடையே சண்டை வந்து டைவர்ஸ் ஆகிவிடவே, பேசத் தொடங்கும் முன்பே, தாயுடன் சேர்ந்து மேடையில் பாட வேண்டிய நிர்ப்பந்தம். ஐந்து வயதுச் சிறுவனின் பாட்டுக்குக் கிடைத்த அமோக வரவேற்பு, ஏழு வயதிலேயே பறிபோனது. காரணம், அவரது தாயாரின் மனநிலை பாதிக்கப்பட்டதுதான்.

குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக, சலூன், கண்ணாடித் தொழிற்சாலை, மருத்துவமனை என எங்கெங்கோ வேலைபார்த்தவர், சில காலம் தந்தையுடன் சேர்ந்து மேடை நாடகங்களிலும் நடித்தார். ஆனால், தந்தை திடீரென இறந்துவிடவே, மீண்டும் தொய்வு!

1910... நாடகக் குழுவினருடன் அமெரிக்கா போனவருக்கு குறும்படங்களில் நல்ல பெயர் கிடைத்தது. அவரது முத்திரை கேரக்டரான ‘டிராம்ப்’ (பேகி பேண்ட், தொப்பி, கைத்தடி, வளைந்த கால்கள்) பாப்புலரானது. ‘தி கிட்’, படத்தில் தொடங்கிய வரவேற்பு, ‘தி கிரேட் டிக்டேட்டர்’ வரை நீடித்தது. ஆனால், இந்த காலகட்டங்களில் குடும்ப வாழ்வு அவரை பாடாய்ப் படுத்தியது.

1918-ல் நடந்த முதல் திருமணம், இரண்டு வருடம் மட்டுமே நீடித்தது. அதற்குப்பின் நடந்த இரண்டு திருமணங்களும்கூட சாப்ளினுக்குச் சோகத்தை மட்டுமே கொடுத்தன. 1942-ல் நான்காவது மனைவியாக ஓ.நெய்ல் அமைந்தபின் இல்லறத் தொல்லைகள் நின்றன.

1945-ம் ஆண்டு. சாப்ளின் ஒரு கம்யூனிஸ்ட் தீவிரவாதி என அமெரிக்க அரசு குற்றம் சாட்டியது. இரண்டாவது மனைவி ஜோன்பெர்ரியும் சாப்ளின் மீது குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்திருந்தார். அவர் தரப்பு நியாயங்களை அமெரிக்க அரசு கேட்காததால், வேறுவழியின்றி, 1952-ல் கனத்த இதயத்துடன் சுவிட்சர்லாந்தில் அடைக்கலமானார் சாப்ளின்.

1972... காலச் சக்கரம் சுழல, அதே அமெரிக்க அரசு, ‘உலகின் தலைசிறந்த நகைச்சுவை நடிகர்’ விருது பெற சாப்ளினை அழைத்தது. பரிசினை ஏற்றுக்கொண்டாலும், அமெரிக்காவில் தங்க விருப்பமின்றி, மீண்டும் சுவிட்சர்லாந்து கிளம்பினார் சாப்ளின். விமான நிலையத்தில் பத்திரிகையாளர்கள் சூழ்ந்து நின்று, ‘‘வாழ்நாள் முழுவதும் போர்க்களமாக இருந்தாலும் எப்படி ஜெயித்தீர்கள்? அது என்ன ரகசியம்?’’ எனக் கேட்டார்கள். சாப்ளின் சிரித்தார்... ‘‘இந்த நிலை மாறிவிடும் என்பதை நான் எப்போதும் மறந்ததில்லை. அது இன்பமாக இருந்தாலும் சரி, துன்பமாக இருந்தாலும் சரி... மாறிவிடும்! இதோ இந்தக் கணத்திலும்கூட!’’

வறுமையில் பிறந்து, வாழ்வெல்லாம் போராடி, உலகையே தன் பெயரை உச்சரிக்க வைத்த மாபெரும் கலைஞனின் அந்த மந்திரச் சொல், நம் வெற்றிக்கும் நல்ல சாவி!

## 2. 'எதிலும் தீவிரமாக இரு!'



சவரக் கத்தியையும் கண்ணாடியையும் எடுத்து வைத்துக் கொண்டு தயாரானான். கண்ணாடியில் தன்னை இப்படியும் அப்படியும் பார்த்துக்கொண்டவன், அடுத்த விநாடி கொஞ்சம்கூட யோசிக்காமல், சரக்கென தன் காதை முழுமையாக அறுத்து எடுத்தான். ரத்தம் பீய்ச்சியடிக்க, ஒரு துண்டு எடுத்து, காதைச் சுற்றித் தலையில் அழுத்தமாகக் கட்டிக்கொண்டான். அறுந்து கிடந்த காதை எடுத்து, நீரில் கழுவினான். பின்பு, அதை ஒரு தாளில் அழகாக மடித்து எடுத்துக்கொண்டான். அவசர அவசரமாக, ரக்கேல் என்னும் அழகான இளம்பெண் வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினான். வெளியே வந்தவளிடம், ''இந்தா, உனக்காக என் காதல் பரிசு!'' என நீட்டினான். வாங்கிப் பிரித்தவள், ரத்தம் சொட்டச் சொட்டக் கிடந்த காதைப் பார்த்ததும் அதிர்ச்சியடைந்து மயக்கமானாள்.

'உன் காதுகள் அழகாக இருக்கிறது' என்று அடிக்கடி அவள் சொன்னதற்காகவே, தன் காதை அறுத்துக்கொண்ட அந்தக் காதலனின் பெயர் வின்செண்ட் வான்கா.

சுரங்கத் தொழிலாளிகளுக்கு மதப்பிரசாரம் செய்து நம்பிக்கை ஊட்டுவது பெரும்தொண்டு என்று வந்தான் வான்கா. விஷப்புகையில், வெளிச்சமே இல்லாத சுரங்கத்துள் நிமிரக்கூட முடியாமல் வேலை செய்யும் தொழிலாளர்கள் ரொட்டியும், புளித்துப் போன வெண்ணெயும் உண்டு நோயாளிகளாகத் திரியும் கொடுமையைக் கண்டு கொதித்தான். தன்னுடைய பிரசங்கத்தால் அவர்களுக்கு எவ்வித விடிவும் கிடைக்கப்போவதில்லை என்பது தெரிந்ததும், மதப்பணியைத் தூக்கி எறிந்தான்.

வேலையும் இல்லாமல், கையில் காசும் இல்லாமல் அங்கிருந்த கரிக்கட்டைகளால் கண்டதையும் கிறுக்கத் தொடங்கியபோதுதான், தனக்குள் ஓர் ஓவியன் இருப்பதை உணர்ந்தான் வான்கா. தன் சந்தோஷம், எதிர்காலம் எல்லாம் இனி ஓவியத்தில்தான் இருக்கிறது என்று இரவும் பகலும் வரையத் தொடங்கினான். ஆனால் பணம்? வழக்கம்போல் தம்பிக்கு கடிதம் எழுதினான்...

''எனக்கு ஓவியங்கள் வரையப் பிடித்திருக்கிறது, தியோ! முடிந்தால், பாரீஸில் இருக்கும் நல்ல ஓவியர்களின் படங்களுடன் பணமும் அனுப்பு. சிரமமாக இருந்தால் சொல்... நான் மீண்டும் மதப்பிரசாரம் செய்யவோ, ஓவியக் கடை விற்பனையாளராகவோ மாறிவிடுகிறேன்!''

உடனே பணத்துடன், சில ஓவியங்களையும் வரைபொருட்களையும் வாங்கி அனுப்பினான் தம்பி தியோ. கூடவே, ‘‘வான்கா, நான் நிறையச் சம்பாதிக்கிறேன். ஆனால், உன்னைப் போல் என்னால் எதிலும் தீவிரமாக இருக்க முடிந்ததில்லை. இந்தச் சமூகமும் குடும்பமும் என்னை அப்படி இருக்கவும் விடாது. ஆனால், உனக்குப் பிடித்ததை செய். எதிலும் தீவிரமாக இரு!’’ என்று ஒரு கடிதமும் எழுதியிருந்தான்.

அந்தக் கடிதம்தான் வான்காவை ஒரு முழுநேர ஓவியனாக மாற்றியது. நரம்புகள் பலவீனமாகும்வரை வெறியுடன் வரையவைத்தது. ஆனால், அவனது ஓவியங்கள் யாராலும் கொஞ்சம்கூட மதிக்கப்படவில்லை. என்றாலும், வான்கா சற்றும் சளைக்காமல் மேலும் மேலும் தீவிரமாக வரைந்ததற்குக் காரணம், தம்பி தியோவின் கடிதத்தில் இருந்த வைர வரிகள்தான்!

27 வயதில் வரையத் தொடங்கிய வான்கா, 37-வது வயது முடியும் முன்பே, மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவமனையில் இருந்தபோது, துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு இறந்து போனான்.

தன் வாழ்நாளில் ஒரு ஓவியம்கூட விற்க முடியாத வான்காவின் ஓவியங்கள், இன்று கோடிக்கணக்கில் விலை பேசப்படுகின்றன. வான்காவின் ஓவிய வெற்றிக்குப் பின்னால் மட்டுமல்ல, சாதனையாளர் ஒவ்வொருவரது வெற்றிக்குப் பின்னால் ஒளிந்திருப்பதும், ‘எதிலும் தீவிரமாக இரு’ எனும் மந்திரச் சொல்தான்!

# 3. 'உன்னையே நீ அறிவாய்!'



''நீங்கள் வாழ்வதற்குப் புறப்படுங்கள், நான் விடைபெறுகிறேன்!'' என நீதிபதிகளைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, கை கால்களில் பூட்டப்பட்டிருந்த விலங்குடன் சிறைக்கூடத்துக்குள் நடந்தார் சாக்ரடீஸ். சிறைப் பணியாளர்கள், சீடர்கள், மனைவி, மக்கள் அனைவரும் சுற்றி நின்று விம்மி அழுத சூழலிலும், மகிழ்ச்சி குறையாமல் தனக்கான நஞ்சுக் கோப்பையை வாங்கிக் கொண்டார்.

''நஞ்சினை இப்போதே பருக வேண்டியதில்லை. சற்றுநேரம் கழித்தும் பருகலாம்'' என சிறைக் காவலர் அன்புடன் சொல்ல, ''காலம் தாழ்த்துவதால், உங்கள் அனைவருக்கும் இல்லம் திரும்பத் தாமதமாகலாம். அதனால், இப்போதே குடிக்கிறேன்'' என்றபடி, ஒரு சொட்டுகூட மிச்சம் வைக்காமல் குடித்து முடித்தார்.

''உங்கள் இறுதிச் சடங்கு எப்படி அமையவேண்டும்?'' என ஒரு நண்பர் கேட்க, ''மரணத்துக்குப் பின் என்னை உங்களால் பிடிக்க முடியாது. என் உடலை என்ன செய்தாலும், அதனால் எந்தப் பயனும் இல்லை'' என்று சின்ன சிரிப்புடன் திரும்பிய சாக்ரடீஸ், மரணத்தை வரவேற்க, குறுக்கும் நெடுக்குமாய் வேகவேகமாக நடக்கத் துவங்கினார். விஷம் அவரது உடம்பில் கிறுகிறுவென்று பரவி, கால்கள் நடுங்கின. குளிரெடுக்க ஆரம்பித்தது. ஒரு கட்டத்தில் அடுத்த அடி எடுத்து வைக்க முடியாமல், அப்படியே மெள்ளச் சரிந்து குப்புறப் படுத்துக்கொண்டார். சில விநாடிகளில் விடைபெற்றார் சாக்ரடீஸ்!

கி.மு 469-ல்... கிரேக்க நாட்டில் ஓர் ஏழைச் சிற்பியின் மகனாகப் பிறந்தவர் சாக்ரடீஸ். ராணுவத்தில் பணியாற்றப் போனவர், சில காலத்துக்குள்ளேயே வெளியேறி, தந்தையின் சிற்பத் தொழிலுக்கே திரும்பி வந்தார். சதா சிந்தனையிலேயே காலம் கழித்த சாக்ரடீஸை முதலில் அறிந்துகொண்டது அவர் தந்தைதான். ''நீ யார், எதற்காக வந்திருக்கிறாய், என்ன செய்யப் போகிறாய் என்பதை முதலில் தெளிவாக அறிந்துகொள். பின், அதன்படி நட!'' என்றார் அப்பா. தன் நாற்பதாவது வயதுக்குப் பின்னரே, தன் எண்ணங்களை எல்லோரிடமும் தைரியமாக, வெளிப்படையாகப் பேசத் தொடங்கினார் சாக்ரடீஸ்.



RangaRakes tamilnavarasam.com


அந்தக் காலத்தில் மதம், அரசு இரண்டையும் அப்படியே ஏற்றுக் கொள்வதே கிரேக்கர்களின் மரபு. சாக்ரடீஸ் அதை முதலில் உடைக்க விரும்பினார். விவாதங்கள், தத்துவங்களை அள்ளித் தெளிப்பார். கடவுளை அவர் மறுக்கவில்லை என்றாலும், கடவுள் பெயரால் நடைபெறும் மூடத்தனங்களை எதிர்த்தார். ஆட்சியாளர்களின் அநியாயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டினார்.

உருண்டையான சப்பை மூக்கு, பிதுங்கி நின்ற கண்கள், குட்டையான உருவம், சாய்ந்த நடை, அவலட்சணமான தோற்றம்... இதுதான் சாக்ரடீஸ். ஆனால், அவரது பேச்சைக் கேட்பதற்காக இளைஞர்கள் திரண்டு வந்தார்கள்.

கிரேக்கக் கடவுளை நிந்தித்து புதிய மதத்தைப் பரப்பி, இளைஞர்களை கெடுக்கப் பார்க்கிறார் என்ற குற்றச்சாட்டுதான் எழுபதாவது வயதில் இவர் மீது சுமத்தப்பட்டது. 'மன்னிப்புக் கேட்டால் உயிர் பிழைக்கலாம்' என நீதிபதிகள் சொன்னபோதும், ''உயிரைவிட என் கருத்துக்கள் உயர்ந்தவை'' என்று மரணத்தைத் தழுவினார்.

சாக்ரடீஸின் மந்திரம் என்ன தெரியுமா... ''நண்பர்களே! நான் உங்களுக்குச் சொல்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்... உங்களை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். அதுதான் உண்மையான அறிவு. உன்னையே நீ அறி-வாய்! அதன் பிறகே, உன்னைச் சுற்றி நடப்பதை அறிய முடியும்; ஆராய முடியும்; வாழ்வை வெல்ல முடியும்!''

## 4. ‘தகுதியுள்ளவை தப்பிப் பிழைக்கும்!’



1835-ம் ஆண்டு... இங்கிலாந்தில் இருந்து கிளம்பியது ‘பீகில்’ எனும் கப்பல். சுமார் நான்கு ஆண்டு பயணத்துக்குப் பின் மனித நடமாட்டமே இல்லாத கலோபஸ் தீவுக் கூட்டத்தில் நங்கூரமிட்டது ‘பீகில்’. தீவுக்குள் நுழையும்போதே சார்லஸ் டார்வினுக்கு ஆச்சர்யம். கரையோரமாக முதிர்ந்த ராட்சத ஆமைகள் கூட்டம். கடலுக்குள் சுறாமீன்கள் துள்ளி விளையாடுவதையும், கூட்டமாக ஒரு மீன் கூட்டம் சரசரவென கரையேறுவதையும் பார்த்தவர், சற்றே நெருங்கியபோது அதிர்ந்தார். அவை மீன்கள் அல்ல... சின்னஞ்சிறு கால்களைக் கொண்ட பல்லிகள்.

மீன்களாக இருந்தவை சுறாமீன்களுக்குப் பயந்து ஆபத்தில் இருந்து தப்புவதற்காக தங்கள் செதில்களையே கால்களாக மாற்றிக்கொண்ட ஜீவராசிகள் எனத் தெரிந்ததும் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தார். மனித குலத்துக்கு அதிர்ச்சி தரக்கூடிய மாபெரும் அறிவியல் உண்மையை அறிந்துவிட்டாலும் எப்படி அதைச் சொல்வது எனத் தயக்கம் டார்வினுக்கு.

ஏனென்றால், எல்லோருக்குமே டார்வின் அப்போது ஒரு விளையாட்டுப் பிள்ளை. 1809-ம் வருடம் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்து, டாக்டருக்குப் படித்தவர் டார்வின். பிறகு அது பிடிக்காமல், மதகுரு ஆவதற்குப் பயிற்சியெடுத்தவர். அதிலும் ஆர்வம் குறையவே, ‘பீகில்’ ஆராய்ச்சிக் கப்பலில் உலகம் சுற்றத் தொடங்கிவிட்டார். அபூர்வ தாவரங்கள், அதிசய உயிரினங்கள் என டார்வின் உலகமெங்கும் தேடித் தேடிச் சேகரிப்பதை அவரது பொழுதுபோக்கு என்றே மற்றவர்கள் நினைத்தார்கள். அவரை ஓர் ஆராய்ச்சியாளராக யாருமே கருதவில்லை. அதனால், ஒரு பெரும் உண்மையைக் கண்டுபிடித்தும், மனதில் போட்டு பூட்டிவைத்துப் புழுங்கினார் டார்வின்.

1838-ம் ஆண்டு மக்கள்தொகை பெருக்கம் பற்றி தாமஸ் மால்தூஸ் எழுதிய கட்டுரையைத் தற்செயலாக டார்வின் வாசித்தார். ‘மக்கள் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வந்தாலும் ஒரு கட்டத்தில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டு, போர் உண்டாகி, மக்கள்தொகை குறையத் தொடங்கிவிடும். தகுதியுள்ளவை தப்பிப் பிழைக்கும், தகுதியற்றவை அழிக்கப்பட்டுவிடும்’ என்ற வரிகள் டார்வினை உலுக்கின. அவரது ஆராய்ச்சியின் தடுமாற்றத்தை, அவருக்குள் இருந்த தயக்கத்தை அந்த ஒரே வரி அழுத்தமாகத் தீர்த்துவைத்தது. ‘தகுதியுள்ளவை தப்பிப் பிழைக்கும்’ என தனக்குள் ஆயிரமாயிரம் முறை சொல்லிப் பார்த்தார் டார்வின்.


சர்ச்சை, எதிர்ப்புகளைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்ற முடிவுடன் தனது ஆராய்ச்சியை எழுதத் தொடங்கினார். எழுதி முடிக்க இருபது ஆண்டுகளாயின. 1859-ம் ஆண்டு 'உயிரினங்களின் தோற்றம்' என்ற புத்தகத்தை வெளியிட்டார் டார்வின்.

உயிர்களை எல்லாம் ஒரேநாளில்தான் ஆண்டவர் உருவாக்கினார் என்று உலகில் எல்லா மதங்களும் போதித்து வந்த கருத்தினை, டார்வினின் புத்தகம் அடித்து நொறுக்கியது. உயிரினங்கள் அனைத்தும் சிறிது சிறிதாக மாற்றமடைந்து, இன்றைய உருவத்துக்கு வந்திருக்கின்றன... எதுவும் ஒரேநாளில் படைக்கப்பட்டதல்ல என்பதை தன் ஆராய்ச்சியின் மூலம் பல்வேறு ஆதாரங்களுடன் விளக்கினார் டார்வின்.

1871-ம் ஆண்டு 'மனித வம்சம்' என்ற தனது அடுத்த ஆராய்ச்சி நூலை வெளியிட்டார். குரங்கில் இருந்து மனிதன் வந்தான் என்று சொன்ன கருத்துக்களுக்கு மத இயக்கங்களில் இருந்து மீண்டும் பெரும் எதிர்ப்பு. அப்போதும் அவருக்குக் கைகொடுத்தது 'தகுதியுள்ளவை தப்பிப் பிழைக்கும்' என்ற மந்திரச் சொல்தான். அன்று டார்வினை உலகம் ஒப்புக் கொள்ளவில்லை. இன்றோ அறிவியல் உலகத்தில் டார்வின்தான் விஞ்ஞானத் திருவள்ளுவர்.

'தகுதியுள்ளவை தப்பிப் பிழைக்கும்' என்பதற்கு அவருடைய வாழ்வே அருமையான உதாரணம்!

## 5.‘நீ எதுவாக மாற விரும்புகிறாயோ, அதுவாக மாறுவாய்!’




முதன்முதலாகத் தேர்தலைச் சந்தித்து, தோல்வியடைந்த நேரத்தில், பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டார் ஆபிரகாம் லிங்கன். கூட்டம் முடிந்ததும், ‘‘உங்களில் சொர்க்கத்துக்குச் செல்ல விரும்புபவர்கள் மட்டும் கையைத் தூக்குங்கள்’’ என்றார் பாதிரியார். எல்லோரும் கையைத் தூக்க, ஆபிரகாம் மட்டும் பேசாமல் நின்றார்.

‘‘ஆபிரகாம்! நீ எங்கே போவதாக உத்தேசம்?’’ என பாதிரியார் கேட்க, தோல்வி அடைந்திருந்த அந்த மனநிலையிலும், ‘‘நான் செனட் உறுப்பினராகப் போகிறேன்’’ என்று உறுதியான குரலில் சொன்னார் ஆபிரகாம்.

‘‘நீ எதுவாக மாற விரும்புகிறாயோ, அதுவாக மாறுவாய்!’’ என, புன்னகையுடன் ஆசி வழங்கினார் பாதிரியார்.

1809&ம் வருடம், அமெரிக்காவின் சின்னஞ்சிறு கிராமத்தில் பிறந்த லிங்கனை, ‘தோல்விகளின் செல்லக் குழந்தை’ என்றே சொல்லலாம். அந்த அளவுக்குத் தொடர் தோல்விகள் அவரைத் துரத்திக்கொண்டே இருந்தன. பிறந்த சில வருடங்களிலேயே தாயை இழந்தார். ஒரு கடையில் எடுபிடி வேலை பார்த்துக்கொண்டே இரவு நேரங்களில் மட்டும் பள்ளிப் பாடத்தை ஆர்வத்துடன் படித்தார்.

இளைஞனாகி, பக்கத்து நகருக்குப் போனபோது, அங்கே அடிமைகளை வியாபாரம் செய்யும் மனிதச் சந்தையைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். கறுப்பர்களின் அடிமை வாழ்க்கையைப் பற்றி அவர் கேள்விப்பட்டு இருந்தாலும், காய்கறி போல மனிதர்கள் விற்கப்படுவதை நேரில் கண்டதும் ரத்தம் சூடேற, லிங்கனுக்குள் ஒரு புது லட்சியம் பிறந்தது. ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால்தான் இந்த அவலத்தை அகற்ற முடியும் என்று தெரிந்ததும், அவசரமாக தனது 22&வது வயதில் ஒரு நகராட்சித் தேர்தல் வேட்பாளராகக் களம் இறங்கி, படுதோல்வி அடைந்தார். இந்த நேரத்தில், சொந்தமாகத் தொழில் தொடங்கி, அதிலும் பெரும் கடனாளியாக மாறியிருந்தார்.

சோர்ந்துபோயிருந்த லிங்கனை ஒரு போராளியாக மாற்றியது, அவரது வளர்ப்புத் தாய் சாரா புஷ். 'ஆட்சிப் பொறுப்புக்கு வர வேண்டும் என்றால், ஆசைப்படுவதைப் பெறுவதற்கான தகுதிகளை முதலில் வளர்த்துக்கொள். நீ எதுவாக விரும்புகிறாயோ, அதுவாக மாறுவாய்!'' என்றார் சாரா புஷ். பாதிரியார் சொன்ன அதே வார்த்தைகள்!

இப்போது லிங்கனுக்கு தன் இலக்கு புரிந்தது. மனதில் தெளிவு பிறந்தது. அடிமை வியாபாரத்தை சட்டம் போட்டுத்தானே ஒழிக்க முடியும்? எனவே, முழுமூச்சுடன் சட்டம் படிக்கத் தொடங்கினார் லிங்கன். மக்கள் மனதை மாற்றினால் மட்டுமே சட்டத்தைச் சுலபமாக அமல்படுத்த முடியும் என்பதால், சட்டப் படிப்புடன் பேச்சுத் திறமையையும் வளர்த்துக்கொண்டார். அடிமை ஒழிப்பைப் பற்றி ஊர் ஊராகக் கூட்டம் போட்டுப் பேசினார். ஒரு தலைவருக்கான தகுதிகளை வளர்த்துக்கொண்டு, 1834–ல் நடந்த நகராட்சி உறுப்பினர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றார். அதன்பின், நகராட்சித் தலைவர், மாமன்ற உறுப்பினர், செனட் உறுப்பினர், உப ஜனாதிபதி என பல்வேறு பதவிகளுக்குப் போட்டியிட்டு, சில வெற்றிகளையும் பல தோல்விகளையும் சந்தித்து, 1860–ம் வருடம் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். ஆம், எதுவாக மாற நினைத்தாரோ, அதுவாகவே ஆனார் லிங்கன்.

இல்வாழ்விலும் அவருக்குத் தோல்விகள்தான்! 1835–ல் அவரின் காதலி 'ஆனி' விஷக் காய்ச்சலால் மரணம் அடைந்தார். 33–வது வயதில் மேரியுடன் திருமணம் முடிந்து, நான்கு குழந்தைகள் பிறந்தன. மூன்று பேர் சிறு வயதிலேயே மரணமடைந்தார்கள். மனைவிக்கு மனநோய் இருந்தது. இத்தனைத் தோல்விகளையும் மன உறுதியோடு எதிர்கொண்டதால்தான், லிங்கன் வெற்றி பெற முடிந்தது.

அமெரிக்க ஜனாதிபதியானதும், அதிரடி நடவடிக்கை எடுத்து, அடிமை அவலத்தை ஒழித்து, மாகாணங்களை ஒன்று சேர்த்து, அமெரிக்காவைத் தலை நிமிரவைத்தார் லிங்கன். அந்தச் சாதனையால்தான், அடுத்த முறையும் அவரே மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1865–ல் நாடகம் பார்த்துக்கொண்டு இருந்தபோது ஒரு நிறவெறியனால் சுடப்பட்டு மரணம் அடைந்தார் லிங்கன்.

'நீ எதுவாக மாற விரும்புகிறாயோ, அதுவாக மாறுவாய்' என்பது ஆபிரகாம் லிங்கனுக்கு மட்டுமல்ல... நம்பிக்கையைத் தளரவிடாமல், லட்சியத்துக்காக விடாப்பிடியாகப் போராடும் ஒவ்வொருவருக்கும் அது வெற்றித் திருமந்திரம்!

# 6. ‘இக்கணத்தில் வாழு!’




துன்பங்கள் நிறைந்த வாழ்வில் இருந்து மனிதர்கள் விடுபட்டு, இன்பமாக வாழவேண்டும் என்பதற்கான வழிதேடி, அரண்மனையைவிட்டு சித்தார்த்தன் வெளியேறியபோது அவனுக்கு வயது 29. முதலில், யோக மந்திரமுறைகளை முழுமூச்சுடன் கற்று, தேடிப் பார்த்தான். தேடிய விடை கிடைக்கவில்லை. அடுத்ததாக, உணவு, உறக்கம், ஓய்வு என எல்லாவற்றையும் துறந்து, உடலை வருத்தி தீவிர தியானத்தில் ஆழ்ந்தான். கிட்டத்தட்ட மரணத்தின் வாசலைத் தொட்டபோதுதான், தன் தேடலுக்கான விடை, தியானத்திலும் இல்லை எனக் கண்டுகொண்டான்.

தன் ஆறு வருட கால தியானத் தேடல் வீணாகிப்போனதே என்ற எண்ணத்தில் இருந்தபோது, பணிப் பெண் பால்சோறு கொண்டுவந்தாள். மிக நீண்ட நாட்கள் கழித்து உணவை அனுபவித்துச் சாப்பிட்டபோது, சித்தார்த்தன் மனதில் ஒரு மின்னல் மின்னியது. தன் தேடலுக்கான விடை கிடைத்ததுபோல் இருந்தது. உடனே, அரண்மனையை விட்டுக் கிளம்பிப் போய், போதி மரத்தடியில் அமர்ந்தான். இத்தனை நாட்களாக வெளியில் தேடிக்கொண்டு இருந்த விடையை தனக்குள் தேடத் தொடங்கினான். 49 நாட்கள் கடந்து ஒரு பௌர்ணமி தினத்தில் தேடலுக்கு விடை கிடைத்தது. மனிதகுலம் முழுவதுக்கும் இன்பம் தரக்கூடிய மந்திரச் சொல் ‘இக்கணத்தில் வாழு’ என்பதாக உதித்தது.

கி.மு.563-ல் நேபாள நாட்டின் கபிலவாஸ்துவில், அரசன் சுத்தாதனனுக்கும் அரசி மாயாவதிக்கும் கௌதமன் மகனாகப் பிறந்தபோதே, ஜோதிடர்கள், ‘இவன் அரசனாக அல்லது ஆன்மிக குருவாக உலகையே ஆட்சி புரிவான்’ என எதிர்காலத்தைக் கணித்துவிட்டார்கள். மகன் பேரரசனாக வேண்டும் என்பதற்காக அரண்மனைக்கு உள்ளேயே எல்லாக் கலைகளையும் கற்றுக் கொடுத்தான் சுத்தாதனன். 16 வயதிலேயே திருமணமும் முடித்து

வைத்தான். திகட்டத் திகட்ட இன்பம் அனுபவித்த சித்தார்த்தனுக்கு, ஒரே ஒருநாள் கிடைத்த வெளியுலக தரிசனம் அகக் கண்களை திறந்துவிட்டது. அரண்மனை, பதவி, செல்வாக்கு, புகழ், உணவு, உறக்கம், மனைவி, மகன், பணியாட்கள் என அத்தனையும் உதறித் தள்ளி, வெளியேறினான் சித்தார்த்தன்.

35-வது வயதில் தன்னுடைய ஐந்தே ஐந்து சீடர்களுக்கு மட்டும், தான் கண்டுணர்ந்த உண்மைகளை சாரநாத்மான் பூங்காவில் அறிவித்தார் புத்தர். ''மனித வாழ்வு என்பது இன்பம், துன்பம் இரண்டும் கலந்தது. ஆசையே துன்பத்துக்குக் காரணம். வாழ்வு சுலபமாக இருக்க வேண்டுமானால் சரியான சிந்தனை, சரியான புரிதல், சரியான பேச்சு, சரியான நடவடிக்கை, சரியான வாழ்வுமுறை, சரியான முயற்சி, சரியான பராமரிப்பு மற்றும் சரியான செயல்பாடு ஆகியவை வேண்டும்!

மனிதர்கள் நேற்றைய பயத்தினால், நாளைய வாழ்வை எண்ணி நடுங்குகிறார்கள். நேற்று நடந்தவற்றை உங்களால் மாற்ற முடியாது, நாளை நடப்பதைத் தடுக்க முடியாது. இன்றைய பொழுதில், இக்கணத்தில் வாழுங்கள்! அதுதான் எல்லா துன்பங்களுக்கும் ஒரே தீர்வு!'' என்றார் புத்த பெருமான்.

அவரது 80-வது வயதில், இரும்புக் கொல்லன் ஒருவன் ஆசையோடு கொடுத்த காளான் உணவைச் சாப்பிட்டதும், அதை உடம்பு ஏற்கவில்லை என்பதையும், உயிர் பிரியும் நேரம் வந்துவிட்டது என்பதையும் உணர்ந்துகொண்ட புத்தர், தம் பிரதம சீடர் ஆனந்தனை அழைத்து, மரத்தின் கீழே படுக்கை விரிக்கச் சொல்லி, நீட்டி நிமிர்ந்து படுத்து, ''ஆனந்தா, இப்போது நான் மரண கணத்தில் வாழப்போகிறேன்'' என்று புன்னகையோடு சொல்லிவிட்டு, அமைதியாக உயிர் துறந்தார்.

வாழ்வின் எல்லா துன்பங்களையும் தீர்த்து, புது வழி காட்டும் அவரது 'இக்கணத்தில் வாழு' என்னும் மந்திரச் சொல்லின் மகத்துவம், வாழ்வின் ஒளிவிளக்காக மனிதர்களுக்குக் காலமெல்லாம் வழிகாட்டிக் கொண்டே இருக்கும்.

## 7. ‘நீ என்ன செய்ய வேண்டும் என்பதே உன் கவலையாக இருக்கட்டும்; பிறர் என்ன நினைக்கிறார்கள் என்று யோசிப்பதல்ல!’



மத்தியப் பிரதேச மாநிலத்தில் 1891-ம் வருடம் இந்தியத் தரைப்படை ராணுவ அதிகாரி ராம்ஜியின் 14-வது மகனாகப் பிறந்தார் பீமாராவ் அம்பேத்கர். பள்ளியில் படிக்க நுழைந்தபோதுதான், முதன்முறையாக அந்த வித்தியாசத்தை உணர்ந்தார். பலகை மீது பல மாணவர்கள் அமர்ந்திருக்க, அவரையும் இன்னும் சிலரையும் மட்டும் வகுப்பின் ஒரு மூலையில் தரையில் அமர வைத்தார்கள். எல்லோரும் டிரம்மில் இருந்து டம்ளரில் மொண்டு தண்ணீர் குடிக்க, இவர்களை மட்டும் தள்ளி நிற்க வைத்தனர். யாரோ தண்ணீர் ஊற்ற, இரண்டு கைகளையும் குவித்து வாயருகே வைத்துக்கொண்டு குடிக்க வேண்டும். கீழே சிந்தியது போக, தொண்டையும் சற்று நனையும்.

ஆனாலும் பள்ளியிலேயே புத்திசாலி மாணவன் என்பதால், ஆசிரியர் ஒருநாள் அவரை அழைத்துக் கரும்பலகையில் கணக்குப் போடச் சொன்னார். குறுக்கே கிடந்த மாணவர்களின் மதிய உணவுப் பாத்திரங்களைத் தாண்டிச் சென்று கரும்பலகையில் எழுதிவிட்டுத் திரும்பியவருக்குப் பெரும் அதிர்ச்சி! தாழ்த்தப்பட்டவன் தாண்டிச் சென்றான் என்பதால், தீட்டுப் பட்டதென்று அத்தனை உணவுகளும் கீழே கொட்டப்பட்டிருந்தன.

தந்தையிடம் இதற்கெல்லாம் காரணம் கேட்டார். ‘‘உன்னுடைய வேலை இப்போது படிப்பது மட்டுமே! நீ என்ன செய்ய வேண்டும் என்பதே உன் கவலையாக இருக்கட்டும்; பிறர் என்ன நினைக்கிறார்கள் என்று யோசிப்பதல்ல!’’ என்றார் சுருக்கமாக.

பின்னாளில், பரோடா மன்னர் தந்த ஸ்காலர்ஷிப்பின் உதவியால், அந்த இளைஞர் வெளிநாடுகளுக்குச் சென்று மேற்படிப்பு படித்துத் திரும்பியதும், உயர்பதவியில் அமர்த்தப்பட்டார். அப்போதும்கூட, அவரிடம் வரவேண்டிய கோப்புகள், அவர் தாழ்த்தப்பட்டவர் என்பதால், மேலே பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவரது மேஜையில் தூக்கி வீசப்பட்டன. குடிக்கத் தண்ணீர் மறுக்கப்பட்டது. தங்குவதற்கு இடம் கிடைக்காமல், சாதியை மறைத்து ஒரு ஓட்டலில் தங்கினார். எப்படியோ விஷயம் பரவி, கும்பல் ஒன்று வந்து அவரை அடித்து உதைத்து, அங்கிருந்து வெளியேற்றியது. தான் இனி செய்ய வேண்டியது என்ன என்று சிந்தித்தார் அவர்.

பம்பாயில் ஒரு கல்லூரிப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தவர், முதல் வேலையாக ‘ஊமைகளின் தலைவன்’ என்னும் ஒரு மராத்தி நாளிதழை, தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைக் குரலாகக் கொண்டுவந்தார்.

1923-ல் தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பள்ளி, ஹாஸ்டல், நூலகம் தொடங்கினார். ‘தாழ்த்தப்பட்டவர்களுக்கான உரிமைகளை வேறு யாரும் கொடுக்க வேண்டியது இல்லை. நாமே எடுத்துக்கொள்வோம்’ என்று முழங்கினார். கோயில்கள், ஊர்ப் பொதுக்குளங்களில் தாழ்த்தப்பட்டவர்களைப் பிரித்துவைக்கக் கூடாது எனப் போராட்டக் களத்தில் குதித்தார்...

இரண்டாம் வட்டமேஜை மாநாட்டில் அம்பேத்கர் வலியுறுத்திய, தாழ்த்தப்பட்டவர்களுக்கான தனிப் பிரதிநிதித்துவ கோரிக்கையை ஆங்கிலேய அரசு ஏற்றுக்கொண்டது. ஆனால், இந்திய மக்களிடையே இது பெரும் பிரிவினையை ஏற்படுத்திவிடும் என்பதால், இந்தக் கோரிக்கையைக் கைவிட வேண்டும் என காந்திஜி உண்ணாவிரதம் தொடங்கினார். நாடெங்கும் இதற்கு ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. அம்பேத்கர் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்... ‘‘நான் என் மக்களுக்காக என்ன செய்ய வேண்டும் என்பதே என் கவலை. அடுத்தவர்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று யோசிப்பது அல்ல!’’ சொன்னதுபோலவே, தாழ்த்தப்பட்டவர்களுக்கான கூடுதல் பிரதிநிதித்துவம் கிடைத்த பிறகே, அமைதியானார் அம்பேத்கர்.


இந்திய சுதந்திரத்துக்குப் பின், இந்தியாவின் சட்ட திட்டங்களை வகுத்து, பின்னர் அதில் திருப்தியின்றி வெளியேறியபோதும், 57-வது வயதில் டாக்டர் சாரதா கபீரை இரண்டாவது மனைவியாக ஏற்றுக்கொண்டபோதும் எழுந்த விமர்சனங்களைப் பற்றி அவர் கவலைப்பட்டதே இல்லை.

அம்பேத்கர் மரணத்தைத் தழுவிய 1956-ல், தாழ்த்தப்பட்ட லட்சக்கணக்கான மக்களை இந்து மதத்தில் இருந்து புத்த மதத்துக்கு மாற்றியபோது, அவருக்கு வந்த எதிர்ப்புகள் சொல்லில் அடங்காது. அப்போதும் புன்னகையுடன் அவர் சொன்னது இதுதான்... ‘நான் என்ன செய்ய வேண்டும் என்பதே என் கவலை. பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பது அல்ல!’



RangaRakes tamilnavarasam.com

## 8. ‘இழப்பதற்கு எதுவுமில்லை!



’இங்கிலாந்து நாட்டில், உடல்நிலை சரியில்லாமல் 1883-ம் வருடம் கார்ல் மார்க்ஸ் மரணம் அடைந்தபோது, அவரது இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்கள் மொத்தமே எட்டுபேர்தான். ஆனால், இன்று உலகில் இருக்கும் மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் அவரது பொதுவுடைமைக் கொள்கையின் பின்னே நிற்கிறார்கள். இவரது காலத்துக்கு முன்பே தொழிலாளர்களுக்கு உரிமைகள் கேட்டு எத்தனையோ போராட்டங்கள், புரட்சிகள் நடந்திருந்தாலும், உழைக்கும் வர்க்கம் ஆட்சிக்கு வருவதுதான் உண்மையான புரட்சி என்ற இவரது புதிய கொள்கை, அதுவரை உலகம் கேட்டறியாதது. உரிமைகள் கேட்கவே அஞ்சி நடுங்கிக்கொண்டு இருந்த உழைக்கும் வர்க்கத்தினருக்கு, ஆட்சியைப் பிடிக்கவும் முடியும் என்ற நம்பிக்கை கொடுத்தது கார்ல் மார்க்ஸின் ‘இழப்பதற்கு எதுவுமில்லை’ என்ற மந்திரச் சொல்தான்!

ஜெர்மனியில் 1818-ம் ஆண்டு, ஒரு வழக்கறிஞரின் மகனாகப் பிறந்த மார்க்ஸ், தந்தையின் விருப்பத்துக்காகவே சட்டம் படித்தார். ஆனால், அது பிடிக்காமல் போகவே தத்துவ இயலுக்கு மாறி, பட்டம் பெற்றார். இளம்வயதிலேயே மார்க்ஸின் சிந்தனையைக் கிளறியது, ஹெகல் எனும் ஜெர்மானிய அறிஞரின் கொள்கைகள்தான். ‘எதிரெதிர் கொள்கைகள் கொண்ட சக்திகளின் போராட்டம்தான் ஒரு சமுதாயத்துக்கு முன்னேற்றம் தரும்’ என்ற ஹெகலின் சிந்தனையை அப்படியே முதலாளி வர்க்கத்துக்கும், தொழிலாளி வர்க்கத்துக்கும் பொருத்திப் பார்த்தார் மார்க்ஸ். இந்த இருவருக்கும் மோதல் ஏற்படும்போது, தொழிலாளர் வர்க்கத்தினர்தான் வெற்றி பெறுவார்கள்; காரணம், இவர்களிடம் இழப்பதற்கு எதுவும் இல்லை; எது கிடைத்தாலும், அது வெற்றிதான் என்பதை பொதுவுடைமையின் அடிப்படைத் தத்துவமாக எடுத்துக்கொண்டார்.

‘ஜெர்மன்’ என்ற நாளிதழை நண்பர்கள் சிலருடன் தொடங்கினார். ஆளும் வர்க்கத்தினரையும், முதலாளித்துவ சிந்தனைகளையும் காரசாரமாகக் கண்டித்து கட்டுரைகள் எழுதினார். பத்திரிகை தடை செய்யப்பட்டது. உடனே, பிரான்ஸ§க்குச் சென்று தொழிலாளர் வர்க்கத்தினருக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கவே, நாடு கடத்தப்பட்டு மீண்டும் ஜெர்மன் திரும்பினார். ஆனால், அங்கேயும் அவருக்குத் தடை விதிக்கப்படவே, இங்கிலாந்தில் அடைக்கலமானார். நாடு நாடாக விரட்டப்பட்டபோதும், கொள்கையில் எந்தச் சமரசமும் செய்து கொள்ளாமல் மார்க்ஸ் உறுதியாக இருந்ததற்குக் காரணம், ‘இழப்பதற்கு எதுவுமில்லை’ என்ற மந்திரச் சொல்தான்.

இன்றும் சோஷலிசக் கோட்பாடுகளின் இலக்கணமாகவும் இலக்கியமாகவும் கொண்டாடப்படும் உலகப் புகழ்பெற்ற பொதுவுடைமை தத்துவ அறிக்கையை 1847–ல் ஐரோப்பிய கம்யூனிஸ்ட்கள் மாநாட்டில் வெளியிட்டார் மார்க்ஸ். ‘உழுபவர்களுக்கே நிலம் சொந்தம்; உற்பத்தி, போக்குவரத்து, வங்கி போன்றவற்றை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும்’ போன்ற திட்டங்களை அறிக்கையாகச் சமர்ப்பித்தபோது, தொழிலாளர் வர்க்கம் விண்ணதிர வரவேற்றது. மார்க்ஸின் அறிக்கைகள் அச்சடிக்கப்பட்டு உலகெங்கும் விநியோகிக்கப்பட, பிரான்ஸ், ஜெர்மனியில் தொழிலாளர்கள் புரட்சியில் ஈடுபட்டார்கள். ‘இழப்பதற்கு எதுவுமில்லை’ என்பது உழைக்கும் வர்க்கத்தின் மந்திரச் சொல்லானது.

தொழிலாளி வர்க்கத்தின் பைபிள் எனப் போற்றப்படும் ‘மூலதனம்’ நூலின் முதல் பகுதியினை 1867–ல் வெளியிட்டார் மார்க்ஸ். அதன் பின்னரும் ஓய்வு ஒழிச்சல் இன்றி, ‘மூலதனம்’ அடுத்த பாகங்களை எழுதத் தொடங்கினார். பெயரும் புகழும் சம்பாதித்த அளவுக்குப் பணம் சம்பாதிக்க முடியாமல், கடைசிவரை வறுமையின் பிடியிலேயே வாழ்ந்த மார்க்ஸ், மூலதனம் நூலை முடிக்காமலே 1883–ல் நோய்வாய்ப்பட்டு இறந்து போனார்.

கார்ல் மார்க்ஸ் எழுப்பிய ‘இழப்பதற்கு எதுவுமில்லை’ என்ற மந்திரச் சொல்லை வைத்துத்தான் லெனின் ருஷ்யப்புரட்சியை உண்டாக்கினார். உலகின் பல்வேறு நாடுகளும் கம்யூனிஸத்துக்கு மாறின. இன்றும் தனிமனித புரட்சியும் சமுதாயப் புரட்சியும் எங்கெல்லாம் நடக்கிறதோ, அங்கெல்லாம் ஆணிவேராக இருக்கும் மந்திரச் சொல் அது!



RangaRakes tamilnavarasam.com

## 9. ‘துணிந்தவனுக்குத் தோல்வியில்லை!’



நட்புக்கரம் நீட்டி வரவழைத்த ஔரங்கசீப், நயவஞ்சகமாகத் தன்னையும் தன் மகனையும் கைதுசெய்து சிறையில் அடைப்பான் என்று கொஞ்சமும் எதிர்பார்த்திராத மராட்டிய மாவீரன் சிவாஜி, அடிபட்ட புலி போல ஆக்ரா சிறையில் உறுமிக்கொண்டு இருந்தார்.

மகன் சம்பாஜியிடம், ‘‘ஒவ்வொரு வியாழனும் ஏராளமான பழங்கள் வைத்து பூஜித்து, அதைத் தானம் செய்வது வழக்கம் என்று சிறை அதிகாரிகளிடம் சொல்லி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்’’ என்றார்.

‘‘தந்தையே! நாம் பெரும் ஆபத்தில் இருக்கிறோம். இப்போது எதற்காக பூஜை?’’ என்று மகன் கேட்க, ‘‘மகனே! நீ அச்சத்தின் பிடியில் அகப்பட்டுவிட்டாய் என நினைக்கிறேன். அச்சப்பட்டவர்கள் வெற்றி பெற்றதாகச் சரித்திரம் கிடையாது. நான் இங்கிருந்து தப்பிக்கத்தான் வழி சொல்கிறேன்’’ என்றார் சிவாஜி.

‘‘முகலாயர்களிடம் இருந்து தப்புவதா... அது முடியுமா?’’ என மீண்டும் மகன் சந்தேகத்துடன் கேள்வி எழுப்ப, ‘‘துணிந்தவனுக்குத் தோல்வியில்லை’’ என்றார் சிவாஜி உறுதியோடு!

அதன்பின், சிறைக்குப் பழக்கூடைகள் வருவதும் போவதும் வழக்கமாயிற்று. அந்தக் கூடைக்குள் அமர்ந்துதான் சிவாஜியும் சம்பாஜியும் ஒருநாள் தப்பித்தார்கள்.

பூனாவுக்கு அருகே, 1630-ல் சிவானி கோட்டையில் பிறந்தார் சிவாஜி. தந்தை ஷாஜி, பூனா சுல்தானின் படைப்பிரிவில் மேஜராகப் பணியாற்றி வந்ததால், தாய் ஜீஜாபாய் மற்றும் தளபதி ஷாயாஜியின் மேற்பார்வையில் வளர்ந்தார் சிவாஜி. சிறு வயதிலேயே குதிரை ஏற்றம், வாட் போர், வில் வித்தை, குஸ்தி போன்ற வீர தீர விளையாட்டுகளில் அதிக ஆர்வம் காட்டினார்.

இந்துக்களை அடக்கி ஆண்ட முகலாய ஆட்சியின் மீது அவருக்கு இயல்பாகவே வெறுப்பு இருந்தது. தாய் ஜீஜாபாய் சொன்ன வீரக் கதைகளும், சுவாமி ராமதாசரின் ஆசீர்வாதமும், இந்து சாம்ராஜ்யம் நிறுவ சிவாஜிக்கு ஆர்வமும் ஊக்கமும் தந்தன. ‘‘மாபெரும் படை கொண்ட முகலாயர்களை என்னால் வெல்ல முடியுமா?’’ என்று சிவாஜி கேட்டபோது, அவரது தாயும், சுவாமி ராமதாசரும் ஒரு சேரச் சொன்ன பதில்... ‘துணிந்தவனுக்குத் தோல்வியில்லை’.

பூனாவுக்கு அருகே மலைகளில் வசித்து வந்த ‘மாவலி’ மக்களிடமிருந்து இளைஞர்களைத் திரட்டி, ‘கொரில்லா’ படை அமைத்தார் சிவாஜி. முகலாயர்களின் பிடியில் இருந்த ரோஹிதேசுவரர் ஆலயத்தையும், தோரான் கோட்டையையும் கைப்பற்றினார். சிவாஜியின் இந்த வெற்றி, இந்துக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தவே, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அவரது படையில் இணைந்தார்கள். அதன்பின் குபா கோட்டை, இந்திரபுரி, ஜாவ்லி என கிட்டத்தட்ட முந்நூறு கோட்டைகள் சிவாஜி வசமாயின. ஒவ்வொரு முறையும் போருக்குப் புறப்படும் முன், தனது படையினரிடம், ‘‘தோல்வியில்லை, தோல்வியில்லை... துணிந்தவனுக்குத் தோல்வியில்லை’’ என்று உற்சாகக் குரல் கொடுப்பார் சிவாஜி. துணிந்து கிளம்பும் அந்தப் படை வெற்றி வாகை சூடி வரும்.

ஒருமுறை, சிவாஜியின் கோட்டை முன் பெரும் கடலென முகலாயர் படை நின்றது. போரைத் தவிர்க்க விரும்பினால், சிவாஜி நிராயுதபாணியாக தன்னிடம் பேச்சு வார்த்தை நடத்த வரவேண்டும் என அழைப்பு விடுத்தான் தளபதி அப்சல்கான். தனிமையில் போகவேண்டாம் என அனைவரும் தடுத்தபோதும், ‘‘துணிந்தவனுக்குத் தோல்வியில்லை’’ எனப் புன்னகைத்தவாறு பகைவனைத் தேடிப் புறப்பட்டார் சிவாஜி.

ஆயுதமின்றித் தனிமையில் வந்த சிவாஜியைப் பார்த்துக் கேலியாகச் சிரித்த அப்சல்கான், ‘‘உன்னிடம் சமாதானம் பேசவா இத்தனை படையுடன் வந்திருக்கிறேன்’’ என்றபடி சரேலென தன் உடைவாளை உருவி, சிவாஜியின் மார்பில் செலுத்தினான். உள்ளே கவசம் அணிந்திருந்த சிவாஜி, கண் இமைக்கும் நேரத்தில் அப்சல் மீது பாய்ந்து, தன் கைகளில் மறைத்து வைத்திருந்த விஷம் தோய்த்த புலி நகங்களால் அவனைக் கீறிக் கொன்று போட்டார். தலைவன் இல்லாத படைகளைப் பந்தாடியது மராட்டிய சேனை. மாபெரும் வீரனாக, ‘சத்ரபதி’ என முடிசூடினார் சிவாஜி.

1680-ம் ஆண்டு மரணமடையும் வரையில், சிவாஜியைத் தோல்வி என்பது நெருங்கவே இல்லை. காரணம், ‘துணிந்தவனுக்குத் தோல்வியில்லை’ என்கிற அவரது தாரக மந்திரம்தான்.

## 10. ‘எது வசதியானதோ அதைச் செய்யாதே! எது சரியானதோ அதைச் செய்!’



பல சிற்றரசர்களால் ஆளப்பட்டு, பல்வேறு நாடாகச் சிதறிக்கிடந்த சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சீனம் அது. பிரபுக்களின் ஆதிக்கத்தினால் மக்கள் சித்ரவதைகளுக்கு ஆளாகி, வரி கொடுக்க முடியாமல் வறுமையில் உழன்றுகொண்டு இருந்தார்கள். அந்தச் சமயத்தில் மக்களின் மனசாட்சியாக மாறி, ‘ஒரு நல்ல அரசாங்கம் எப்படி நடக்கவேண்டும்’ என்பது பற்றி, தனது கருத்துக்களை பகிரங்கமாக வெளியிட்டார் கன்ஃபூசியஸ்.

‘‘அதிக வரியும், அதிகத் தண்டனைகளும் கொடுங்கோல் ஆட்சியின் இலக்கணங்கள். அரசன் என்பவன் தகுதியினால் தேர்வு செய்யப்பட வேண்டுமே தவிர, பரம்பரை மட்டுமே தகுதியாக இருக்கக்கூடாது. மக்களுக்கு மகிழ்ச்சியும் நல்வாழ்வும் அளிக்க முடியாத அரசாங்கம், ஆட்சியில் நீடிக்க உரிமை இல்லை’’ என்று உரக்கக் குரல் கொடுத்தார். மக்கள் கூட்டம் கூட்டமாக அவர் பேச்சைக் கேட்க அணி திரள, அரசன் அதிர்ந்து போனான்.

கன்ஃபூசியஸைக் கைது செய்தால் அசம்பாவிதம் நேரலாம் என யோசித்த அரசன், புத்திசாலித்தனமாக அவருக்கு ‘சட்டத்துறை அமைச்சர்’ ஒரு என ஒரு பதவி கொடுத்து நாட்டின் சட்டங்களை மாற்றும்படி கேட்டான். வேலைக்கு ஆட்கள், பெரும் மாளிகை, கை நிறையச் சம்பளம் எல்லாம் கொடுக்கப்பட்டது.

மக்கள் நலனுக்காக புதிது புதிதாகச் சட்டங்களை இயற்றி மன்னனிடம் ஒப்படைத்தார் கன்ஃபூசியஸ். ஆனால், எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. சில வருடங்களிலேயே, இந்தப் பதவியினால் ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை என்பதைப் புரிந்துகொண்டு, பதவியில் இருந்து விலகிக் கொள்வதாக மன்னரிடம் சொன்னார்.

‘‘சீமான் போல வாழ்வதைவிட்டு, ஏன் பிச்சைக்காரனாக வீதியில் திரிய விரும்புகிறீர்கள்’’ எனக் கோபத்துடன் கேட்டார் மன்னர்.

‘‘எது வசதியானதோ அதைச் செய்யாதே! எது சரியானதோ அதைச் செய்! என என் மனம் தொந்தரவு செய்கிறது’’ என்று சொல்லிவிட்டு வெளியேறினார் கன்ஃபூசியஸ்.


கிறிஸ்துவுக்கு முன், 551-ம் வருடம் செப்டம்பர் 28-ம் தேதி கன்ஃபூசியஸ் பிறந்தபோது, அவரது தந்தையின் வயது 70. தாய்க்கு வயது 15. பிறந்த மூன்றாண்டுகளில் தந்தையை இழந்தார். பழைய இலக்கியங்கள், அரசியல் சட்டங்கள், மதக்கோட்பாடுகள் என எல்லாவற்றையும் படித்து, அவற்றைப் பற்றிச் சிந்திப்பதும், விவாதிப்பதும் கன்ஃபூசியஸின் தனிப்பெரும் குணமாக வளர்ந்தது. இளைஞர் ஆனதும், ஆர்வம் உள்ள மாணவர்களுக்குப் பாடம் சொல்லித் தந்தார். மதங்கள் எதுவும் மக்கள் துன்பத்துக்குத் தீர்வு சொல்லவில்லை என்பதால், அவற்றை புறக்கணித்தார்.

அடுத்த பன்னிரண்டு ஆண்டுகள், சீனாவில் உள்ள பல்வேறு நாடுகளுக்குப் பயணம் செய்து, மக்கள் மனதில் புரட்சிக் கருத்துகளை விதைத்தார். பல நாடுகளின் அரசுகள் அவரைத் தங்கள் எல்லைக்கோட்டுக்குள்ளேயே அனுமதிக்காமல் விரட்டி அடித்தன.

‘ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனிடமும் தன்மானம், பெருந்தன்மை, கபடமின்மை, உண்மையாக இருத்தல், அன்பு எனும் ஐந்து குணங்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் தனி மனிதன் இன்பமாக இருக்க முடியும். தனி மனிதன் நிம்மதியாக இருந்தால் நாடும் சிறப்பாக இருக்கும்’ என மனிதர்களின் துன்பங்களுக்குத் தீர்வு சொன்னார் கன்ஃபூசியஸ். அதேபோல, வெற்றிபெற்ற மனிதனாக மாறுவதற்கும் அவர் வழி சொன்னார். ‘மனிதர்கள் இயல்பாகவே எளிதான செயல்களைச் செய்யவே ஆசைப்படுகிறார்கள். அது சரியல்ல. வெற்றி பெறவேண்டுமானால், எது வசதியானதோ அதைச் செய்யாதீர்கள்; எது சரியானதோ அதைச் செய்யுங்கள்!’ என்றார்.

அவர் வாழ்வினை மாற்றிய அதே மந்திரச் சொல்தான், சீனா முழுவதும் மதம், சமுதாயம் மற்றும் அரசியலில் பெரும் மாற்றங்கள் உண்டாக்கவும் காரணமாக இருந்தது.

## 11.எதையுமே நீ காதலுடன் செய். வெற்றி நிச்சயம்!



''வானத்தில் ஏணி போட்டு ஏறி, நிறைய புதிர்களை விடுவிக்க விரும்புகிறேன் யாஸ்மின்'' என்று உமர்கயாம் சொன்னபோது, அவனுக்கு வயது 16. யாஸ்மின் அவன் கனவுகளைக் காதலுடன் ரசித்தாள். ''ஆனால், நீ பேசுவதே கவிதைபோல் அழகாக இருக்கிறதே... பேசாமல் நீ ஏன் கவிஞனாகக் கூடாது?'' என்று கேட்டாள்.

''கவிதைகளைவிட எனக்குக் கணிதத்திலும், வான ஆராய்ச்சியிலும்தான் விருப்பம் அதிகமாக இருக்கிறது. இப்போதைய வானசாஸ்திர புத்தகங்கள் எல்லாம் தப்பும் தவறுமாகவே இருக்கின்றன. எல்லாவற்றையும் மாற்றவேண்டும் என்று பார்க்கிறேன். என்னால் முடியுமா யாஸ்மி?''

''அல்லா மீது ஆணையாகச் சொல்கிறேன்... என் மீது காதலுடன் கவிதை எழுதுவதுபோல் எதையுமே நீ காதலுடன் செய். வெற்றி நிச்சயம்!'' என்று உமரின் கைப் பிடித்து ஊக்கம் தந்தாள் யாஸ்மின். இந்த மந்திரச் சொல்தான், கவிதைகள் எழுத மட்டுமல்ல... பல்வேறு துறைகளில் உமர் கயாம் சாதனைகள் செய்யவும் காரணமாக இருந்தது.

பாரசீக நாட்டில், அதாவது இன்றைய ஈரானில், கி.பி. 1040-ல், கூடாரம் தைப்பவரின் மகனாக பிறந்த உமர்கயாமுக்கு ஜோதிடம், வானசாஸ்திரம், கணிதம் போன்றவற்றில் அதிக ஆர்வம் இருந்தது.

ஜோதிடத்தை அவன் அரை குறையாக அறிந்திருந்த நேரத்தில், போர் மூண்டது. ''இந்தப் போர் இரண்டே நாளில் முடிவடையும். நம் படை அமோக வெற்றிபெறும். ஆனால் நம் சுல்தானும், நமது எதிரியான ரோமானியப் பேரரசரும் ஒரே நேரத்தில் மரணம் அடைவார்கள்'' என்று படைக்குத் தலைமை தாங்கிய இளவரசனுக்கு நட்சத்திரம் பார்த்துப் பலன் சொன்னான் உமர்.

அப்படியே நடந்தது. எதிரிநாட்டு அரசன் ரோமானஸ் சிறைப்பிடிக்கப்பட்டான். அரசவையில் ரோமானஸ், சுல்தானுக்கு மரியாதை கொடுக்காமல் அகம்பாவமாகப் பேச, அவனை வெட்டிக் கொல்ல முயற்சித்த சுல்தானை, அருகே இருந்த காவலனின் வாளை உருவிக் கொன்றான் ரோமானஸ். அடுத்த கணமே காவலர்களால் அவன் தலையும் துண்டிக்கப்பட்டது.

இளவரசன் அரசனானதும், உமரை தேடிப் பிடித்து, பதவி கொடுத்தான். உமர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவனது வானவியல் ஆராய்ச்சிக்காக ஒரு பெரும் கோட்டையும், பொன்னும், பொருளும், வேலைக்கு ஆட்களும், மாணவர்களும், பல்வேறு ஆராய்ச்சி நூல்களும் கிடைக்கச் செய்தான்.

சந்திரனின் பிறைகளை வைத்து, வருடத்துக்கு 354 நாட்கள் என்று கணித்திருந்ததுதான் அதுவரை நடைமுறையில் இருந்தது. ஆனால், அது சரியான வருடக் கணக்கு அல்ல என்று உறுதியாக நம்பிய உமர்கயாம், சூரியனை ஆராய்ந்து, ஒரு வருடத்துக்கு 365 நாட்கள், 5 மணி, 8 நிமிடம், 55 விநாடி எனத் துல்லியமாகக் கண்டுபிடித்தான்.

அதேபோல், ‘பூமி நிலையாக இருக்கிறது. அதனை நட்சத்திரங்களும் சூரியனும் சுற்றி வரும்படி இறைவன் படைத்திருக்கிறார்’ என்ற மதக் கருத்தினை, விஞ்ஞான ரீதியாக அது சாத்தியமில்லை என மறுத்தான். ஆனால், அவன் மதத் துவேஷம் செய்வதாக நினைத்த மக்கள் பெரும் கூட்டமாக வந்து, அவனது ஆராய்ச்சி சாலையை தீயிட்டுப் பொசுக்க, உயிர்தப்பி நாடோடியாக வெளியேறினான் உமர்.

காதலி யாஸ்மி¬னை அடையமுடியாமல், மனைவி ஆயிஷாவையும் பின்னர் பிரிய நேர்ந்ததும், கவிதையையும் போதையையும் காதலிக்கத் தொடங்கினான் உமர். அதன்பின் அவன் எழுதிய கவிதைகள், மது இல்லாமலே எவரையும் மயங்கச் செய்பவை.

கவிதை, ஜோதிடம், கணிதம், வானவியல் என அத்தனைத் துறைகளிலும் உமர் வெற்றி பெறக் காரணம், அவன் எதையுமே காதலுடன் செய்ததுதான்!

## 12. மனிதனுக்குத் தேவை மாற்றமல்ல; விழிப்பு உணர்வே!



நெருக்கடி நிலையை இந்தியாவில் அறிவித்திருந்த இந்திராகாந்தி, ஆலோசனைக்காக தத்துவ மேதை ஜே.கிருஷ்ணமூர்த்தியிடம் வந்திருந்தார்.

''நான் ஒரு புலியின் மீது ஏறி அமர்ந்துவிட்டேன். இறங்க முடியாமல் தவிக்கிறேன்'' என்றார் இந்திரா.

''புலியிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் அறிந்திருப்பீர்களே..?'' என்றார் ஜே.கே.

''அப்படியானால், என்னை நான் மாற்றிக்கொள்ளத்தான் வேண்டுமா?'' என்று இந்திரா கேட்க,

''மாறுதல் என்பது தாற்காலிக சந்தோஷம் தரலாம். ஆனால், அதுவே தீர்வாகாது. மனிதனுக்குத் தேவை மாற்றமல்ல; விழிப்பு உணர்வே!'' என்றார் ஜே.கே.

அதன் பின்னர், நெருக்கடிநிலை விலக்கப்பட்டது. ஆட்சி மாற்றம் நடந்து, பல்வேறு வழக்குகளில் கைதாகி, இந்திரா ஜெயிலுக்குப் போனார். மீண்டும் அடுத்த தேர்தலில் வெற்றி கிடைத்தது. அந்தச் சமயத்தில், ''நான் ஜே.கிருஷ்ணமூர்த்தியின் வார்த்தைகளைக் கேட்டு விழிப்பு உணர்வு அடைந்து, சோதனைகளைத் தாங்கிக்கொள்வது என முடிவு எடுத்தேன். அதன் பலனாகவே, மீண்டும் எனக்கு வெற்றி கிட்டியிருக்கிறது'' என்று மனம் திறந்து சொன்னார் இந்திரா.

ஆந்திர மாநிலம் மதனப்பள்ளியில் 1895-ல், ஒரு தாசில்தாரின் எட்டாவது குழந்தையாகப் பிறந்தார் 'ஜிட்டு' கிருஷ்ணமூர்த்தி. அவரது பத்தாவது வயதில் தாயார் மரணம் அடையவே, தந்தை நாராயணய்யா சென்னைக்குக் குடி பெயர்ந்து, அடையாறில் அப்போது அன்னிபெசன்ட் அம்மையாரின் தலைமையில் இயங்கி வந்த பிரம்ம ஞான சபையில் உதவிச் செயலாளராக வேலைக்குச் சேர்ந்தார்.

கிருஷ்ணமூர்த்தியும் அவரது தம்பி நித்யாவும் சபைக்குத் தத்துக் கொடுக்கப்பட்டார்கள். அவர்களுக்கு ஆங்கிலேய முறைப்படி கல்வியும், பல்வேறு நாடுகளில் சிறப்புப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

குண்டலினி யோக முறையைக் கற்றுத் தேர்ந்தார் கிருஷ்ணமூர்த்தி. 1925-ம் ஆண்டு தம்பி நித்யாவின் மரணம், கிருஷ்ணமூர்த்திக்கு முழுமையான விழிப்பு உணர்வைக் கொடுத்தது. 'நெருங்கியவரின் மரணத்தின்போது நாம் கண்ணீர் வடிப்பது, உண்மையில் இறந்தவருக்காக அல்ல; நாம் முன்பு போல் வலிமையாக இயங்க முடியாது, அவர் மூலம் நமக்கு இனி சந்தோஷமோ, உதவிகளோ கிடைக்காது என்பதாலேயே அழுகிறோம்' என்பதைக் கண்டுகொண்டார்.

1929-ம் வருடம் 'அனைத்துலக ஆசான்' என்ற பட்டத்தையும், கோடிக்கணக்கான டாலர் மதிப்புள்ள சொத்துக்களையும் தூக்கி எறிந்த கிருஷ்ண மூர்த்தி, ''நான் யாருக்கும் குருவாக இருக்க விரும்பவில்லை. எந்த அமைப்பிலும் கட்டுப்படாமல் சுதந்திரமாக இருந்தால்தான், மக்களுக்குச் சுதந்திரம் பற்றி என்னால் விளக்கிச் சொல்ல முடியும்'' என்றார்.

''கடவுள்கள், கோயில்கள், புனித நூல்கள், சாதியம், மொழிப்பற்று, தேசப்பற்று... எல்லாமே மனித ஒருமைப்பாட்டுக்கு எதிரானவை. மத மாற்றம், கொள்கை மாற்றம் போன்றவை மனித குலத்துக்கு எவ்வித நன்மையும் செய்யாது. மனிதருக்குத் தேவை மாற்றமல்ல; விழிப்பு உணர்வே!'' என்று தனது 90-வது வயதில் மரணமடையும் வரை, உலகெங்கும் சுற்றிப் போதித்தார் ஜே.கே.

ஜே.கே-வைப் புரிந்துகொள்ளவும், பின்பற்றி நடக்கவும் மிகக் கடினமானவர் என விமர்சனங்கள் உண்டு. ஆனால், 'மனிதருக்குத் தேவை மாற்றமல்ல; விழிப்பு உணர்வே!' என்ற அவரது மந்திரச் சொல்லுக்கு இன்றுவரை மாற்றுக் கருத்து இல்லை.

## 13.‘இரண்டாவதாக வருபவனை, உலகம் ஒருபோதும் ஞாபகம் வைத்துக்கொள்வதில்லை!’



உலக ஹெவிவெயிட் குத்துச்சண்டைப் போட்டியில், 1964-ம் வருடம், சாம்பியன் லிஸ்டனை எதிர்த்து நின்ற 22 வயது கறுப்பு இளைஞன் முகமது அலியைப் பார்வையாளர்கள் பரிதாபமாகப் பார்த்தார்கள். போட்டியின் முதல் இரண்டு சுற்றுகள் சாதாரணமாகவே நடந்தன. மூன்றாவது சுற்றில் முகமது அலியின் குத்து, லிஸ்டனின் புருவத்தைப் பதம் பார்த்தது.

காயத்துக்கு மருந்து போட்டு வந்த லிஸ்டன் ஆக்ரோஷமாக குத்துக்களை விட்டார். அவரது புருவத்தில் இருந்த மருந்து தெறித்து, முகமது அலியின் கண்ணுக்குள் விழுந்துவிட, பெரும் உறுத்தலோடு அடுத்த இரண்டு சுற்று சண்டை போட்டார் அலி. ஆறாவது சுற்றின்போது உறுத்தல் நீங்க, அதிரடி தாக்குதலில் இறங்கினார். அந்தச் சுற்று முடிந்த பின்புதான், தன் கைமூட்டு இடம் பெயர்ந்திருப்பது லிஸ்டனுக்குப் புரிந்தது. அவர் தொடர்ந்து போட்டியில் பங்கேற்க முடியாமல் போகவே முகமது அலி உலக சாம்பியன் ஆனார்.

நிருபர்கள், ‘‘இந்த வெற்றியை எதிர்பார்த்தீர்களா?’’ எனக் கேட்க, உற்சாகமாகப் பேசினார் அலி. ‘‘இரண்டாவதாக வருபவனை, உலகம் ஒருபோதும் ஞாபகம் வைத்துக்கொள்வதில்லை என்று எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார் என்னுடைய கோச் மிஸ்டர் ஃபிரட்ஸ் டோனர். அதனால், முதல் இடம் தவிர எதையும் எப்போதும் நான் ஏற்றுக் கொள்வதில்லை’’ என்றார் அலி தன்னம்பிக்கையுடன். ஆம், கலந்துகொண்ட போட்டிகள் எல்லாவற்றிலும் வெற்றியே பெற்று, இறுதிவரை முதல்வனாகவே திகழ்ந்த முகமது அலிக்கு ஊக்கம் தந்த மந்திரச் சொல் அதுதான்.

அமெரிக்காவின் லூயிஸ்வில்லி நகரத்தில் (1942), ஒரு பியானோ கலைஞரின் மகனாகப் பிறந்தார் முகமது அலி. இயற்பெயர், காஸியஸ் மெர்ஷிலிஸ் கிளைவ். 12-வது வயதில் பாக்ஸிங் கற்றுக் கொள்ளத் துவங்கினார். அவருடைய கோச் ஃபிரட்ஸ் டோனர், ‘‘வண்ணத்துப் பூச்சியைப் போல பறந்து, தேனீயைப் போலத் தாக்கு’’ என்று ஒரு புதிய ஸ்டைலை கற்றுக் கொடுத்தார்.

18-வது வயதில் இத்தாலியில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்று, தங்கப்பதக்கத்துடன் தாய்நாடு திரும்பிய காஸியஸ், அந்த சந்தோஷத்தைக் கொண்டாட, நண்பர்களுடன் ஒரு பெரிய ஓட்டலுக்குள் நுழைய, அவரைத் தடுத்து, ''கறுப்பர்களுக்கு இங்கு எதுவும் வழங்குவதில்லை. வெளியே செல்லுங்கள்'' என்றார் ஓட்டல் மேலாளர்.

''நான், நம் நாட்டுக்காக இத்தாலியில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் தங்கம் ஜெயித்திருக்கிறேன்'' என்று காஸியஸ் சொன்ன பிறகும், மேலாளரிடம் எந்த மாற்றமும் இல்லை. உடனே கடும் ஆத்திரத்தில் தங்கப்பதக்கத்தை ஆற்றில் வீசி எறிந்தார். சொந்த நாட்டில் அந்நியராகக் கேவலப்படுவதாக உணரவே, இஸ்லாம் மதத்துக்கு மாறி 'முகமது அலி' எனப் பெயரை மாற்றிக்கொண்டு, கடுமையாகப் பயிற்சிகள் செய்து, உலக சாம்பியன் பட்டத்தை எட்டிப் பிடித்தார். அதன்பின், அவருக்குப் பல தடைக் கற்கள் வந்தபோதும், சளைக்கவில்லை. தொடர்ந்து வெற்றிகளைக் குவித்தார்!

1981-ம் வருடம் அவரை அல்ஸீமர் நோய் கடுமையாகத் தாக்கியது. அதன்பின்னர், கறுப்பர்களின் உரிமைகளுக்காக அரசியலில் ஈடுபட்டதுடன், சமூக சேவையிலும் இறங்கினார். பள்ளி விழாக்களில் கலந்துகொண்டு குழந்தைகளுக்கு உற்சாக விதை தூவுவதை மிகவும் விரும்புவார்.

''சூரியனுக்கு ஒரு காரியம் இருக்கிறது; சந்திரனுக்கு ஒரு காரியம் இருக்கிறது; ஏன், மிருகங்களுக்கும்கூட செய்வதற்கு என ஒரு காரியம் இருக்கிறது. அதுபோல ஒவ்வொரு மனிதனும் தனக்குரிய காரியம் எது என்பதைக் கண்டறிந்து அதில் முழுமையாக ஈடுபட்டு, முதல்வனாக வெற்றி பெற வேண்டும். ஏனென்றால், இரண்டாவதாக வருபவனை, உலகம் ஒருபோதும் ஞாபகம் வைத்துக் கொள்வதில்லை!'' என்பதுதான் அவர் தூவிய உற்சாக விதைகளில் முக்கிய விதை!

## 14.'எதுவுமே என்னுடையது அல்ல!'



மகாவீரரின் உடலில் மூச்சு சன்னமாக ஓடிக்கொண்டு இருந்தது. வயது 72. அமாவாசை இரவில், உடலில் ஒரு கோவணம்கூட இல்லாமல் கரடுமுரடான பாறையில் படுத்துக்கிடந்தவரைச் சுற்றி சீடர்கள் கனத்த மனதுடன் நின்றனர். மகாவீரரின் உடலில் சிறு அசைவு ஏற்பட்டு, கண்கள் திறப்பதைக் கண்டதும், ''பகவானே, இரண்டு நாளாக உணவு எடுத்துக்கொள்ளவில்லை. இரவுவேளை என்பதால், உணவாக வேண்டாம்... மருந்தாக நினைத்துப் பழமும் தண்ணீரும் அருந்துங்கள். நீங்கள் படும் வேதனையை எங்களால் தாங்க முடியவில்லை!'' என இறைஞ்சினார்கள்.

''இந்த வேதனை என்னுடையது அல்ல. இந்த உடல் என்னுடையது அல்ல. ஏன், எதுவுமே என்னுடையது அல்ல'' என்று சொல்லிக் கண்களை இறுதியாக மூடிக்கொண்டார் மகாவீரர்.

இன்றைய பீகார் மாநிலம் முஜபர்பூர் மாவட்டத்தில், ஈஸாட் எனப்படும் ஊரில், கி.மு. 599-ம் ஆண்டு சித்தார்த்தன் --- திரிசலை என்ற அரச தம்பதியரின் மூன்றாவது மகனாகப் பிறந்தார் வர்த்தமானன். கல்வி, விளையாட்டு, சண்டைப்பயிற்சி, வேட்டையாடுதல் என எதிலுமே ஆர்வமின்றி இருந்தார்.

அவரது 30-வது வயதில் நிகழ்ந்த பெற்றோரின் மரணம், அவரது இயல்பு வாழ்வை பாதித்து, வாழ்வின் பாதையை மாற்றியது. அரண்மனை, மனைவி, குழந்தை என அனைத்தையும் துறந்து, யோகநிலை மூலம் மனித வாழ்வின் ஆழத்தைக் கண்டறியத் தொடங்கினார். அடுத்த 12 ஆண்டுகள் கிடைத்ததை உண்டு, கண்ட இடங்களில் உறங்கி, அகிம்சை வழியில் கடுமையான யோகத்தின் மூலம் பல உண்மைகளை அறிந்தார். பின்னர், உபதேசங்கள் செய்யத் தொடங்கினார். இவர்தான் இறுதியான 24-வது தீர்த்தங்கரர் என மக்கள் கண்டுகொண்டு, 'மகாவீரர்' என அழைக்கத் தொடங்கினார்கள்.

உயிர்ப் பலிகளும், சாதி-மதக் கொடுமைகளும் நிறைந்திருந்த காலத்தில், தான் கண்டறிந்த உண்மைகள் மூலம் மூடநம்பிக்கைகளை உடைத்தெறிந்து, மனித வாழ்வுக்குப் புதிய நியதிகளை வகுத்தார். அகிம்சையை வலியுறுத்தினார்.

‘மனிதர்கள் துன்பம் இன்றி வாழ என்ன செய்ய வேண்டும்?’ என்ற கேள்விக்கு அதுவரை எவரும் சொல்லாத புதுமையான கருத்தைச் சொன்னார். ‘‘உங்களுக்கு எதுவெல்லாம் தேவை எனச் சேர்த்து வைக்கிறீர்களோ, அவையெல்லாம்தான் துன்பத்தைத் தருகின்றன. எதுவுமே என்னுடையது அல்ல; எதுவுமே எனக்குத் தேவையும் அல்ல என்ற எண்ணம் தோன்றிவிட்டால், துன்பம் உங்களை நெருங்காது. அதோ, அந்தப் பறவை போல வாழுங்கள். வாழ்ந்த தடயம் இன்றி போய்ச் சேருங்கள்’’ என்றார்.

‘அப்படியானால், வெற்றிபெற வேண்டும். சாதிக்க வேண்டும் என்பதெல்லாம் வீண் முயற்சிகளா?’ என அவரிடம் கேட்கப்பட்டது.

‘‘சாதிப்பதும் வெற்றிபெறுவதும் உங்கள் கடமையாக நினைத்தால் செய்யுங்கள். ஆனால், அதில் கிடைக்கும் வெற்றி, புகழ், செல்வம் போன்றவற்றில் மயங்கிவிடாதீர்கள். எதுவும் என்னுடையது அல்ல என்ற எண்ணத்தோடு வாழுங்கள்’’ என்றார்.

கண்ணுக்குத் தெரியாத சின்னஞ்சிறு கிருமிகளுக்குத் தீங்கு நேரலாம் என்பதால் இரவு நேரங்களில் எதுவும் சாப்பிடக்கூடாது, தலை முடியைக்கூட பிடுங்கி எடுக்க வேண்டுமே தவிர, மழிக்கக்கூடாது போன்ற மகாவீரரின் பல கடுமையான வழிமுறைகளை மக்கள் கடைப்பிடிக்கத் திணறினார்கள்.

‘கடவுள் என படைத்தவன் யாரும் கிடையாது; ஆனால், ஆத்மா உண்டு. முற்பிறவி உண்டு’ போன்ற தீவிரமான அவரது கருத்துக்கள் சாமான்யர்களுக்குப் புரியவில்லை.

ஆனால், அவரது மதக்கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள்கூட, ‘எதுவும் என்னுடையது அல்ல’ என்ற அவரது மந்திரச் சொல்லை மறுப்பதும் இல்லை; மறப்பதும் இல்லை!

## 15.'உன் தகுதியை நீயே உரக்கச் சொல். பிறருக்காகக் காத்திருக்காதே!'



கி.மு. 75-ம் வருடம். சட்ட திட்டங்களில் நிபுணத்துவம் பெறுவதற்காக, கிரேக்க நாட்டுக்கு கடல் வழிப் பயணமானார் 25 வயது இளைஞரான ஜூலியஸ் சீஸர். எதிர்பாராதவிதமாக கப்பலில் இருந்த அனைவரும் கடற்கொள்ளையர்களால் பிடிக்கப்பட்டார்கள். '20 தங்கக் காசுகள் கொடுத்தால், உங்கள் நபரை விடுதலை செய்கிறோம்' என ஒவ்வொருவரின் நாட்டுக்கும் தனித்தனியாகத் தகவல் அனுப்பினார்கள். உடனே சீஸர் கோபமாகி, ''என் விலை 20 தங்கக் காசுகள்தானா?! என்னைக் கேவலப்படுத்தாதீர்கள். 50 தங்கக் காசுகளாவது கேளுங்கள்'' என்றார் தோரணையோடு. கொள்ளையர்கள் அலட்சியமாகச் சிரிக்க, ''சிரிக்காதீர்கள். உங்கள் அனைவரையும் கழுத்தை அறுத்துக் கொன்றுவிட என்னால் முடியும்'' என்றார். கொள்ளையர்கள் மேலும் சிரித்தார்கள்.

சக பயணி ஒருவர், ''எதற்காக இப்படி உன்னை நீயே உயர்வாகப் பேசிக்கொள்கிறாய்! அது உனக்கே ஆபத்தாக முடியலாம்'' என்று எச்சரிக்க, ''நான் யார் என்பதை நான்தான் சொல்ல வேண்டும். எனக்காகப் பிறர் விளம்பரம் செய்யமாட்டார்கள். அரச நீதி நூல்களில் சொல்லியிருப்பதைத்தான் நான் கடைப்பிடித்து வருகிறேன்'' என்றார் சீஸர்.

பின்னர், 38 நாட்கள் பயணக் கைதியாக இருந்து வெளியே வந்ததும், வீரம் மிக்க ஆட்களைத் திரட்டிக்கொண்டு போய் கடற்கொள்ளையர்களுடன் போரிட்டு, தான் சொன்னது போலவே அவர்கள் அத்தனை பேரையும் கழுத்தை அறுத்துக் கொன்றார். இந்த வெற்றியைப் பெரும் பொருட்செலவு செய்து கொண்டாடினார். ''ஏன் இப்படிச் சுய தம்பட்டம் அடிக்கிறீர்கள்?'' எனப் பிறர் கேட்டபோது, தனக்குப் பிடித்த மந்திரச் சொல்லையே பதிலாகச் சொன்னார்... ''உன் தகுதியை நீயே உரக்கச் சொல். பிறருக்காகக் காத்திருக்காதே!''

அறுவை சிகிச்சை மூலம் பிறந்த முதல் குழந்தை ஜூலியஸ் சீஸர். ரோம் நகர அதிகாரத்தில் இருந்த மரியஸ், சீஸரின் உறவினர். எனவே, சீஸரால் மிக எளிதாக படைத் தலைவராகி, போர்களில் பங்கேற்று வெற்றிகள் குவிக்க முடிந்தது.

மரியஸுக்குப் பின் ஆட்சியைப் பிடித்த ‘சுல்லா’வின் பேத்தியைத் திருமணம் செய்துகொண்டு, செனட் சபையில் முக்கிய இடம் பிடித்தார் சீஸர். மிகப் பெரும் செலவில் பிரமாண்டமான ஸ்டேடியம் அமைத்து, ‘அடிமைகளின் மரண விளையாட்டு’ நடத்தி, மக்களிடம் பெரும் புகழ் பெற்றார். கி.மு.58–ல் ஐரோப்பிய கண்டங்களில் உள்ள பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வந்த பழங்குடிகள் இடம்பெயர்ந்து, ‘கவுல்’ நோக்கி வருகிறார்கள் என்றதும், அவர்களால் ரோம் நகருக்கு ஆபத்து வருமெனப் படையுடன் கிளம்பினார் சீஸர்.

சுமார் ஒன்பது ஆண்டுகள் நடந்த இந்த ‘கவுல்’ போராட்டத்தில், சுமார் இருபது லட்சம் பழங்குடியினர் கொல்லப்பட்டனர். பத்து லட்சம் பேர் அடிமைகளாக விற்கப்பட்டனர். இந்தப் போர், சீஸருக்கு செனட் சபையிலும், மக்கள் மனதிலும் நிரந்தர இடத்தையும், பெரும் வீரன் என்கிற புகழையும் பெற்றுத் தந்தது.

ரோம் நகரின் அறிவிக்கப்படாத சர்வாதிகாரியாகச் செயல்படத் தொடங்கினார் ஜூலியஸ் சீஸர். ரோமன் காலண்டர் மாற்றியமைக்கப்பட்டது. நகரெங்கும் சீஸரின் சிலைகள் நிறுவப்பட்டன. நாணயங்களில் அவரது உருவம் பொறிக்கப்பட்டது. தன் புகழ் இந்த பூமி உள்ளவரை நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காக, பெரும் செலவுகள் செய்தார் சீஸர். அவரை இனியும் விட்டுவைத்தால், ரோம் சீரழிந்துவிடும் என அவருக்கு வேண்டப்பட்டவர்கள் சிலரே சீஸரைக் கொல்லத் துணிந்தார்கள்.

எல்லோரும் அவரைக் கத்தியால் குத்த, மகன் போல் தான் நினைத்திருந்த புரூட்டஸிடம் ஓடினார் சீஸர். அவனும் கத்தியெடுத்துக் குத்தவே, ‘‘யூ டூ புரூட்டஸ்’’ என்று பதறித் துடித்தபடி உயிரைவிட்டார். ஜூலியஸ் சீஸர் விமர்சனத்துக்கு உரியவராக இருந்தாலும், அவரைப் புகழின் உச்சியில் ஏற்றிவைத்தது, ‘உன் தகுதியை நீயே உரக்கச் சொல். பிறருக்காகக் காத்திருக்காதே!’ என்கிற அவரது மந்திரச் சொல்தான்.

## 16.‘சந்தோஷமாக ஏற்றுக்கொண்டால் சுமை தெரியாது!’



கட்டுமஸ்தான உடம்புடன் இருந்த இளைஞன் டென்சிங், ஒரு கோணிப் பை நிறைய கற்களை அள்ளிப் போட்டுக் கட்டி, தன் தோளில் சுமந்தபடி ஊரைச் சுற்றி வந்தான். பார்த்தவர்கள் எல்லாம் கேலியும் கிண்டலும் செய்தனர்.

டென்சிங்கின் மனைவிக்கும் அவனது இந்தச் செயல் பிடிக்காததால், அந்த மூட்டையை இரவோடு இரவாக அப்புறப்படுத்த நினைத்தாள். ஆனால், அவளால் அதை அசைக்கக்கூட முடியவில்லை. ‘‘இத்தனை கனமான சுமையைச் சுமந்துகொண்டு எப்படி உங்களால் சிரிக்க முடிகிறது?’’ என மறுநாள் தன் கணவனைக் கேட்டாள். ‘‘சந்தோஷமாக ஏற்றுக்கொண்டால் சுமை தெரியாது!’’ என்றான் டென்சிங். ‘‘சுமை தெரியவில்லை, சரி... மற்றவர்களின் கேலியும் கிண்டலும் கூடவா உங்களை வேதனைக்குள்ளாக்கவில்லை?’’ என மீண்டும் கேட்டாள். ‘‘அவற்றையும் நான் சந்தோஷமாகவே ஏற்றுக் கொள்கிறேன்’’ என்றான்.

இமயமலை அடிவாரத்தில் இருக்கும் கும்ஜிங் கிராமத்தில், ஏழ்மையான குடும்பத்தில் பதினோராவது குழந்தையாக 1914-ம் வருடம் பிறந்தான் ‘நாம்கியால்’. சுற்றுப்பயணம் வந்திருந்த திபெத்திய மதகுரு லாமா, அந்தக் குழந்தையைப் பார்த்து, ‘‘இவன் உலகப் புகழ் பெறுவான். இவனை இனி ‘டென்சிங் நோர்கே’ எனக் கூப்பிடுங்கள்’’ என்றார்.

யாக் எருமைகளை மேய்த்துக்கொண்டு இருந்த டென்சிங்குக்கு மலையின் உயரம் கிளர்ச்சி ஊட்டியது. மலை ஏறும் தனது ஆசையைத் தாயிடம் சொன்னான். ‘‘மகனே! நம்மைப் போன்றவர்கள் மலை ஏறும் வீரனாக அல்ல; ஒரு சுமை தூக்கியாகத்தானப்பா போக முடியும்’’ என்றாள். உடனே, வீட்டைவிட்டு வெளியேறி, நேபாளத்தில் சுமை தூக்கியாக வேலையில் சேர முயன்றான் டென்சிங். ஆனால், அவனால் அதிக சுமையைத் தூக்க முடியவில்லை. எனவே, வேலை கிடைக்காத வருத்தத்துடன் அவன் திரும்பிக்கொண்டு இருந்தபோது, தலாய் லாமாவைச் சந்தித்து தன் ஏக்கத்தைச் சொன்னான். ‘‘சந்தோஷமாக ஏற்றுக்கொண்டால் எந்தச் சுமையும் தெரியாது!’’ என்றார் அவர். அந்த மந்திரச் சொல்லை மனதில் ஏற்றிக்கொண்டு, தன் உடலை உறுதி செய்யும் விதமாகத்தான் கோணிப் பை நிறையக் கற்களை அள்ளிப் போட்டுக்கொண்டு சந்தோஷமாகச் சுமக்கத் தொடங்கினான் டென்சிங். அவனது உடல் இரும்பு போல் உரமேறியது. மலை ஏறும் குழுவில் சுமைதூக்கியாக, 1937-ம் ஆண்டு வேலையும் கிடைத்தது.



RangaRakes tamilnavarasam.com


மலையின் மீது குறைவான உணவே கிடைக்கும் என்பதால், பசியுடன் அதிக எடையைச் சுமக்க வேண்டும். குளிரும் பனிக் காற்றும் உடம்பை ஊசி போல் குத்தும். பள்ளத்தாக்குகளைக் கடக்கும்போது, பாலம் கட்ட வேண்டும். மலைச்சரிவில் ஏறும்போது கோடரிகளால் பாறைகளை வெட்டி, படி அமைக்க வேண்டும். மிகக் குறைவான நேரமே தூங்க முடியும். பனிப் புயலும், பனிப் பாறைகள் விழுவதும் மரண பயம் தரும்.

ஆனால், இத்தனைச் சிரமங்களையும் மீறி, மலைகளின் மீது சர்வ சாதாரணமாக, புன்னகை மாறாமல் நடைபோட்டான் டென்சிங். உயரம் செல்லச் செல்ல, மற்றவர்கள் சோர்வடைந்துவிட, இவன் மட்டும் உற்சாகமாக தனது இலக்கை நோக்கிப் போய்க்கொண்டே இருந்தான்.

நியூசிலாந்தைச் சேர்ந்த எட்மண்ட் ஹில்லாரியுடன் ஏழாவது முயற்சியாக எவரெஸ்ட் நோக்கிக் கிளம்பினான். கடுமையான பயணத்துக்குப் பின் டென்சிங், ஹில்லாரி இருவரும் 1953-ம் வருடம் மே, 29-ம் நாள் பகல் 11.30 மணிக்கு எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியில் நின்றார்கள். தன் மகள் ஆசையுடன் கொடுத்தனுப்பிய சின்னஞ்சிறு பென்சிலை அங்கே நட்டுவைத்தான் டென்சிங்.

கல்வியறிவில்லாத, வசதியில்லாத, எவ்விதப் பயிற்சியும் இல்லாத குக்கிராமத்தில் பிறந்த டென்சிங்கை உலகப் புகழ் பெறவைத்த அந்த மந்திரம், வெற்றிபெற விரும்பும் அனைவருக்கும் அற்புத வழிகாட்டி!

## 17.‘நம்பிக்கை இழக்கும் வரை தோல்விகள் வருவதில்லை!’



காங்கிரஸ் கட்சியின் தலைவராக 1938-ம் வருடம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பதவி ஏற்றபோது, அவருக்கு வயது 41. வயதானவர்கள் மட்டுமே வகித்த பதவிக்கு இளம்வயதில் நேதாஜி தேர்வு செய்யப்பட்டதும், தொண்டர்களின் எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது. ‘பேச்சுவார்த்தை இனி செல்லுபடி ஆகாது. மக்களை ஒன்று சேர்த்துப் போராடுவோம்; வெள்ளையரை விரட்டுவோம். சுதந்திரம் மட்டுமே நம் ஒரே குறிக்கோள்!’ என தீவிரமாக சுபாஷ் இறங்கினார். ஆனால், அவரது அதிரடி நடவடிக்கைக்கு ஒத்துழைக்க, கட்சியின் மற்ற தலைவர்கள் தயாராக இல்லை.

ஏதேதோ கனவுகளுடன் பதவிக்கு வந்த நேதாஜி, தன் கைகள் கட்டப்பட்டு இருப்பதை உணர்ந்தார். இந்தப் பதவி பரிசு அல்ல... விலங்கு எனப் புரிந்து, பதவியை ராஜினாமா செய்தார். ‘‘பதவியில் இருந்து சாதிப்பதுதான் புத்திசாலித்தனம். இனி மக்களை எப்படித் திரட்டமுடியும்? நீங்கள் தோற்றுவிட்டீர்கள்’’ என நெருங்கியவர்களே குறைபட்டுக் கொண்டார்கள். ‘‘இல்லை. காங்கிரஸ் தலைவர் பதவி இல்லாமலே என்னால் இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கித் தர முடியும். இது எனக்கு ஒரு பின்னடைவு மட்டுமே; தோல்வி அல்ல! நம்பிக்கை இழக்கும் வரை தோல்விகள் வருவதில்லை!’’ என்றார் நேதாஜி. ஆம், சுவாமி விவேகானந்தரின் இந்த வேதவாக்குதான், நேதாஜியின் தாரக மந்திரம்.

1897-ம் வருடம் கட்டாக் நகரில் பிறந்தார் சுபாஷ் சந்திர போஸ். மெட்ரிக்குலேஷன் தேர்வில், மாநிலத்திலேயே இரண்டாவது மாணவனாகத் தேறினார். பின், தந்தையின் ஆசைக்காக லண்டனில் ஐ.சி.எஸ். தேர்வு எழுதி பாஸானார். ஆங்கிலேயரிடம் அடிமை வேலை பார்க்க விரும்பாமல், ஐ.சி.எஸ். பதவியைத் தூக்கி எறிந்த முதல் இந்தியர் நேதாஜிதான். காங்கிரஸின் மிதவாதக் கொள்கைகள் பிடிக்காமல், தீவிர கருத்து உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து ‘ஸ்வராஜ் கட்சி’ தொடங்கியபோது, அதை வளர்ப்பதற்காக ‘ஃபார்வர்ட்’ என்ற நாளிதழை

தொடங்கினார் நேதாஜி. இந்தக் கட்சி கல்கத்தா மாநகராட்சித் தேர்தலில் பெரும் வெற்றி பெறவே, 25 வயதில் நகரசபை கமிஷனர் ஆனார் சுபாஷ். மக்களிடையே சுபாஷின் செல்வாக்கு உயர்வதை விரும்பாத ஆங்கிலேய அரசு, காரணமின்றி அவரை அடிக்கடி சிறையில் தள்ளியது. அவரது உடல்நிலை மிக மோசமாகவே, இந்தியாவில் இருக்கக்கூடாது என்ற நிபந்தனையுடன் அவரை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பியது. 1937–ம் வருடம் தடை நீங்கிய பின்னரே சுபாஷ் இந்தியா வந்து, காங்கிரஸ் கட்சியின் தலைவரும் ஆனார். மீண்டும் சிறைப்பட்டபோதுதான், இரண்டாம் உலகப்போரை இந்திய விடுதலைக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிற உத்தேசத்தில், சிறையில் இருந்து தப்பி, ராணுவப் போருக்குத் தயாரானார்.

1944–ம் வருடம். இந்திய எல்லையில் சுமார் 2 லட்சம் ஜப்பானியரும், இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்த 6,000 இந்தியர்களும் ஆங்கிலேயருடன் போரிட்டார்கள். எதிர்பாராத பெரும் மழையால், சேறும் சகதியுமாக இருந்தது போர்க்களம். ஆங்கிலேயர்கள் நவீன கருவிகளுடன் போரிட்டுக்கொண்டு இருக்க... வயர்லெஸ், ஜீப், மோட்டார் சைக்கிள், டெலஸ்கோப் போன்ற எந்த சாதனங்களும் இல்லாமல், உணவும், மருத்துவ வசதிகளும் இல்லாமல் இந்தியப் படை போரிட்டது. அமெரிக்க விமானப் படை ஜப்பானியர்களை மொத்தமாகக் கொன்று போட்டது. உடனே, ஜப்பான் பிரதமர் போரை நிறுத்திவிட்டு, மிச்சமுள்ள தன் வீரர்களைத் திரும்ப அழைத்துக் கொண்டார்.

எலும்பும் தோலுமாகத் திரும்பிய இந்திய வீரர்களைக் கண்டு ரத்தக்கண்ணீர் வடித்தார் நேதாஜி. இந்திய தேசிய ராணுவத்தைத் தொடங்கிய பியூஜிவாரா, ''நாம் தோற்றுவிட்டோம். இந்தத் தோல்வியில் இருந்து நம்மால் மீளவே முடியாது'' என்று கதறினார். அப்போதும் உறுதியுடன், ''நம்பிக்கை இழக்கும் வரை தோல்விகள் வருவதில்லை!'' என்றார் நேதாஜி. நடந்தவற்றைக் கண்டு மனம் தளராமல், ரஷ்யாவின் ஆதரவைப் பெற விமானம் ஏறினார்.

மாபெரும் சாம்ராஜ்யத்தை அசைக்கும் முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டாலும், அதனை ஒரு தோல்வியாக எடுத்துக்கொள்ளாமல், நம்பிக்கையோடு அடுத்தடுத்த முயற்சிகளில் இறங்கியதால்தான், ஒவ்வொரு இந்தியனின் மனதிலும் இன்றளவும் இருக்கிறார் நேதாஜி!

## 18.'மாற்றம் என்பது தடையல்ல... வளர்ச்சியே!'



அது 1874-ம் வருடம். ஆயிரக்கணக்கான மக்களின் நடுவே, ஒலிபெருக்கி இல்லாமல் கணீர்க் குரலில் நாத்திகக் கருத்துக்களைப் பேசத் தொடங்கினார் அன்னிபெசன்ட். மதகுருமார்களின் போலி வேடத்தைக் கண்டித்து, மதத்தின் பெயரால் வளர்க்கப்படும் மூடநம்பிக்கைகளை அடித்து நொறுக்கினார். எரிச்சலுற்ற மதப் பற்றாளர்கள், அவர் பேசும்போதே குறுக்கிட்டு, ''மதத்தின் மீது தீவிரப் பற்று இருந்ததால், மதகுருவைத் திருமணம் செய்துகொண்டீர்கள். பின், விவாகரத்து ஆனதால், மதத்தையே போலி என்று விமர்சிப்பதா? இப்படி மாறுவதற்கு உங்களுக்கு வெட்கமாக இல்லையா?'' என்று கேட்டார்கள்.

''நான் தீவிர கடவுள் பற்றாளராக இருந்ததும், இப்போது தீவிர எதிர்ப்பாளருமாக மாறியிருப்பதும் உண்மைதான். எனக்குச் சரியெனப்பட்டதாலேயே மாறியிருக்கிறேன். மாற்றம் என்பதை வெட்கப்படத்தக்கதாகவோ அல்லது தோல்வியாகவோ நான் கருதவில்லை. 'மாற்றம் என்பது தடையல்ல... வளர்ச்சியே!''' என்று உரக்கச் சொன்னார் அன்னிபெசன்ட். அவரது மந்திரச் சொல்லைக் கேட்டு எதிரிகள் வாயடைத்து நின்றனர்.

அயர்லாந்து தந்தைக்கும் ஆங்கிலேயத் தாய்க்கும், 1847-ம் வருடம் லண்டனில் பிறந்தவர் அன்னி. சிறுவயதிலேயே தந்தையின் மரணத்தால் குடும்பம் வறுமையில் வாடவே, அன்னியை வளர்க்கும் பொறுப்பை ஒரு தோழியிடம் ஒப்படைத்தார் தாய் எமிலி. மதத்தின் மீது தீவிர பற்றுகொண்டு இருந்ததால், மதகுரு ஃபிரங்க் பெசன்ட்டைத் திருமணம் செய்து கொண்டார் அன்னி. அந்தத் திருமணம் தோல்வியில் முடிந்து விவாகரத்து ஆனது.

ஐரோப்பா கண்டத்தையே தனது நாத்திகப் பேச்சால் கலக்கிக்கொண்டு இருந்த சார்லஸ் ப்ராட்லாவின் நட்பும், அவர் நடத்திவந்த 'நேஷனல் ரீ ஃபார்மர்' பத்திரிகையில் ஒரு வேலையும் கிடைத்தது அன்னிக்கு. சார்லஸின் நாத்திகக் கருத்துகள் அன்னியை வெகுவாகக் கவரவே, மேடை ஏறிப் பேசத் தொடங்கினார். இந்த 'உலகின் மிகச் சிறந்த மேடைப் பேச்சாளர்' என பெர்னாட்ஷாவின் பாராட்டையும் பெற்றார்.

கர்ப்பத் தடைச் சாதனங்கள் அறிமுகமான காலத்தில், அதற்குப் பெண்கள், ஆண்கள் என அனைவரிடமும் பலத்த எதிர்ப்பு எழுந்தது. எனினும், அந்தச் சாதனங்களைப் பகிரங்கமாக ஆதரித்து எழுதிய அன்னி, 'கருக்கலைப்பு செய்வதைவிட, கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவது சிறந்தது' என்று நீதிமன்றத்தில் வாதாடினார். ஒரு பெண் வெளிப்படையாகக் கருத்தடை சாதனங்கள் பற்றி பேசுவது கண்டு பெண்கள் விழிப்படைந்தார்கள்.

சோஷலிசக் கருத்துகளில் மிகவும் ஈடுபாடு ஏற்படவே, தொழிலாளர்கள் உரிமைக்காக வீதியில் இறங்கிப் போராடினார்.

உழைக்கும் மக்களை ஒன்று சேர்க்கவேண்டுமென 'லிங்க்' வார இதழைத் தொடங்கி, 'வலுவற்றவர்களே... வாருங்கள், வலிமையானவர்களுடன் போராடலாம்' என அழைத்தார். ருஷ்யாவைச் சேர்ந்த மேடம் பிளாவட்ஸ்கி தொடர்பின் மூலம் 'பிரம்ம ஞான சபை' பற்றி அறிந்தார். எல்லா மதங்களின் அடிப்படைத் தத்துவங்களை உள்ளடக்கியது, உருவம் இல்லா கடவுள் வழிபாடு, மனிதர்கள் மறுவாழ்வு போன்ற அதன் கொள்கைகள் பிடித்துப்போகவே, அந்தச் சபையில் இணைந்தார்.

இவரது மனமாற்றத்தை மற்றவர்கள் கேலி செய்தபோது, 'மாற்றம் என்பது தடையல்ல... வளர்ச்சியே!' என்று அப்போதும் அழுத்தமாகச் சொன்னார் அன்னி. 1883-ம் ஆண்டு, பிரம்ம ஞான சபையில் ஈடுபட இந்தியா வந்த அன்னி பெசன்ட், இந்திய சுதந்திரப் போராட்டத்திலும் கலந்துகொண்டு, 1917-ம் வருடம் இந்திய காங்கிரஸ் தலைவராகவும் ஆனார். 86-ம் வயதில் மறையும் வரை பொது நலனுக்காகவே வாழ்ந்தவர் அன்னி.

இன்றைய இளைய சமுதாயத்தினர் நல்ல வாய்ப்புக் கிடைக்கும்போது தயக்கமின்றி வேறு நிறுவனங்களுக்கு மாறி, வெற்றிக் கொடி நாட்டுவதுகூட, அன்னியின் வாழ்வில் இருந்து பெற்ற, 'மாற்றம் என்பது தடையல்ல... வளர்ச்சியே!' என்னும் மந்திரச் சொல்லின் மகிமையே!

## 19.‘செய்து முடி; அல்லது, செத்து மடி!’



பதினாறே வயது நிரம்பிய சிறுவன் பிரபாகரனுடன் இன்னும் மூன்று இளைஞர்கள் சேர்ந்து, ‘சிலோன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்’ பேருந்துக்குத் தீ வைப்பது என ‘தமிழ் மாணவர் பேரவை’யில் முடிவு எடுக்கப்பட்டது. பேருந்தை நெருங்கியபோது, தூரத்தில் ஆட்கள் வருவதைப் பார்த்ததும் பயந்துபோய், உடன் வந்த மூவரும் திரும்பி ஓடினார்கள். ஆனால், எந்தவிதப் பதற்றமும் பயமும் இல்லாமல் திட்டமிட்டபடி தீ வைத்துத் திரும்பினான் சிறுவன் பிரபாகரன். பேரவை உறுப்பினர்கள் பிரபாகரனைத் தலைக்கு மேல் தூக்கிவைத்துக் கொண்டாடினார்கள்.

‘‘தம்பி! உனக்குப் பயமே வரவில்லையா?’’ என ஆர்வமுடன் கேட்டார்கள்.

‘‘இந்தியச் சுதந்திர வீரர்கள் நேதாஜி, பகத்சிங், காந்தியின் போராட்டங்களிலிருந்து நான் கற்றுக்கொண்டதையே மந்திரமாகக் கடைப்பிடிக்கிறேன். அதனால், எனக்குப் பயமென்பது கிடையவே கிடையாது’’ என்று நெஞ்சை உயர்த்திச் சொன்னான் பிரபாகரன்.

‘‘அப்படி என்ன மந்திரம்?’’
‘‘செய்து முடி; அல்லது செத்து மடி!’’

1954-ம் வருடம், நவம்பர் 26-ம் தேதி, இலங்கையின் வடக்குப் பகுதியில் உள்ள வல்வெட்டித்துறையில் வேலுப்பிள்ளை - பார்வதி தம்பதியின் நான்காவது மகனாகப் பிறந்தார் பிரபாகரன். சிங்களர்கள், தமிழர்களுக்கு இடையே பெரும் பூசல்கள் இருந்த காலம் அது. கோயில் பூசாரியாக இருந்த தமிழரை உயிருடன் தீ வைத்து சிங்களர்கள் கொளுத்தியதையும், தமிழ்க் குழந்தைகளைக் கொதிக்கும் தார் டின்களில் உயிருடன் போட்ட கொடூரங்களையும் கேட்ட பிரபாகரனின் ரத்தம் கொதித்தது. பத்தாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திவிட்டு, தீவிர எதிர்ப்பில் இறங்கினார். 18 வயதில் டி.என்.டி. எனப்படும் ‘தமிழ் புதிய புலிகள்’ எனும் அமைப்பைத் தொடங்கினார். இதுவே பின்னர் ‘விடுதலைப் புலிகள்’ இயக்கமாக மாறியது.

வரதராஜப் பெருமாள் கோயிலில் தரிசனம் முடித்து வந்த மேயர் ஆல்பிரட் துரையப்பாவைச் சுட்டுக் கொன்று, அவரது காரிலேயே தப்பியோடியதுதான் (1975) பிரபாகரனின் முதல் அதிரடி நடவடிக்கை.

விடுதலைப் புலிகள் அமைப்பைக் கட்டுப்படுத்துவதற்காக சிங்கள அரசு 1983-ம் வருடம் ராணுவத் தாக்குதலைத் தொடங்கியதில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர்; தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர்; வீடுகள் கொளுத்தப்பட்டன. அதுவரை சிறுசிறு தாக்குதல்களை மட்டுமே செய்து வந்த புலிகள் அமைப்பு, ராணுவத்தை எதிர்த்துப் போரிடத் தொடங்கியது.

'செய்து முடி; அல்லது செத்து மடி!' என்பதே புலிகளின் போர்க் குரல் மந்திரமாக ஒலித்தது.

இந்திய அரசு சமாதானப் பேச்சில் ஈடுபட்ட 1986-ம் வருடம், சென்னையில் பிரபாகரன் தமிழக போலீஸாரால் சிறைப்பிடிக்கப்பட்டதும், சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். பின்னர், அவர் விடுதலை செய்யப்பட்ட நேரத்தில் நிருபர்கள் அவரிடம், ''இந்தியாவில் அறப் போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றியும் கண்டிருக்கும் நீங்கள், இலங்கையில் மட்டும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுகிறீர்களே, ஏன்?'' என்று கேட்டார்கள்.

''அறப் போராட்டத்தால் சுதந்திரம் அடைந்த இந்தியாவுக்குத்தான் அந்தப் போராட்டத்தின் மதிப்பு தெரியும். நாங்கள் எந்த வகையான ஆயுதம் எடுக்க வேண்டும் என்பதை எங்கள் எதிரிகள்தான் தீர்மானிக்கிறார்கள். அதனால்தான், 'செய்து முடி; அல்லது செத்து மடி!' என்கிற கொள்கையுடன் ஈழத்தில் உயிர்ப் போராட்டம் நடத்துகிறோம்'' என்றார் பிரபாகரன்.

பல்வேறு அரசியல் மாற்றங்களால், விடுதலைப்புலிகள் இயக்கம் இன்று பல நாடுகளில் தடை செய்யப்பட்ட இயக்கமாக இருக்கிறது. உணவுப் பொருள் முதற்கொண்டு எரிபொருள் வரை தடை செய்யப்பட்ட நிலையிலும், இன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் தமிழ் ஈழத்தில் கல்வி, வேளாண்மை, விஞ்ஞானம், ஏவுகணை, இன்டர்நெட் என எல்லாமே நவீனமாக இருக்கிறது. இந்த இயக்கத்தினரால் எதுவும் செய்து முடிக்க முடியும் என்று உலகமே நம்புவதற்குக் காரணம், 'செய்து முடி; அல்லது செத்து மடி!' என்கிற புலிகளின் மந்திரம்தான்.

## 20.குற்றம் கண்டு கொதிப்பவனுக்கு எதுவும் சாத்தியமே!’



சிலி நாட்டில் 1973-ம் ஆண்டு ராணுவப் புரட்சி நடந்து, மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசு கவிழ்க்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும்,எதிர்ப்பில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான மக்களும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நிலையிலும், 69 வயதான புரட்சிக்கவி பாப்லோ நெருடா, ராணுவ நடவடிக்கையைக் கண்டு கொதித்தெழுந்தார்.

புதிய ஆட்சியை விமர்சனம் செய்ததால், பாப்லோ நெருடாவுக்கு மருத்துவ வசதிகள் தடுக்கப்பட்டன. வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு, எவ்வித சிகிச்சையும் அளிக்கப்படாமலே மரணமடைந்தார் பாப்லோ. அவரது இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீருடன் கலந்துகொண்டனர். அவர் எழுதிய புரட்சிக் கவிதைகளுடன், ‘குற்றம் கண்டு கொதிப்பவனுக்கு எதுவும் சாத்தியமே!’ என்ற அவரது மந்திரச் சொல்லும் படிக்கப்பட்டது. அதைக் கேட்டதும், மக்கள் கோபம் அப்படியே புதிய ஆட்சிக்கு எதிரான போராட்டமாக மாறியது. பாப்லோவின் இறுதி ஊர்வலமே ராணுவத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டமாக மாறி, பெரும் புரட்சி நடந்து, நாட்டின் தலையெழுத்தையே மாற்றியது.


லத்தீன் அமெரிக்காவில் உள்ள சிலி நாட்டின் மத்தியப் பகுதியில் இருக்கும் ‘பார்ரல்’ என்கிற சிறு கிராமத்தில் 1904-ம் ஆண்டு பிறந்தார் பாப்லோ நெருடா. இவர் பிறந்த ஒரு மாதத்திலேயே அவரது தாய் மரணம் அடைய, வளர்ப்புத் தாயிடம் வளர்ந்தார். கவிதை எழுதுவதில் மிக ஆர்வமாக இருந்த பாப்லோ, பதினைந்தாவது வயதிலேயே ‘மழை எங்கே பிறந்ததோ..?’ என்கிற தனது முதல் கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். பத்தொன்பதாவது வயதில் வெளியிட்ட, ‘இருபது காதல் கவிதைகளும் ஒரு நிராசைப் பாடலும்’ என்ற அவரது கவிதைத் தொகுப்பு, அவருக்கு நாடெங்கிலுமிருந்து பெரும் புகழைக் கொண்டுவந்து சேர்த்தது. அந்த வயதில் செக்கோஸ்லோவேகியா நாட்டின் புரட்சிக் கவிஞன் ‘நெருடா’ எழுதிய கட்டுரை ஒன்றில், ‘நாட்டில் குற்றம் நடப்பதைக் கண்டு ஒதுங்கி நிற்பவர்கள், வாழ்வில் எதையும் சாதிக்கமாட்டார்கள். குற்றம் கண்டு

கொதிப்பவனுக்கு எதுவும் சாத்தியமே! அவனால் நாட்டையே தட்டி எழுப்ப முடியும்' என்ற வரிகளைப் படித்தபோது, ரத்தத்தில் மின்சாரம் பாய்ந்தது போல ஒரு துடிப்பும் உத்வேகமும் பெற்றார் பாப்லோ. நெருடாவின் ரசிகனாகி, அந்தக் கவிஞனின் பெயரையே தன் பெயருடன் இணைத்துக்கொண்டு, 'பாப்லோ நெருடா' என்ற பெயரில் புரட்சிக் கவிதைகள் எழுதத் தொடங்கினார். இருபத்துமூன்றாம் வயதிலேயே பெரும் கவிஞராகப் புகழ் பெற்று, சிலி நாட்டுத் தூதுவராக நியமிக்கப்பட்டார். பல்வேறு நாடுகளுக்குச் சென்று, 'குற்றம் கண்டால் கொதித்தெழ வேண்டுமென' புரட்சி விதையை மக்கள் மனங்களில் தூவினார்.

ஸ்பெயின் நாட்டில், 1936-ம் ஆண்டு உள்நாட்டுக் கலவரம் நடந்துகொண்டு இருந்தபோது அந்நாட்டுத் தூதராக இருந்த பாப்லோ, புரட்சிப் படையினருக்கு கம்யூனிசத்தைக் கற்றுக் கொடுத்தார். புரட்சியைத் தூண்டியதாகக் குற்றம்சாட்டி, அவரை நாட்டைவிட்டு வெளியேற்றியது ஸ்பெயின். தாய்நாடு திரும்பிய பாப்லோ, அப்போதைய சிலி அதிபரின் போக்கு முதலாளித்துவத்தின் பக்கம் இருப்பதைக் கண்டு அதிர்ந்து, 'நம் நாட்டை அமெரிக்காவுக்கு விற்றுவிட்டார் அதிபர்' என்று ஆவேசமாகக் குற்றம்சாட்ட, நாட்டில் கலவரம் தூண்டுகிறார் எனக் குற்றம்சாட்டி, அவரை போலீஸ் கைதுசெய்ய விரைந்தது. பாப்லோ உடனே நாட்டைவிட்டு வெளியேறி ரஷ்யா, கியூபா, பொலிவியா எனப் பல்வேறு நாடுகளுக்குச் சென்று, அங்கே நடந்த புரட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். பொலிவியாவில் சேகுவேரா சுட்டுக் கொல்லப்பட்டபோது, அவரது கையில் இருந்த இரண்டு புத்தகங்களில் ஒன்று பாப்லோ நெருடா எழுதியது.

'ஒரு கண்டத்தின் தலைவிதியையும், அதன் கனவுகளையும் உயிரோட்டமாகச் சித்திரித்தவர்' என்று பாப்லோவுக்கு 1971-ல் இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. 'தனி மனித துதிபாடலை ஒழிக்க வந்திருக்கும் எனக்கு சிலை அமைத்துவிடாதீர்கள்' என்று தன்னைப் புகழ வந்தவர்களிடமிருந்து விலகி ஓடினார் பாப்லோ. குற்றம் கண்டு கொதித்தெழுந்து இறுதிவரை போராடியதால்தான் இன்றளவும் புரட்சிக் கவிஞராக மதிக்கப்படுகிறார் பாப்லோ!

## 21. 'வாய்ப்புகள் தாமே வராது, நாம்தான் உருவாக்க வேண்டும்!'



''இருவரும் சண்டை போடுவோம்; நான் ஜெயித்தால், நீ உன் பள்ளியை இழுத்து மூடி விடவேண்டும். நீ ஜெயித்தால், நான் சொல்லிக் கொடுப்பதை நிறுத்திக் கொள்கிறேன். என்ன, சவாலுக்குத் தயாரா?'' என்று கொக்கரித்தார் குங்ஃபூவில் புகழ் பெற்ற ஆசிரியரான வோங்க் ஜாக்மென்.

அமெரிக்காவின் ஆக்லாந்து நகரில் புதிதாகத் தற்காப்புக் கலைகளைக் கற்றுத் தரும் பள்ளியைத் திறந்திருந்த புரூஸ்லீ, எவ்விதத் தயக்கமும் இன்றி, சவாலுக்குச் சம்மதித்தார்.

சண்டைக்கு வந்து, பத்தே நொடியில் தோல்வியைத் தழுவினார் வோங்க். ஒரே நாளில், அமெரிக்கா மற்றும் சீனாவில் லீ-யின் புகழ் கிடுகிடுவெனப் பரவியது.

''என்ன தைரியத்தில் அவருடன் மோத ஒப்புக் கொண்டீர்கள்?''

– நிருபர்கள் கேட்டதற்கு, ''நான் தத்துவத்தைப் பாடமாகப் படித்திருக்கிறேன். வாய்ப்புகள் தாமே வராது, நாம்தான் உருவாக்க வேண்டும் என்பதை அறிவேன். அதனாலேயே வெற்றி, தோல்வி பற்றிக் கவலையின்றி, நானும் என் கலையும் புகழ் பெற இந்த வாய்ப்பை உருவாக்கிக் கொண்டேன்'' என்றார் புரூஸ்லீ. 25 வயதுவரை ஒரு சாதாரண தொலைக்காட்சி நடிகராக இருந்து வந்த புரூஸ்லீ, உலகப் புகழ் பெற்றது அதன் பிறகே!

சான்பிரான்சிஸ்கோவில் ஒரு சீனத் தம்பதியின் மகனாக, 1940-ல் பிறந்தார் புரூஸ்லீ. குடும்பம் சீனா திரும்பியதும், குழந்தை நட்சத்திரமாகப் பல நாடகங்களில் நடித்தார்.

பின்னர், குங்ஃபூ பள்ளியில் சேர்ந்து தற்காப்புக் கலையையும், 'ச்சாச்சா' எனப்படும் டான்ஸையும் கற்றுக்கொள்ளத் தொடங்கினார். 18-வது வயதிலேயே பாக்ஸிங் சாம்பியன்ஷிப் வெற்றி. இதையடுத்து, புரூஸ்லீ அடிக்கடி தெருச் சண்டைகளில் இறங்கி, போலீஸ் பிரச்னை ஏற்படவே, பெற்றோர் அவரை சான்பிரான்சிஸ்கோ அனுப்பினர்.

அங்கே ஓர் உணவகத்தில் பகுதி நேர வேலை பார்த்தபடியே, உயர்நிலைப் படிப்பை முடித்த புரூஸ்லீ, வாஷிங்டன் யூனிவர்சிட்டியில் தத்துவம் படித்தார். கூடவே, சீனத் தற்காப்புக் கலையை மற்றவர்களுக்கும் கற்றுத் தரத் தொடங்கினார்.

ஓரிரு நொடியிலேயே வெற்றிபெறும் லீ-யின் ‘ஜீட் க்யூன்டோ’ என்ற புதிய சண்டை முறைக்கு சீனாவில் பெரும் வரவேற்பு கிடைத்தது. இடையில், ‘சினிமாவில் நடிக்கத் தயாராக இருக்கிறேன்’ என அறிவித்தார் புரூஸ்லீ. கலையை மறந்து, சினிமாவில் நடிக்க அலைகிறார் என விமர்சனங்கள் எழுந்தன. ‘‘வாய்ப்புகள் தாமே வராது, நாம்தான் உருவாக்க வேண்டும். சினிமா மூலமே இந்தக் கலை இன்னும் பெரும் புகழடையும்’’ என்று உறுதியுடன் சொன்னார் லீ.

1971-ல் ‘தி பிக் பாஸ்’ வெளியாகி, உலகெங்கும் சக்கைப்போடு போட்டது. அதன்பின்னர் வெளியான ‘ஃபிஸ்ட் ஆஃப் ஃப்யூரி’, ‘ரிடர்ன் ஆஃப் த ட்ராகன்’, ‘என்டர் தி ட்ராகன்’ எனப் பல படங்கள் வசூலில் சாதனை படைத்தன. அவரது கனவுப் படமான ‘கேம் ஆஃப் டெத்’ படப்பிடிப்பின்போது, மர்மமான முறையில் இறந்துபோனார் புரூஸ்லீ. ‘‘அவர் எடுத்துக்கொண்ட வலி மருந்துகள் அலர்ஜியாகி, அவரது உயிரைப் பறித்துவிட்டன’’ என்று டாக்டர்கள் சொன்னாலும், 33-வது வயதில் அவருக்கு ஏற்பட்ட மரணத்தின் மர்மம் இன்றுவரை விடுபடவே இல்லை.

வாய்ப்புகள் வரும் என்று காத்திருப்பவர்கள் என்றுமே வெற்றியைத் தொடவே முடியாது; வாய்ப்புகளை உருவாக்குபவர்களே சாதனையாளர்கள் என்பது புரூஸ்லீயின் வாழ்க்கை சொல்லும் மந்திரம்!

## 22.‘அனுபவத்தால் முடியாததை உற்சாகம் சாதித்துக் காட்டும்!’

ஸ்வீடனில், 1958-ல் நடந்த உலகக் கால்பந்து கோப்பை போட்டிக்குச் சென்ற பிரேசில் அணியில் ஒரு புதுமை இருந்தது. கால்பந்து வீரர்கள் என்றாலே, வலுவான உடல், நல்ல உயரம், முரட்டுத்தனமான சுபாவம் வேண்டும் என்பது எழுதப்படாத விதி.

இதற்குக் கொஞ்சமும் சம்பந்தமே இல்லாமல், மிகச் சாதாரண தோற்றமும் கூச்ச சுபாவமும் கொண்ட 17 வயதுச் சிறுவன் ஒருவன் இந்த அணியில் சேர்க்கப்பட்டதுதான் அந்தப் புதுமை.

அவன் பெயர்-பீலே. முதல் இரண்டு போட்டிகளில் பீலேவின் வேலை, மற்ற வீரர்களின் காலணிகளைச் சுத்தப்படுத்துவதுதான். மூன்றாவது போட்டியில் வெற்றி உறுதி எனத் தெரிந்த கடைசி நேரத்தில், பீலேயை களம் இறக்கினார்கள். சில நிமிடங்களே களத்தில் இருந்தாலும், அவனது உற்சாகம் அணியினரையும், பார்வையாளர்களையும் வசியம் செய்தது. அதனால், பிரான்ஸுக்கு எதிராக நடந்த செமி-ஃபைனல் போட்டியில் ஆரம்பத்திலேயே களமிறக்கப்பட்டான். அணியில் இருந்த எவருக்குமே வேலை வைக்காமல் சூறாவளியாகச் சுழன்று, ‘ஹாட்ரிக்’ முறையில் மூன்று கோல்கள் அடித்து அணியை வெற்றிபெற வைத்தான் பீலே.

அடுத்து, ஸ்வீடனுடன் நடந்த இறுதிப் போட்டியிலும் இரண்டு கோல்கள் போட்டு அணியை வெற்றி பெறச் செய்தான். அணியினர் பீலேவைத் தோள்மீது தூக்கிவைத்துக் கொண்டாடினார்கள். மீடியாக்கள் சூழ்ந்துகொண்டு வெற்றிக்குக் காரணம் கேட்க, ‘‘உலகக் கோப்பைப் போட்டியில் விளையாடும் அளவுக்கு இந்த வயதிலேயே எனக்குத் தகுதி இருக்கிறதா என்று என்னுடைய கோச் வால்டிமர் டி பிரிட்டோவிடம் நான் கேட்டபோது, ‘அனுபவத்தால் முடியாததை, உற்சாகம் சாதித்துக் காட்டும்!’ என்றார். அந்த உற்சாகம்தான் உங்கள் கேள்விக்கான பதில்!’’ என்று எளிமையாக, தன் வெற்றிக்கான மந்திரத்தைச் சொன்னான் பீலே.


பிரேசில் நாட்டில் ஒரு சிறு கிராமத்தில், கால்பந்தாட்ட வீரரின் மகனாக 1940-ம் ஆண்டு பிறந்தார் பீலே. அவரது இயற்பெயர் எட்ஸன் அர்ன்டிஸ் என்றாலும், அர்த்தமே இல்லாத வார்த்தையால் ‘பீலே’ என்று செல்லமாக அழைக்கப்பட்டார். பள்ளியில் சேர்ந்ததும், படிப்பைவிட கால்பந்து விளையாட்டிலேயே உற்சாகம் காட்டினார். 11 வயதிலேயே இவரிடம் இருந்த திறமையைக் கண்டு வியந்த பிரேசில் அணியின் முன்னாள் கால்பந்தாட்டக்காரர் வால்டிமர் டி பிரிட்டோ, தன் அணியில் சேர்த்துக்கொண்டு பீலேவுக்குப் பயிற்சி கொடுத்தார்.

பீலேவின் விளையாட்டால் பிரேசில் அணி 1958 மற்றும் 1962-ம் ஆண்டுகளில் உலகக் கோப்பையைக் கைப்பற்றி இருந்தாலும், 1966-ம் வருடம் தோல்வியைத் தழுவியது. இதனால் பீலே மீது நம்பிக்கை இழந்த சிலர், ‘‘1970-ம் வருடப் போட்டியில் பீலே தன் அனுபவத்தை வைத்தாவது ஜெயிப்பாரா?’’ என்று கேட்டார்கள். ‘‘என்னைவிட அனுபவசாலிகள் எல்லா அணியிலும் இருக்கிறார்கள். ஆனால், அவர்களிடம் இல்லாத உற்சாகம் என்னிடம் உள்ளது. அனுபவத்தால் முடியாததை, உற்சாகம் சாதித்துக் காட்டும்!’’ என்று சொல்லி, அதன்படி சாதித்தும் காட்டினார் பீலே.

இவரது விளையாட்டைப் பார்ப்பதற்காகவே நைஜீரியாவில் நடந்த போர்கூட 48 மணி நேரம் நிறுத்தி வைக்கப்பட்டது. 1,284 கோல்கள் அடித்து சாதனை புரிந்திருந்த பீலே, 1977-ம் வருடம் ஒரு ‘காட்சி விளையாட்டில்’ கலந்துகொண்டதோடு விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்து, கால்பந்தாட்டத்தில் கடவுள் எனப் புகழப்படும் வகையில் பீலே உயர்ந்ததற்குக் காரணம், அவரிடம் இருந்த வற்றாத உற்சாகம்தான்!

## 23.'சுயநலமற்றவனையே தலைமை தேடி வரும்!'



சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முந்தைய காலம். கிரேக்கத் தத்துவ ஞானி பிளேட்டோ, 'குடியரசு' எனும் அரசியல் ஆய்வு நூலில், முடியாட்சியையும் மக்களாட்சியையும் கடுமையாக விமர்சித்து இருந்தார். அரசியல் ஞானம் இல்லாத மக்களால் தேர்வு செய்யப்படும் தலைவர்கள் தலைமைக்குத் தகுதியானவர்கள் அல்ல என வாதிட்டதுடன் நில்லாமல், தலைவன் என்பவன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமும் வகுத்திருந்தார்.

பிளேட்டோவின் அரசியல் ஞானத்தை அறிந்த சிசிலி நாட்டின் அரசன் டயோனியஸ், ''நீங்கள் ஆசைப்பட்டதுபோல் ஐரோப்பிய கண்டம் முழுவதற்கும் ஒரு லட்சிய அரசு அமைக்கலாம், வாருங்கள்'' என அழைப்பு விடுத்தான். ஆசையோடு வந்த பிளேட்டோ, அரசன் ஆடம்பரப் பிரியனாகவும், நாடு பிடிக்க விரும்பும் சுயநலக்காரனாகவும் இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். அரசவையிலேயே, ''உன் தலைமையில் லட்சிய அரசு அமைக்க முடியாது. உனது சுயநலத்தால் இந்தப் பதவியையும் நீ விரைவில் இழந்துவிடுவாய். சுயநலமற்றவனையே தலைமை தேடி வரும்!'' என்று தைரியமாகச் சொன்னார். ஆத்திரமடைந்த அரசன், பிளேட்டோவை அடிமையாக விற்க உத்தரவிட்டான். சந்தையில் ஏலப்பொருளாக நிறுத்தப்பட்ட பிளேட்டோவை, அவரது மாணவர் அன்னிசெரஸ் பெரும் கிரயம் கொடுத்து மீட்டார்.

கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரில் கி.மு. 427-ல் ஒரு பிரபுவின் வீட்டில் செல்வச் செழிப்பில் பிறந்த பிளேட்டோ, சிறு வயதிலேயே சாக்ரடீஸின் தத்துவஞானத்தில் மயங்கி, அவரது சீடரானார். சாக்ரடீஸ§க்கு மரண தண்டனை அளிக்கப்பட்டபோது, பிளேட்டோவின் வயது 28. சாக்ரடீஸின் மறைவுக்குப் பின், அவரது மாணவர்கள் பிளேட்டோவைத் தேடி வந்து தம் தலைவராக ஏற்றுக்கொண்டனர். 'சாக்ரடீஸ§க்கு மரண தண்டனை அளித்த மக்களாட்சி, ஓர் இழிவான ஆட்சிமுறை' என வெளிப்படையாகக் குற்றம்சாட்டிய பிளேட்டோவையும் ஆட்சியில் இருந்தவர்கள் கைது செய்ய முயன்றனர். அவர் ஏதென்ஸில் இருந்து வெளியேறி இத்தாலி, சிசிலி, எகிப்து போன்ற நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறையை ஊன்றி கவனித்தார். ஏதென்ஸ் நகரில் ஆட்சி மாற்றம் நடந்த பின்னர் தாய் மண்ணுக்குத் திரும்பினார்.

‘‘செருப்பு அறுந்தால், கதவு பழுதானால், நோய் வந்தால் சம்பந்தப்பட்ட நிபுணர்களிடம் செல்லும் மனிதர்கள், ஆட்சி செய்யும் பொறுப்பை மட்டும் எந்தத் தகுதியும் இல்லாதவரிடம் ஒப்படைப்பது சரிதானா?’’ என்று கேள்வி கேட்டு, ஆட்சி செய்பவர்களுக்குச் சில தகுதிகளையும் வகுத்தார். ‘‘பத்து வயது வரை சுதந்திரமாகவும், அதற்குப் பின் கட்டாயப்படுத்துதல் இன்றி பத்து வருடம் விருப்பமாகக் கல்வி பயின்றும், அதன் பின் தத்துவ ஞானம் அறிய சுற்றுப்பயணம் செய்து மக்கள் வாழ்வை நேரடியாக அறிந்தும்... இப்படியாக ஐம்பது வயது வரை வாழ்வைப் படித்தவனே ஆட்சி செய்யத் தகுதி படைத்தவன். அவன் திருமணம் முடிக்கமாட்டான்; தாழ் போட்டு உறங்கமாட்டான். அவனுக்காக மற்றவர்கள் உழைப்பார்கள்; அவன் மற்றவர்களுக்காக உழைப்பான். அப்படிப்பட்ட சுயநலமற்றவனே தலைமைக்குத் தகுதியானவன்’’ என்றார்.


‘இருபது வயதுக்குட்பட்ட பெண்களும், முப்பது வயதுக்குட்பட்ட ஆண்களும் திருமணம் முடிக்கக் கூடாது; செல்வம் சேர்ப்பதற்கு உச்ச வரம்பு வேண்டும்; தனிமனித உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்’ என எத்தனையோ புரட்சிக் கருத்துக்கள் பிளேட்டோவின் நூலில் ஒளிந்திருப்பதால்தான், எமர்ஸன் என்ற தத்துவஞானி, ‘‘பிளேட்டோவின் ‘குடியரசு’ நூலை மட்டும் வைத்துக்கொண்டு, உலகில் உள்ள மற்ற எல்லா நூல்களையும் எரித்துவிடலாம்’’ என்றார்.

திருமணமே செய்துகொள்ளாமல் நாடோடியாக வாழ்ந்து, எண்பதாவது வயதில் தூக்கத்திலேயே மரணமெய்திய பிளேட்டோவின் இறுதி ஊர்வலத்தில் ஏதென்ஸ் நகரமே திரண்டுவந்து, பிரியாவிடை கொடுத்தது!



RangaRakes tamilnavarasam.com

## 24.'தோல்வி என்பது வீழ்ச்சியல்ல... படிப்பினையே!'



அமெரிக்காவில் இரும்புத் தாதுவுக்குத் தேவையும் விலையும் மிக அதிகமாக இருந்ததால், பாறைகளில் இருந்து இரும்புத் தாது பிரித்தெடுக்கும் கண்டுபிடிப்பில், 1897-ம் வருடம் இறங்கினார் எடிசன். அவரது கண்டுபிடிப்பைச் செயல்படுத்த பெரிய நிறுவனங்கள் முன் வந்தன. ஆனால், அவற்றை நிராகரித்து தனது முழு செல்வத்தையும் முதலீடுசெய்து சொந்தமாகத் தொழிற்சாலை தொடங்கினார் எடிசன்.

மலைகளை உடைக்க, உடைத்த பாறைகளைக் கற்களாக்க, கற்களை மணலாக்க, மணலைப் பிரிக்க என எல்லாவற்றுக்கும் பெரிய அளவில் இயந்திரங்களை நிறுவினார். ஒரு டன் இரும்புத் தாது ஆறரை டாலருக்கு விற்பனையான நேரத்தில், நான்கு டாலர் அடக்க விலையில் எடிசன் உற்பத்தி செய்தார். விற்பனை தொடங்கிய நேரத்தில் அமெரிக்காவின் மிசாபா மலைப் பகுதிகளில் உயர் ரக இரும்புத் தாது பெருமளவு இருப்பது கண்டுபிடிக்கப்படவே, இரும்பு விலை மடமடவென ஒரு டன் மூன்று டாலராகக் குறைந்தது. நஷ்டமடைவது தவிர வேறு வழியில்லை எனத் தெரியவந்ததும், உடனே தொழிற்சாலையை மூடினார்.

எடிசனிடம் அவரது நண்பர்கள், ''சிலருடன் கூட்டு சேர்ந்திருந்தால், ஒரேயடியாக நஷ்டமடைந்து இருக்க வேண்டியதில்லையே'' என்றார்கள். ''நஷ்டம் ஏற்படும் ஒரு வழியைத் தெரிந்து கொண்டது எனக்கு லாபமே! தோல்வி என்பது வீழ்ச்சியல்ல...படிப்பினையே!'' என்றபடி மீண்டும் தன் ஆராய்ச்சியைத் தொடங்கினார் எடிசன். கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான கான்கிரீட் கலவையைக் கண்டுபிடித்து, உடனே தயாரிப்பில் இறங்கி, மூன்றே வருடங்களில் இழந்த சொத்தைவிட அதிகமாகச் சேர்த்தார்.

அமெரிக்காவில் சாமுவேல் எடிசன் மற்றும் நான்ஸி எலியட் தம்பதியின் நான்காவது மகனாக, 1847-ம் வருடம் பிறந்தார் தாமஸ் ஆல்வா எடிசன்.

தலை பெரிதாக இருந்ததால், ‘மண்டு, மூளைவளர்ச்சி குறைந்தவன்’ என ஆசிரியரும் மாணவர்களும் கிண்டல் செய்யவே, பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டுத் தாயிடமே பாடம் பயிலத் தொடங்கினான் சிறுவன் தாமஸ். ஊரில் விளையும் பொருட்களை புகை வண்டியில் நகரத்துக்குக் கொண்டு சென்று விற்பனை செய்தும், நகரத்தில் இருந்து பத்திரிகைகள் வாங்கி வந்து மற்ற ஸ்டேஷன்களில் விற்பனை செய்தும் சம்பாதித்தான்.

உள்நாட்டுப் போர் காரணமாக, பத்திரிகைகளுக்கு நல்ல வரவேற்பு இருப்பதை அறிந்து, ரயில்வே அதிகாரிகளின் உதவியுடன் புகை வண்டியிலேயே இயந்திரத்தை வைத்து, நகரத்துச் செய்திகளை அச்சடித்து ‘வீக்லி ஹெரால்ட்’ பத்திரிகையை விற்கத் தொடங்கினான். ஆசிரியர், அச்சடிப்பவர், விற்பனையாளர் என எல்லா வேலைகளையும் செய்த எடிசனுக்கு அப்போது வயது 15.

எடிசன் தன் முதல் கண்டுபிடிப்பாக 1868-ல் பதிவு செய்த ‘வாக்குப்பதிவு இயந்திரம்’ அரசினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தந்தி மற்றும் பங்குச்சந்தை சாதனங்களைத் தொடர்ந்து மின்சார விளக்கைக் கண்டுபிடித்ததும், உலகமே இவரைத் தலையில் வைத்துக் கொண்டாடியது. பாடும் மற்றும் பேசும் ஃபோனோ கிராப் இயந்திரம் இவரை பெரும் கோடீஸ்வரனாக்கியது. ஒலியைப் போலவே ஒளியையும் பதிவு செய்ய முடியும் என ‘சினிமா’வைக் கண்டுபிடித்ததும், ‘கண்டு பிடிப்புகளின் தந்தை’ எனப் புகழாரம் கிடைத்தது!

1914-ம் வருடம் அவரது சோதனைச் சாலையில் மிகப் பெரிய தீ விபத்து ஏற்பட்டது. ஆறுதல் சொல்ல வந்த நண்பர்களைப் பார்த்து, ‘‘தீ எவ்வளவு அழகாக எரிகிறது பாருங்கள்... ரசாயனப் பொருட்களைத் தவறான விகிதத்தில் கலந்துவிட்டேன் என்பதை, 67-வது வயதில் எனக்குக் கற்றுக்கொடுத்த இந்த தோல்வியும் எனக்குப் படிப்பினையே’’ என்றார் எடிசன் சிரித்தபடி.

தனது 81-வது வயதில் மரணமடையும் வரை 1,093 கண்டுபிடிப்புகளை எடிசன் பதிவு செய்ய முடிந்ததற்குக் காரணம், தோல்விகளை வீழ்ச்சியாகக் கருதாத இவரது தன்மையே!

## 25.‘அன்பு செலுத்துங்கள்... காலம் குறைவாகவே இருக்கிறது!’

‘அன்பு செலுத்து’ என்று யாரோ கட்டளை இட்டதுபோல் குரல் கேட்கவே, 17 வயதான ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் தூக்கத்தில் இருந்து திடுக்கிட்டு விழித்தாள். அன்றைய தினமே அவள் கண்களில் பட்ட, ‘அன்பு செலுத்துங்கள்... காலம் குறைவாகவே இருக்கிறது!’ என்று தேவாலயச் சுவரில் இருந்த வாசகம் அவளைச் சிந்திக்கவைத்தது.

அந்தச்சமயம், அவளைத் திருமணம் முடிக்க, மிகுந்த அந்தஸ்துள்ள குடும்பத்திலிருந்து ஒரு மணமகன் வந்தான். ஆனால், ‘‘என் மனதில் ஒரு விதை விழுந்திருக்கிறது. அதற்கு விடை கிடைத்த பின்னரே திருமணம்’’ என்று மறுத்துவிட்டாள். அதன்பின், ஒரு மருத்துவமனைக்குச் சென்ற ஃபிளாரன்ஸ், அங்கு நோயாளிகளின் பரிதாப நிலையைக் கண்டு அதிர்ச்சி அடைந்தாள். ‘அன்பு செலுத்து’ என்ற வாசகத்துக்கு அர்த்தம் உணர்ந்தாள். உடனே, எவ்வித அருவெறுப்பும் இன்றி நோயாளிகளைத் தொட்டுத் தூக்கி, துடைத்துச் சுத்தம் செய்தாள்.

நடந்ததைக் கேள்விப்பட்ட அவளின் பெற்றோர் கடும் கோபம் அடைந்தனர். ‘‘உனக்குத் தொற்றுநோய் வந்துவிடும். ஏன் இப்படிக் குடும்ப மானம் போகும்படி நடந்துகொள்கிறாய்? திருமணம் செய்துகொள்’’ என்று வற்புறுத்தினர். ஆனால், ஃபிளாரன்ஸோ ‘‘சாதனைகள் புரிந்து மக்கள் மனதில் இடம் பிடிக்கவெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால், ஆதரவுக்கு ஏங்கிக்கொண்டு இருக்கும் நோயாளிகளிடம் அன்பு செலுத்தி, அவர்கள் மனதில் இடம் பிடிக்கப் போகிறேன். எனக்கு வழிவிடுங்கள்... அன்பு செலுத்தக் காலம் குறைவாகவே இருக்கிறது’’ என்று பதில் சொல்லிவிட்டு மருத்துவமனைக்கு ஓடினாள்.

இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு பணக்கார குடும்பத்திலுள்ள வில்லியம் எட்வர்ட் நைட்டிங்கேல் – பிரான்சஸ் ஸ்மித் தம்பதி, 1820–ம் வருடம் இத்தாலியில் சுற்றுப் பயணம் செய்துகொண்டு இருந்தபோது, அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. பிறந்த ஊர் பெயரான ‘ஃபிளாரன்ஸ்’ என்பதையே அந்தக் குழந்தைக்குச் சூட்டினர்.

அந்தக் காலத்தில் படிக்காதவர்கள், வாழ்க்கையில் போக்கிடம் அற்றவர்கள் போன்றோர் மட்டுமே நர்ஸ் பணியில் இருந்ததால், அந்தத் துறை மட்டமாகவே மதிக்கப்பட்டது. ஆனால், 1850–ம் வருடம் லண்டன் மாநகரில், நர்ஸ் பணியில் விரும்பிச் சேர்ந்தார் ஃபிளாரன்ஸ்.


இங்கிலாந்து, பிரான்ஸ், துருக்கி ஆகிய நாடுகள் இணைந்து, 1854-ம் வருடம் ரஷ்யா மீது போர் தொடுத்தன. துருக்கியில் இங்கிலாந்து வீரர்கள் கடுமையாக காயமுற்று, கவனிப்பாரின்றி மரணமடைகிறார்கள் என்று கேள்விப்பட்டதும், ஃபிளாரன்ஸ் உடனடியாக 38 தாதிகளை அழைத்துக்கொண்டு அங்கே விரைந்தார். முதலில் சுகாதார வசதியைச் சீராக்கி, சிகிச்சை அளித்ததோடு, ஒவ்வொரு வீரரின் குடும்பக் கதையையும் கேட்டுக் கடிதம், பணம் அனுப்பி உதவினார். எல்லோரும் உறங்கிய நள்ளிரவுக்குப் பின்னரும் ஒரு கைவிளக்குடன் சென்று ஒவ்வொருவரையும் உற்றுக் கவனித்து, உதவிகள் செய்ததால், 'கைவிளக்கேந்திய காரிகை' என்று அவளை அன்போடு அழைக்கத் தொடங்கினர். அவரின் பரிவான கவனிப்பால், 48 சதவிகிதமாக இருந்த மரணவிகிதம் 2 சதவிகிதமாகக் குறைந்தது. ''எங்கள் மீது இத்தனை அன்பு செலுத்துகிறீர்களே... இதற்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்வது?'' என வீரர்கள் கேட்டபோது, ''எல்லோர் மீதும் அன்பு செலுத்துங்கள். காலம் குறைவாகவே இருக்கிறது!'' என்றார் ஃபிளாரன்ஸ்.

போர்முனையில் ஃபிளாரன்ஸ§க்குக் கிடைத்த நற்பெயரால் 50,000 பவுண்ட் நன்கொடை கிடைக்கவே, அதைக் கொண்டு மிகப் பெரிய நர்ஸ் பயிற்சி நிலையம் தொடங்கினார். 1860-ம் வருடம், ஃபிளாரன்ஸ் வெளியிட்ட 'நோட்ஸ் ஆன் நர்ஸிங்' புத்தகம்தான் இன்றைய நர்ஸ் பயிற்சிக்கும் ஆதாரமாக உள்ளது. நோய்வாய்ப்பட்டு, சுமார் 12 வருடங்கள் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவே முடியாமல் இருந்த காலத்திலும், தாதியருக்காகச் சுமார் 200 புத்தகங்கள் எழுதிய ஃபிளாரன்ஸ், தனது 90-வது வயதில் மரணமடைந்தார்!



RangaRakes tamilnavarasam.com

## 26.'பொறுமை என்பது பலவீனமல்ல; அதுவும் போராட்டமே!'



பிரான்ஸ் மற்றும் ஜப்பான் நாட்டுக்கு, 1942-ம் ஆண்டில் அடிமையாக இருந்தது வியட்நாம். வியட்நாமியர்கள் கடும் துன்பம் அடைந்து, ''இதற்கு மேலும் பொறுக்க வேண்டாம். உடனே போரிட்டு இரண்டு நாட்டுப் படைகளையும் விரட்டுவோம்'' என்று 'வியட்நாமின் போராட்டக் குழு'த் தலைவர் குயென்அய்கோக்கிடம் முறையிட்டனர்.

''இது சரியான நேரம் அல்ல; இன்னும் கொஞ்சம் பொறுமையாகக் காத்திருப்போம்'' என்றார்.

''பட்டினியாலும், ராணுவ நெருக்-கடியாலும் மக்கள் தினம் தினம் செத்துக்கொண்டு இ-ருக்கும்போது போரிடாமல் பொறுமை காப்பது கோழைத்தனம்'' என்றார்கள் ஜனங்கள்.

''நீங்கள் நினைப்பது போல் பொறுமை என்பது பலவீனமல்ல; அதுவும் போராட்டமே! விரைவில் பிரான்ஸ் - ஜப்பான் இடையில் மீண்டும் மோதல் ஏற்படும். அல்லது, ஏற்பட வைப்போம். அதுவரை பொறுமை காப்போம்'' என்றார் குயென். அவர் சொன்னபடியே ஜப்பான் மீண்டும் பிரெஞ்சுப் படைமீது தாக்குதல் தொடுக்கவே, அவர்கள் ஆயுதங்களை வியட்நாம் போராட்டக் குழுவிடம் ஒப்படைத்துவிட்டு ஓடினார்கள். ஆயுதங்களைக் கைப்பற்றிய வியட்நாம் போர்ப் படையினர் அதைக்கொண்டு ஜப்பான் படைகளை விரட்டியடித்தனர். 1945-ம் வருடம் சுதந்திர வியட்நாம் அரசின் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார் குயென் என்கிற ஹோசிமின்.

வியட்நாமில் சிம்லி-யன் என்னும் ஊரில் 1890-ம் வருடம் பிறந்தார் குயென்-டாட்தாங். கல்லூரியில் படித்துக்கொண்டு இருந்தபோதே பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராக மாணவர்களுடன் போராடத் தொடங்கி-னார். ஆனால், அந்தப் போராட்டம் கொடூரமாக நசுக்கப்பட்டது. பொறுமையாக இருந்து சரியான நேரத்-தில் போராடினால்தான் வெற்றி கிடைக்கும் என்பதைப் புரிந்துகொண்ட குயென், 1911-ம் ஆண்டு முதல் பல்வேறு நாடுகளில் சுற்றி, இறுதியாக பிரான்ஸ் நாட்டில் 'குயென்அய்கோக்' என்ற பெயருடன் அங்கிருந்த கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து, வியட்நாம் விடுதலைக்காக உரிமைக்குரல் கொடுத்தார்.

அதனால் பிரான்ஸ் அரசு அவரை கைதுசெய்து தூக்கிலிட உத்தரவு பிறப்பித்ததும், மாறுவேடத்தில் ரஷ்யாவுக்குத் தப்பியோடினார். ரஷ்யாவில் இருந்த-படியே குயென் வழிகாட்ட, வியட்-நாமில் கம்யூனிஸக் கட்சி தொடங்கப்-பட்டு, போரிடத் தயாராக புரட்சிக் குழுவும் உருவானது. 1942-ம் வருடம் தாய்நாடு திரும்பிய குயெனின் பொறுமையான போராட்டத்தின் பரிசாக 1945-ம் வருடம் வியட்நாமுக்கு விடுதலை கிடைத்தது.

அமெரிக்கா, 1960-ம் வருடம் வியட்நாம் மீது போர் தொடுத்தது. ''இந்தப் போர் ஐந்து, பத்து... ஏன், இருபது ஆண்டுகள்கூட நீடிக்கலாம். நாட்டின் மொத்த வளங்களும் அழிய நேரிடலாம். ஆனாலும், இறுதிவரை போராடி வெற்றி பெறுவோம். அதன் பின், இதனினும் வலிமை வாய்ந்த நாடாக வியட்நாமை நிர்மாணிப்போம்'' என்று வானொலியில் முழங்கினார் ஹோசிமின். கடைசி நிமிடம்வரை போர் ஆலோசனையில் இருந்த ஹோசிமின், உடல்நலம் குன்றி 79-ம் வயதில் மரணமடைந்தார். ஆனாலும் அவர் வழிகாட்டியபடி, பொறுமையாகக் காத்திருந்து எதிர்பாராத தாக்குதல் நடத்தி உலகப் பேரரசு என மார்தட்டிய அமெரிக்கப் படைகளை 1975-ம் வருடம் விரட்டியடித்து, வரலாற்றில் இடம்-பிடித்தது வியட்நாம்.

## 27.‘எதை இழந்தீர்கள் என்பதல்ல; என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்!’



அது 2005-ம் ஆண்டு. வீல் சேரில் அமர்ந்தபடி தொலைக்காட்சி நிலையத்துக்கு செவிலியர்கள் துணையுடன் வந்தார் 63 வயதான ஸ்டீபன் ஹாஃக்கின்ஸ். கை, கால், வயிறு, தலை என உடலின் எந்தப் பாகமுமே செயல்படாத நிலை. அவரது வீல் சேரில், வலது கண் அசைவின் மூலமாக இயங்கும் கம்ப்யூட்டரும், வாய்ஸ் ஸின்தைசரும் இருந்தது. பிரிட்டிஷ் டே டைம் டாக் ஷோ நிகழ்ச்சி நடத்-திய ரிச்சர்ட் மற்றும் ஜூடி கேட்ட கேள்வி-களுக்கு கம்ப்யூட்டர் மூலம் எளிதாகப் பதில் சொன்னார் ஸ்டீபன்.

‘‘பெரு-வெடிப்பு எனப்படும் ‘பிக் பாங்’ ஏற்படும் முன்னர், அண்ட வெளியில் என்ன இருந்தது?’’ என்று கேட்டார் ரிச்சர்ட். ‘‘வட துருவத்தின் வடக்கில் என்ன இருக்குமோ அது!’’ என்று சாதுர்யமாகப் பதில் சொல்லி அனைவரையும் அசத்தினார் ஸ்டீபன். கை தட்டிப் பாராட்டியவர்கள், ‘‘வாழ்க்கை எப்படி இருக்கிறது?’’ எனக் கேட்டார்கள். ‘‘முன்னைவிட சுவாரஸ்யமாகவும், சவால் நிறைந்ததாகவும், சந்தோஷ-மாகவும் இருக்கிறது’’ என்றார். ‘‘இந்த உடல்நிலையுடன் உண்மை-யில் சந்தோஷமாக இருக்க முடியுமா?’’ என்று தயங்கித் தயங்கிக் கேட்-டார்கள். ‘‘எதை இழந்தீர்கள் என்பதல்ல; என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்!’’ என்றார் ஸ்டீபன் ஹாஃக்கின்ஸ்.

பிரிட்டனில் 1942-ம் வருடம் பிறந்த ஸ்டீபன், படிப்பில் படு சுட்டியாக இருந்-தார். ஆக்ஸ்போர்டு யூனிவர்சிட்டியில் மூன்றாவது வருடம் படித்துக்கொண்டு இ-ருந்தபோது, தன் உடல் தளர்ந்திருப்பதை உணர்ந்தார். காரணமின்றி அடிக்கடி கீழே விழுந்தார். 21-வது வயதில் உட-லெங்கும் தசை மாதிரிகளை வெட்டி- எடுத்துப் பரி-சோதித்தும், மருத்துவர்-களால் தெளிவான முடிவுக்கு வரமுடிய-வில்லை. ஆனால், இரண்டு அல்லது மூன்று வருடத்துக்கு மேல் உயிர் வாழ முடியாது என்பதை மட்டும் தீர்மான-மாகச் சொன்னார்கள்.

துயரத்திலிருந்த ஸ்டீபனுக்கு எதிர் வார்டில் ஒரு சிறுவன் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டான். சில நாட்களிலேயே எதிர்பாராமல் நிகழ்ந்த அந்தச் சிறுவனின் மரணம், ஸ்டீபனுக்கு பயம் தருவதற்குப் பதிலாகத் தைரியம் கொடுத்தது. அந்தச் சிறுவனைவிட தான் மிகவும் அதிர்ஷ்ட-சாலி என்பதை உணர்ந்தார். உடல் தன் கட்டுப்பாட்டில் இல்லாவிட்டாலும் மூளையும் சிந்தனையும் முழு உற்சாகத்-துடன் இருப்பதை உணர்ந்தார். வீல் சேரில் இருந்தபடியே பல்கலைக் கழக ஆய்-வினை முடித்து, பேராசிரியர் ஆனார். திருமணம் முடிந்து, மூன்று குழந்தைகளும் பிறந்தன.

ஏ.எல்.எஸ். எனக் கண்டறியப்பட்ட நரம்பு நோய் முற்றியதால், 1985-ம் வருடம் அவரது உடல் முழுமையாகச் செயலிழந்தது. ஆனாலும், நம்பிக்கை இழக்காமல் வலக் கண்ணை மட்டுமே அசைத்து எழுத்துக்களை அடையாளம் காட்டிப் பாடம் நடத்தியதுடன், வரலாற்றுத் திருப்புமுனையான புத்தகம் ஒன்றும் எழுதினார். 'எ ப்ரீஃப் ஹிஸ்டரி ஆஃப் டைம்' என்கிற அந்தப் புத்தகம் ஸ்டீபனின் புகழை உச்சிக்கு உயர்த்தியது. கலிஃபோர்னியாவைச் சேர்ந்த கணினி நிபுணர் ஒருவர் ஸ்டீபனின் கண்ணசைவுக்கு இயங்கும் கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் கண்டு-பிடித்து, வீல் சேரில் பொருத்தித் தர, சிரமம் குறைந்து அதிகமாகச் சிந்தித்து நிறைய எழுதிக் குவித்தார் ஸ்டீபன்.


'காலம் எப்போது தொடங்கி-யது? எப்போது முடியும்? காலத்தை பின்னோக்கிச் சென்று காண முடியுமா? விண்வெளிக்கு எல்லை உண்டா?' என எல்லோர் மனதிலும் இருக்கும் கேள்விகளுக்கு அறிவியல் ரீதியாக பதில் சொல்லி மலைக்க வைத்த ஸ்டீபன் ஹாஃக்கின்ஸின் வாழ்வு, மருத்துவர்களுக்கு இன்றும் ஒரு புதிர்தான். உடல் நிலை மோசமான கால-கட்டத்தில் மனைவியும், குழந்தைகளும் அவரை விட்டுப் பிரிந்தனர். ஸ்டீபன் அப்போதும் மனம் தளராமல், தன்னை அன்புடன் கவனித்துக் கொண்ட செவிலியை இரண்டாவதாகத் திருமணம் முடித்தார்.

''இந்த நோயால் பாதிக்கப்-பட்டதால்தான் வெளி உலக கவனச் சிதறல்கள் இல்லாமல், முழுக் கவனமும் செலுத்தி என்னால் புத்தகங்கள் எழுத முடிகிறது. உண்மையில் நான் அதிர்ஷ்டம் செய்தவன்'' என்று ஸ்டீபன் நம்பிக்கையுடன் பேசக் காரணம், 'எதை இழந்தீர்கள் என்பதல்ல; எது மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்!' என்கிற மந்திரச் சொல்லின் மகத்-துவம்தான்!



RangaRakes tamilnavarasam.com

## 28.‘பிரச்னைகளைக் கண்டு விலகி ஓடாதீர்கள்... எதிர்கொண்டு வெற்றி பெறுங்கள்!’



1981-ம் ஆண்டு. மருத்துவத்துக்காக அமெரிக்கா சென்ற ரஜனீஷ், சீடர்களின் அன்புக்கு இணங்க ஆசிரமம் தொடங்கி அங்கேயே தங்கினார். ரஜனீஷின் புரட்சிக் கருத்துகளால் விரைவிலேயே ஆசிரமம் புகழடைந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வரத் தொடங்கினர். ‘ரஜனீஷ்புரம்’ எனப் பெயரிடப்பட்ட ஆசிரமத்தில் வீடுகள், தியான மண்டபங்கள், சாலைகள், மருத்துவமனை-கள், பள்ளிகள் தொடங்கப்பட்டு, குட்டியாக ஒரு விமான நிலையமும் ஏற்படுத்தப்பட்டது. பரிசுகளாக வந்த 93 ரோல்ஸ்ராய்ஸ் கார்களில் தினம் ஒன்றைப் பயன்படுத்திய ரஜனீஷ், ஒரு தனி ராஜாங்கமே நடத்திக்-கொண்டு இருந்தார்.

தங்களின் சொத்துக்களை ஆசிரமத்-துக்கு எழுதிவைத்து ரஜனீஷிடம் தஞ்ச-மடையும் அமெரிக்கர்கள் அதிகரிக்கவே அதிர்ச்சியடைந்த அமெரிக்க அரசு, ஆசிரமத்தை முடக்கும் வெலைகளில் இறங்கியது. ரஜனீஷின் ஆசிரமத்தில் 1984-ம் வருடம் ஆயிரக்கணக்கான சீடர்கள் தற்கொலைக்கு முயன்றதாக பொய்க்குற்றச்சாட்டைப் பரப்பியது. அதேநேரம், ஆசிரம நிர்வாகி ஷீலா பெரும் சொத்துக்களுடன் தலைமறைவாகிவிடவே, ஆசிரமத்துக்குள் நுழைந்தது போலீஸ். ‘அமெரிக்க அரசு சதிவலை பின்னுகிறது, தப்பிச் செல்லுங்கள்’ என்று சீடர்கள் ரஜினீஷிடம் கெஞ்சினார்கள். அத்தனை நாளும் சீடர்களுக்கு போதித்த ‘பிரச்னை-களைக் கண்டு விலகி ஓடாதீர்கள்... எதிர்-கொண்டு வெற்றி பெறுங்கள்’ என்ற மந்திரத்-தையே உரக்கச் சொன்னார் ரஜனீஷ்.

ஆசிரமத்தில் ஊழலும், விசாவில் மோசடியும் இருப்பதாக ரஜனீஷைக் கைதுசெய்து வலுக்கட்டாயமாக நாட்டைவிட்டு வெளியேற்றியது அமெரிக்க அரசு.

1931-ம் ஆண்டு மத்தியப் பிரதேசத்தில் குச்வாடா என்ற சிறிய கிராமத்தில் ஜெயின் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் ரஜனீஷ் சந்திரமோகன். ‘ஏழாவது வயதில் மரணமடைந்துவிடுவார்’ என ஜோசியர் கணிக்கவே, பயந்துபோன பெற்றோர், அவரை பாட்டி வீட்டுக்கு அனுப்பினர். ஏழு வயதுவரை சுதந்திரப் பறவையாகத் திரிந்த---வருக்கு இனி மரணம் வராது என ஜோதிடர் சொன்னபிறகே படிக்கவைத்தனர்.

1953-ம் வருடம் தத்துவம் படித்த-போது, தன்னிடம் ஒரு தனித்துவம் இருப்-பதை உணர்ந்தார் ரஜனீஷ். பிறகு பல்கலைக்-கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்-ததும், சிறு கூட்டத்தினரிடம் பேசத் தொடங்-கினார். அந்த வட்டம் விரிவடையவே, வேலையை விடுத்து, 'பகவான் ரஜனீஷ்' ஆக மாறி மும்பையிலும் பின்னர் பூனா-விலும் ஆசிரமம் அமைத்துப் பரபரப்பாகச் செயல்படத் தொடங்கினார். எல்லா மதமும் செக்ஸுக்கு அதிகக் கட்டுப்பாடுகள் விதித்தபோது, 'செக்ஸை ஒரு பிரச்னை-யாக நினைத்து விலகி ஓடாதீர்கள். அதனை முழுமையாக அனுபவித்து வெற்றி-கொள்ளுங்கள்' என்று ரஜனீஷ் சொன்னது இந்தியாவெங்கும் அதிர்ச்சியலை ஏற்படுத்தியது. 'செக்ஸ் சாமியார்' என்ற பெயர் சூட்டி, கடுமையான விமர்சித்தனர். இந்நேரம் கடுமையான முதுகுவலியும் சர்க்கரை நோயும் ஏற்படவே, சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றார், அங்கே மக்களது ஆதரவுடன் ஆன்மிகப் புரட்சியை உண்டாக்கவே மறுபடியும் நாடு கடத்தப்பட்டார்.

செக்ஸ் புரட்சியாளர், போதை அடிமை என அமெரிக்கா திட்டமிட்டு வதந்தி பரப்பியிருந்ததால், சுற்றுலா விசாவில் ஜெர்மனி போன ரஜனீஷ், துப்பாக்கி முனையில் நாடு கடத்தப்பட்டார். முதலில் குடியுரிமை வழங்கிய உருகுவே அரசாங்கம் அமெரிக்காவின் கடன் மற்றும் பொருளாதாரத் தடை மிரட்டலால் ரஜனீஷுக்கு வழங்கிய குடியுரிமையைத் திரும்பப் பெற்றது. அதனால், 1987-ம் ஆண்டு மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பி பூனா ஆசிரமத்தில் பணியைத் தொடர்ந்தார்.

ரஜனீஷ் என்ற பெயரை, 'ஓஷோ' என்று மாற்றி, 'வாழ்க்கையை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள், பிரச்னைகளைக் கண்டு விலகி ஓடினால் அது இன்னும் பெரிதாகும். அதனால், எதிர்த்து நின்று வெற்றி பெறுங்கள்' என்று தினமும் பிரசங்கமும் தியானமும் நடத்தி மக்களிடம் நம்பிக்கை விதைத்தார்.

1990-ம் ஆண்டு நாடித்துடிப்பு குறையத் தொடங்கிய நேரத்தில், 'மரணத்தில் இருந்து என்னை தப்பவைக்க நினைக்காதீர்கள், நான் அதனை நேருக்கு நேர் சந்திக்க வேண்டும்' என்று மருத்துவ சிகிச்சையை மறுத்து மரணமடைந்தார்.

## 29.‘பாதை இல்லையென்று கலங்காதே... உருவாக்கு!’

விளாடிமிர் இல்யிச் உல்யனோவ் என்னும் இயற்பெயர் கொண்ட லெனின், 17-வது வயதில் கைதுசெய்-யப்பட்டு காவல் -நிலையம் கொண்டுவரப்பட்-டார். லெனினிடம் போலீஸ் அதி-காரி, ‘‘உன் அண்ணன் ஜார் மன்னருக்கு எதிரான தீவிரவாதத்தில் இறங்கியதால் தூக்கிலிடப்பட்டு உயிர் இழந்தான். நீயும் ஏன் சுவருடன் மோதி, மண்டையை உடைத்துக் கொள்கிறாய்?’’ என்று கேட்டார்.

‘‘என் எதிரே சுவர் இருப்பது உண்மை-தான். ஆனால், அது பலவீனமானது. முட்டினாலே உடைந்துபோகும்’’ என்றார் லெனின் கோபத்-துடன்.

‘‘தீவிரவாதம், மக்கள் போராட்டம் போன்றவற்றை நசுக்கிவிடுவோம். உன்னால் எதுவும் செய்ய முடியாது’’ என்ற போலீஸ் அதிகாரியிடம், ‘‘ ‘பாதை இல்லையென்று கலங்காதே... உருவாக்கு!’என புரட்சி இலக்கியங்-கள் எனக்குப் போதித்திருக்கின்றன’’ என்று உறுதியுடன் சொன்னார். அப்படியே உருவாக்கவும் செய்தார்.

லெனின் 1870-ல் பிறந்தார். அலெக்சாண்-டரையும், கார்ல் மார்க்ஸை-யும் மற்றும் புரட்சி இலக்கியங்களையும் லெனினுக்கு அறிமுகப்படுத்தினார் அவரது அண்ணன். தீவிரவாதப் போராட்-டத்தில் இறங்கியதால், அண்ணன் தூக்கிலிடப்பட்டார். ஜெயிலுக்குப் போன-தால் லெனினுக்குச் சட்டக் கல்லூரி-யில் படிக்க அனுமதி மறுக்கப்பட்டது. ஆனாலும், நான்கு ஆண்டுகளில் முடிக்க வேண்டிய சட்டப் படிப்பை ஒன்றரை ஆண்டுகளிலேயே கல்லூரிக்குப் போகாமலே முடித்து, வழக்குரைஞராக மாறினார் லெனின்.

மார்க்ஸிச தத்துவத்தைப் பின்பற்றி, தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் சுதந்திரம் பெறுவதில்தான் ரஷ்யாவின் எதிர்காலம் இருக்கிறது எனத் தீர்மானமாக நம்பி, ‘தொழிலாளர் விடுதலை இயக்கம்’ தொடங்கினார். இந்த இயக்கத்தின் மூலம் மார்க்ஸ் கொள்கைகளை நாடெங்கும் பரப்பி, தொழிலாளர்களிடம் சோஷலிசப் பிரசாரம் செய்தார். மக்களிடம் லெனி-னுக்கு செல்வாக்கு பெருகுவதைக் கண்ட ஜார் அரசு, 1895-ல் அவரைக் கைது செய்து சைபீரியாவுக்கு நாடு கடத்தியது.


1900-ம் வருடம் விடுதலையானதும், ‘தீப்பொறி’ (Spark) என்ற பத்திரிகையை நடத்தி, தொழிலாளர்களை புரட்சிக்குத் தயார்ப்படுத்தினார். 1905-ம் ஆண்டு லெனின் வழிகாட்டுதலில் நடந்த தொழிலாளர் புரட்சி, ராணுவத்-தால் அடக்கப்பட்டது. லெனினைக் கைது செய்ய போலீஸார் தீவிர வேட்டையில் ஈடுபடவே, ரஷ்யாவைவிட்டு வெளியேறி, வெளிநாடுகளில் இருந்து போராட்-டத்துக்கு வழிகாட்டத் தொடங்கினார் லெனின்.

முதலாம் உலகப் போர் (1914) காரணமாக ரஷ்யாவில் உணவுப் பொருட்களுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு, வீதிகளில் மக்கள் உணவு கேட்டுப் போராடத் தொடங்கினர். அதிருப்தியடைந்த சோவியத் படைவீரர்கள் பலர் ராணுவத்தில் இருந்து வெளியேற, ‘புரட்சிக்குச் சரியான தருணம் இதுவே’ என்பதை உணர்ந்த லெனின், 1917-ம் ஆண்டு ரஷ்யா வந்தார். அவரின் தூண்டுதலால் போராட்டக் குழு-வினர் ஆங்காங்கே ரயில்வே ஸ்டேஷன், டெலிபோன் அலுவலகம், வங்கி-களைக் கைப்பற்றினர். ராணுவத்திலிருந்து விலகிய வீரர்கள், போராட்டக் குழுவுடன் இணைந்து முதலாளிகளையும், பண்ணை அதிபர்களையும் எதிர்த்துப் போராடி நிலங்கள், பணம் போன்றவற்றைக் கைப்பற்றினர்.

‘எப்படிப்பட்ட ஆட்சி அமைப்பது?’ என்ற கேள்வி எழுந்தபோது, ‘‘பாதை இல்லையென்று கலங்காதே... உருவாக்கு!’’ என்று சொன்ன லெனின், உலகிலேயே முதன்முறையாக தொழிலாளர்கள் பங்குபெறும் கம்யூனிஸ்ட் ஆட்சியை உருவாக்கினார். நிலம், பொருள், பணம், உழைப்பு, மனிதன் என எல்லாமே அரசின் உடைமையானது. சுதந்திரத்தைவிட மனிதனின் பசிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ரஷ்யப் புரட்சி பெரும் வெற்றி அடைந்தது.

1918-ல் ரஷ்யப் பெண் ஒருத்தியால் சுடப்பட்டு, தப்பி உயிர் பிழைத்த லெனின், உலகெங்கும் கம்யூனிஸ்ட் இயக்கத்தை வளரவைத்து 54-ம் வயதில் மூளை நரம்பு வெடித்து மரணம் அடைந்தார். லெனின் காட்டிய புதிய வழியால் இன்று உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் உரிமைகளுக்காகப் போர்க் குரல் கொடுத்து வருகிறது!

## 30.‘சந்தோஷம் என்பது பணத்தில் இல்லை; வெற்றியில்தான் இருக்கிறது!’



வருடம் 1863.

அதுவரை தான் சம்பாதித்து வைத்திருந்த அத்தனை பணத்தையும் ஒன்று சேர்த்து, கச்சா எண்ணெய் சுத்திகரித்து விற்கும் வியாபாரத்தில் இறங்கினார் ராக்ஃ-பெல்லர்.

நீராவியில் ஓடிய ரயில் மட்டுமே அப்போது பெரிய போக்குவரத்துச் சக்தியாக விளங்கியது என்பதால், பெட்ரோலின் மகத்துவம் எவருக்கும் புரியவில்லை.

ஏற்கெனவே இந்தத் தொழிலில் இருந்தவர்களைவிட பெட்ரோல், மண்ணெண்ணெய் போன்றவற்றைக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டும்; அதேநேரம், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றி வேண்டும் என விரும்பினார் ராக்ஃபெல்லர். உற்பத்தி இடத்திலிருந்து விற்பனை இடங்களுக்கு அனுப்புவதற்கான ரயில் கட்டணம் மிக அதிகமாக இருந்தது. ரயில்வே நிர்வாகத்திடம் பேசி, தினமும் குறிப்பிட்ட அளவு பேரல்கள் அனுப்புவ-தாகவும், அதற்காக கட்டணச் சலுகை தரவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் வைக்க, நிர்வாகம் ஏற்றுக்கொண்டது. போக்குவரத்துச் செலவு கணிசமாகக் குறையவே, விலை குறைத்து விற்பனை செய்தார். வியாபாரம் சூடு பிடித்ததும் போட்டியில் இருந்த சில கம்பெனிகளை அதிக விலை கொடுத்து வாங்கினார். விற்பனைக்கு மறுத்தவர்களைக் கூட்டாளியாக்கிக் கொண்டார்.


கார்கள் கண்டுபிடிக்கப்பட்டு பெட்ரோல், டீசல் போன்ற பொருட்களின் விற்பனை உச்சத்தைத் தொட்ட 1872-ம் வருடம், அமெரிக்கா முழுவதும் ஆயில் வியாபாரம் செய்யும் ஒரே நிறுவனமாக இருந்தது ராக்ஃபெல்லரின் ‘ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனி’தான். போட்டி நிறுவனம் இல்லை என்பதால், பணம் கொட்டோ கொட்டென்று கொட்ட, உலகின் நம்பர் ஒன் பணக்காரர் ஆகிவிட்டார். ‘‘கோடிக் கோடியாகப் பணம் குவித்துவிட்டீர்கள். இப்போது சந்தோஷம்தானா?’’ என்று பத்திரிகை-யாளர்கள் கேட்டபோது, ‘‘சந்தோஷம் என்பது பணத்தில் இல்லை; வெற்றியில்-தான் இருக்கிறது!’’ என்றார்.

அமெரிக்காவில் ஒரு சாதாரண விற்பனைப் பிரதிநிதிக்கு மகனாக, 1839-ம் வருடம் பிறந்தார் ராக்ஃபெல்லர். வறுமையான சூழலில் தொடர்ந்து படிக்க விருப்பமின்றி, தன் 16-வது வயதில் ஒரு கமிஷன் நிறுவனத்தில் ஒரு நாளைக்கு 50 செண்ட் சம்பளத்தில் வேலைக்குச் சேர்ந்தார். தொடர்ந்து இரண்டு வருடம் கடுமையாக உழைத்தும், சம்பளம் உயரவில்லை. எனவே, ஒரு நண்பருடன் சேர்ந்து தனியே கமிஷன் வியாபாரம் தொடங்கினார். ஓஹோவென வியாபாரம் நடந்துகொண்டு இருந்தபோதுதான், அமெரிக்காவில் கச்சா எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது. எதிர்காலத்தில் எண்ணெய் வியாபாரம்-தான் பெரும் வளர்ச்சியடையும் என துல்லியமாகக் கணித்த ராக்ஃபெல்லர், 1863-ம் வருடம் அந்தத் தொழிலில் இறங்கினார். ''உனக்குப் பணம் சம்பாதிப்பதற்கு ஏன் இவ்வளவு ஆசை?'' என்று நண்பர்கள் கேட்டபோது, ''பணம் சம்பாதிப்பதைவிட, தொழிலில் முதல்வனாக இருக்கவே விரும்புகிறேன். சந்தோஷம் என்பது பணத்தில் இல்லை; எனக்குக் கிடைக்கும் வெற்றியில்தான் இருக்கிறது!'' என்றார். சொன்னது போலவே, தொழிலில் முதல்வனாக இருந்து மிக அதிகமாகப் பணம் சம்பாதித்து, 1910 முதல் 1937 வரை உலகின் பெரும் பணக்காரராகத் திகழ்ந்தார்.

முதல் 50 வருடங்களில் சம்பாதித்த பணத்தை, அடுத்து வாழ்ந்த 48 வருடங்களில் நல்ல வழிகளில் செலவிடுவதில் அதிக ஆர்வம் காட்டினார் ராக்ஃபெல்லர். மருத்துவ ஆராய்ச்சிக்கென 'ராக்ஃபெல்லர் யூனிவர்சிட்டி', மருத்துவ சேவைக்-கென 'ராக்ஃபெல்லர் ஃபவுண்டேஷன்' எனப் பல்வேறு சேவை நிறுவனங்கள் தொடங்கி, அமெரிக்காவின் முன்னேற்றத்திலும் முக்கியப் பங்கு வகித்தார்.

தான் எதிர்பார்த்ததை விடவும் அதிகமாகச் சம்பாதித்து வெற்றி கண்ட ராக்ஃபெல்லர், 100 வயது வரை வாழ வேண்டும் என்கிற தனது ஆசை மட்டும் நிறைவேறாமல், 98 வயதில் மரணம் அடைந்தார்!

## 31. ‘பலமாகத் தட்டுபவன்தான், கதவு திறந்தே இருப்பதை அறிவான்!’



ரவீந்திரநாத் தாகூர் எழுதிய ‘கீதாஞ்சலி’ கவிதை நூலுக்கு, 1913-ம் ஆண்டு உலகின் மிக உயரிய இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. கொல்கத்தாவுக்கு அருகே சாந்திநிகேதன் கல்விக்கூடத்தில் தங்கியிருந்த கவிஞரைப் பாராட்டு-வதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் கூட்டம் கூட்ட-மாகக் குவிந்தார்கள். ஆயிர-மாயிரம் பேர் பாராட்டினாலும் மற்றொருபுறம் வயிறு எரியும் இலக்கியவாதிகளும் இருக்கத்தான் செய்தார்கள்.

‘‘ஆங்கிலத்தில் ‘கீதாஞ்சலி’ மொழிபெயர்க்கப்-படாமல் இருந்தால், பரிசு கிடைத்திருக்குமா? இந்த விருது ஆங்கிலேயர்கள் வாங்கிக் கொடுத்ததா?’’ என்பன போன்ற விமர்சனங்கள் எழுந்தன. உடனே ஆவேசமடைந்த தாகூர், ‘‘நம் நாட்டில் என் கவிதை போற்றப்பட-வில்லை. அதனால், உலக அளவில் வெற்றிபெற விரும்பியே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தேன். வெற்றிக்கான வாய்ப்புகள் கொட்டிக் கிடந்தாலும், பலர் அதனை அறிவதே இல்லை. ‘பலமாகத் தட்டுபவன்தான், கதவு திறந்தே இருப்பதை அறிவான்’ ’’ என்று பதில் கொடுத்தார்.

கொல்கத்தாவில், 1861-ம் வருடம், ஒரு பணக்காரக் குடும்பத்தில் 14-வது கடைசி குழந்தையாகப் பிறந்தார் ரவீந்திரநாத் தாகூர். வீட்டிலேயே அறிவியல், கணிதம், வரலாறு, பூகோளம், வடமொழி, வங்காளம், ஆங்கிலம், இசை, ஓவியம், உடற்பயிற்சி என எல்லா கலைகளையும் கற்கத் தொடங்கி, ஏழாவது வயதிலேயே கவிதை புனையவும் தொடங்கினார். 1877-ம் ஆண்டு வெளியான தாகூரின் முதல் நாடகத் தொகுதியில், வங்காள மொழியின் முதல் சிறுகதையும் இடம் பெற்றது. வழக்கறிஞர் பட்டம் பெறுவதற்காக இங்கிலாந்து சென்ற தாகூர், அந்தப் படிப்பு பிடிக்காமல் இரண்டே வருடத்தில் இந்தியா திரும்பினார். 22-வது வயதில் திருமணம் முடிந்ததும் குடும்ப நிர்வாகத்தைக் கையில் எடுத்துக்-கொண்-டார். 1901-ம் வருடம், சாந்திநிகேதனில் ஓர் ஆசிரமப் பள்ளியை நிறுவி, அங்கேயே தங்கினார். அங்கு மாணவர்களுக்குத் தாய்-மொழியில் படிப்பு கற்பிக்கப்பட்டதுடன் தோட்டவேலை, உடற்பயிற்சி, சமூக-சேவை, விளையாட்டு என அத்தனை கலைகளும் கற்பிக்கப்பட்டன.

சுதந்திரப் போராட்டத்தில் நேரடியாக இறங்காமல் இருந்த தாகூர், ஆங்கிலேயர்கள் வங்கத்-தினை இரண்டாகப் பிரிக்க முயன்றபோது, தலைமையேற்று போராட்டத்தில் குதித்தார். ஆனால், காங்கிரஸ் கட்சியில் மிதவாதம், தீவிரவாதம் எனப் பிரிவினைகள் தோன்றியது மட்டுமின்றி முஸ்லிம், இந்துக்கள் பிரச்னை-களும் தலைதூக்கவே நேரடி அரசியலில் இருந்து வெளியேறி-னார். பல்வேறு நாடுகளுக்கு இலக்கியப் பயணம் மேற்கொண்ட நேரத்தில்தான், கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

‘கீதாஞ்சலி’க்கு நோபல் பரிசு கிடைத்ததும், ஆங்கில அரசும் ‘சர்’ பட்டம் கொடுத்துக் கௌரவித்தது. ஆனால், 1919-ம் ஆண்டில் நடந்த ‘ஜாலியன் வாலாபாக் படுகொலை’யால் அதிர்ச்சியடைந்த தாகூர், உடனே ஆங்கில அரசின் பட்டத்தைத் தூக்கி எறிந்து, தான் ஆங்கிலேயரின் விசு-வாசி அல்ல என்பதை வெளிப்படுத்தினார். காந்தியடிகளுடன் நட்போடு இருந்தாலும், கைராட்டையின் மூலம் சுதந்திரம் பெறுவதை விரும்பாமல், ‘பலமாகத் தட்டுபவன்தான், கதவு திறந்தே இருப்-பதை அறிவான்!’ என்று உரக்கச் சொன்னார்.

உலகிலேயே மிகச் சிறந்த கல்விக்கூடத்-தினை உருவாக்க-வேண்டும் என்ற தாகூரின் ஆசை 60-வது வயதில் நிறைவேறியது. ‘விசுவபாரதி’ என்ற உலகப் பல்கலைக்கழகத்தை சாந்திநிகேதனத்தில் உரு-வாக்கி, நோபல் பரிசுடன் கிடைத்த பணம், தனது சொத்து-கள் மற்றும் புத்தக உரிமை-களையும் இந்தப் பல்கலைக் கழகத்துக்கே எழுதி வைத்தார்.

ஒரு கவிதையில், ‘மரணம் வந்து கதவைத் தட்டும் நாளில் நீ என்ன செய்வாய்?’ என்று கேள்வி கேட்டு, ‘வந்த என் விருந்தாளியின் முன்னே வட்டில் நிறைய என் வாழ்க்கையைப் பரிமாறுவேன். வெறும் கையுடன் திரும்பவிடவே மாட்டேன்’ என்று பதிலும் சொல்லியிருப்பார் தாகூர். அப்படியே அவரது 80-வது வயதில் ஒரு கவிதை-யைச் சொல்லி முடித்து, கண் மூடிய ஒரு மணி நேரத்தில் அமைதி-யாக மரணத்தைத் தழுவினார்.

## 32. ‘தோல்வி அடைந்துவிடுவோமோ என்று அச்சப்படுபவன், வெற்றி பெற மாட்டான்!’



வருடம் 1211. மங்கோலியப் பேரரசன் செங்கிஸ்கான், சீனாவின் யான்ஜிங்க் (இன்றைய பெய்ஜிங்) நகரைப் பிடிப்பதற்காக, தன் படையுடன் கிளம்பினார்.

‘‘உடனே சரணடையுங்கள். இல்லாவிட்டால் நிர்மூலம் செய்துவிடுவோம்’’ என்று, அரச தூதுவராக வந்த ஷாங்சூனை மிரட்டி அனுப்பினார். வழியெங்கும் சீனப் படைவீரர்களின் பிணங்கள் சின்னாபின்னாமாகச் சிதைக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு மிரண்டுபோய், அரசரிடம் தகவலைச் சொன்னார் ஷாங்சூன். சீன அரசர் கோபாவேசத்துடன் போருக்குக் கிளம்பினாலும், அவரது படைவீரர்களிடம் செங்கிஸ்கானின் செயல்கள் பீதியை உருவாக்கியிருந்தன. நாட்டுக்குள் நுழைந்த செங்கிஸ்கான் படையுடன் சீனப் படைகள் மோதினாலும், பயத்தின் பிடியில் இருந்த அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. கூட்டம் கூட்டமாகப் படைவீரர்கள் சரணடையவே, யான்ஜிங்க் நகர் வீழ்ந்தது. அரசர் விரட்டியடிக்கப்பட்டார்.

‘இத்தனை எளிதான வெற்றியை எதிர்பார்த்தீர்களா?’ என்று செங்கிஸ்கானிடம் படைத்தளபதி கேட்க, ‘‘தோல்வி அடைந்துவிடுவோமோ என்று அச்சப்படுபவன், வெற்றி பெற மாட்டான்’’ என்பது எனக்குத் தெரியும். இதுதான் என்னுடைய போர்த் தந்திரம். என் மீது இருக்கும் அச்சத்தை வைத்து, இந்த உலகம் முழுவதையும் வெற்றி கொள்வேன்’’ என்றான்.

வருடம் 1162.

மங்கோலியர்கள் பல்வேறு குழுவாகச் சிதறிக் கிடந்த காலகட்டத்தில், ஒரு மலைசாதிக் குழுவின் தலைவரான ‘யெஸ்சூஹெய்’யின் மூத்த மகனாகப் பிறந்தான் டேமுஜின். 13 வயதான சமயத்தில், டேமுஜினின் தந்தை எதிர்க்குழுவினரால் விஷம் கொடுத்துக் கொல்லப்படவே, அப்போதே டேமுஜினைத் தலைவனாக்க முயற்சிகள் நடந்தன. ஆனால், சிறுவன் என்பதால் தலைமைப் பொறுப்பு கிடைக்கவில்லை. பள்ளிக்குப் போகாமல் தாயிடம் அரசியலும், போர்க் கலையும் பயின்றான். ‘‘தோல்வி அடைந்துவிடுவோமோ என்று அச்சப்படுபவன், வெற்றி பெறமாட்டான். அதனால், எதிரிகளுக்கு முதலில் உன் மீது அச்சத்தை உருவாக்கு!’’ என்று புதிய போர் மந்திரத்தை போதித்ததே அவன் தாய்தான்.

17-வது வயதில் கொள்ளையர்களால் சிறைப்பிடிக்கப்பட்ட டேமுஜின், அவர்கள் அத்தனை பேரையும் கொன்று தப்பி வரவே, அவனது சாகசத்தைப் பாராட்டி, தலைவனாக ஏற்றுக்கொண்டார்கள். அதன்பின், சிதறிக் கிடந்த மங்கோலியர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து, தனது படைவீரர்களுக்குக் கடுமையான பயிற்சியளித்து, அண்டை நாடுகளை எல்லாம் கைப்பற்றத் தொடங்கினான் டேமுஜின்.

1183-ம் ஆண்டில் எல்லா மங்கோலியர்களும் இணைந்த பின்னரும், சிறு வயது நண்பனான ஜம்முஹா என்பவன் மட்டும் தனி ராஜாங்கம் நடத்துவதைக் கண்டு, அவன் மீது போர் தொடுத்து வென்றான். சிறைப்பட்ட நண்பன் ஜம்முஹா, ரத்தம் வராத வகையில் தனக்கு மரணம் வேண்டும் எனக் கேட்டுக்கொள்ள, கம்பளிப் போர்வையை அழுத்தமாக அவன் உடலில் சுற்றி, மூச்சுவிட முடியாமல் செய்து, மரணத்தில் ஆழ்த்தினான். ஜம்முஹாவுக்குத் துணையிருந்த அத்தனை படைவீரர்களையும் கொன்று குவித்தான். அப்போதுதான் ‘அரசர்க்கெல்லாம் அரசன்’, ‘தோற்கடிக்க முடியாத மாவீரன்’ என்கிற பொருள் பொதிந்த ‘செங்கிஸ்கான்’ என்கிற பட்டம் வழங்கப்பட்டது.

30,000 படைவீரர்களை மட்டுமே வைத்திருந்த செங்கிஸ்கானால் 4,00,000 படைவீரர்கள் கொண்ட சீனாவைத் தோற்கடிக்க முடிந்ததற்குக் காரணம், எதிரிகளுக்குக் கடும் அச்சத்தை உருவாக்கியதுதான்.

அதையடுத்து ரஷ்யா, ஹங்கேரி, போலந்து நாடுகளையும் வெற்றிகொண்ட நேரத்தில், குதிரையிலிருந்து தவறி விழுந்து, 1227-ம் ஆண்டு இறந்துபோனார் செங்கிஸ்கான்.

## 33. ‘இசையால் அடைய முடியாத சந்தோஷம் இல்லை; அழிக்க முடியாத துயரமும் இல்லை!’



1780-ம் வருடம். தன்னுடைய 24-வது வயதில் பல ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து, இசைத் திறமையை நிரூபித்து புகழ், மரியாதை சம்பாதித்த மொஸார்ட், செலவு செய்த பணம்கூட கிடைக்காமல் சோகத்துடன் சொந்த நாடான ஆஸ்திரியாவுக்குத் திரும்பினார். அந்தநேரம் வியன்னாவின் ஆர்ச்பிஷப், மொஸார்ட்டை வேலைக்கு அழைக்கவே, உடனே பணியில் சேர்ந்தார்.

மொஸார்ட்டின் நிலை மாறியது, மரியாதையுடன் செல்வாக்கும் உயர்ந்தது. ஆனால், அவரை ஒரு அலங்கார சின்னம் போல விருந்தினர்கள் முன்னிலையில் இசைத்துக் காட்டும் ஒரு சாதாரண கலைஞனாக பயன்படுத்தவே ஆத்திரமடைந்த மொஸார்ட், வேலையில் இருந்து வெளியேறினார். கோபமடைந்த ஆர்ச்பிஷப், ‘‘என்னை எதிர்த்து வெளியேறாதே. உன்னுடைய இசையை ரசிப்பார்கள், ஆனால் பணம் தரமாட்டார்கள். சாப்பிடக்கூட வழியில்லாமல் வாழ்நாள் முழுவதும் துன்பப்பட போகிறாய்’’ என்று எச்சரித்தார். அவரிடம், ‘‘என்னிடம் இசை இருக்கிறது, உணவு இல்லாதபோது இசையைச் சாப்பிடுவேன். இசையால் அடைய முடியாத சந்தோஷம் இல்லை, அழிக்க முடியாத துன்பமும் இல்லை’’ என்று சொல்லி வெளியேறினார்.

மிகச் சரியாக 250 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 1756-ம் ஆண்டு ஆஸ்திரியாவில் ஒரு இசைக் கலைஞரின் மகனாகப் பிறந்தார் ஊல்ஃப்ஹங்க் ஆம்டெய்ஸ் மொஸார்ட். ஏழு வயது சகோதரி நான்னியர்ல் தந்தையிடம் இசை பழகத் தொடங்கிய நேரத்தில், மூன்று வயது மொஸார்ட்டும் ஆர்வமாக கலந்து கொண்டார். நேரம் போவது தெரியாமல் ‘க்ளாவ்யர்’ எனும் பியானோவுக்கு முந்தைய இசைக்கருவியை அழுத்தி விளையாடிக் கொண்டே இருந்ததில், மொஸார்ட்டுக்கு இசை கைவசமானது. குழந்தைகளும் இசையை கற்றுக்கொண்டால் வறுமையில் வாழ வேண்டியிருக்குமே என்று தாய் வருந்தியபோது, ‘‘பணம், செல்வாக்கினால் கிடைக்காத மகிழ்ச்சியை இசை மூலம் பெற முடியும். இசையால் அடைய முடியாத சந்தோஷம் இல்லை, அழிக்க முடியாத துரயமும் இல்லை’’ என்று தந்தை சொன்ன பதிலை மனதில்

குறித்துக்கொண்டான் மொஸார்ட். நான்கு வயதில் இசைக் குறிப்புகளை மனப்பாடமாக வாசிக்கவும், ஐந்தாவது வயதில் சின்ன இசைக்குறிப்புகள் உருவாக்கவும் செய்தார். மகனின் அபாரமான இசை ஆற்றலை அறிந்த தந்தை, ‘அதிசய குழந்தைகள்’ என்று பெயரிட்டு நான்னியர்ல் மற்றும் மொஸார்ட்டை ஐரோப்பா முழுவதும் கூட்டிச்சென்று நிகழ்ச்சிகள் நடத்தினார். ஒன்பதாவது வயதில் சிம்பொனி இசைக்குறிப்பு உருவாக்கிய மொஸார்ட், 12-வது வயதில் இரு இசைத் தொகுப்புகள் வெளியிட்டு வெற்றியடைந்தார். பாராட்டுகள் குவிந்தாலும், வருமானம் மட்டும் குறையாகவே இருந்தது.

இளமை முழுவதும் வறுமை, கடன் போன்றவற்றுடன் வாழ்ந்த நேரத்தில், அலோய்ஸ்யா எனும் இளநங்கையுடன் ஏற்பட்ட காதலும் முறிந்து போகவே அத்தனை துன்பங்களையும் இசையால் மறந்தார். பின்னர், காதலின் ஞாபகமாக அலோய்ஸ்யாவின் இளைய தங்கை கான்ஸ்டென்ஸ் வெ்ஃபரை திருமணம் முடித்து ஆறு குழந்தைகள் பெற்ற மொஸார்ட்டுக்கு குடும்ப வாழ்விலும் துன்பம் தொடர்ந்தது. பெற்ற ஆறு குழந்தைகளில் நான்கு பேர் சின்ன வயதிலேயே இறந்து போயினர். பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற சிந்தனை இல்லாமல் இரவு, பகல் என காலநேரமின்றி இசையிலேயே மூழ்கியதால்தான் வித்தியாசமான 600 இசைக்கோர்வைகளை அவரால் படைக்க முடிந்தது.

1787-ம் வருடம் நிகழ்ந்த தந்தையின் மரணம் மொஸார்ட்டை மிகவும் உலுக்கியெடுக்கவே நோய்வாய்ப்பட்டார். அந்த நேரம் ஒரு கோடீஸ்வரர், அவரது மனைவி மரணத்தின் ஞாபகார்த்தமாக ஒரு மரணகீதம் இசைத்துதரக் கேட்டார். தன்னுடைய மரணத்துக்கான அழைப்பாகவே அதனை எடுத்துக்கொண்டு முழுமையாக அதற்கான இசையமைப்பில் இறங்கி 1791-ம் வருடம் மரணத்தை தழுவினார். ஏழ்மை நிலையில் மரணமடைந்த அந்த இசைமேதையின் இறுதிச் சடங்கில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரே கலந்துகொள்ள, ஒரு அனாதையைப் போல புதைக்கப்பட்டார்.

இசைக்கத் தெரிந்தவர் மட்டுமல்ல; இசையை ரசிக்கத் தெரிந்தவரும், சந்தோஷத்தை தேடிப் போக வேண்டியதில்லை, ஏனென்றால். அது அவர்களுடனே இருக்கிறது. அதுபோலவே எந்த துன்பத்தாலும் அவர்களை அசைக்க முடியாது, ஏனென்றால் அதற்கான மருந்தும் இசையிலேயே இருக்கிறது.

## 34. ‘பிறரை எடை போடுவதில் காலம் கழிக்காதீர்கள்... அன்பு செலுத்த நேரமிருக்காது.’



1950-ம் ஆண்டின் ஒரு நாள். கொல்கத்தா நகரின் பரபரப்பான வீதியின் ஓரம் நிரம்பி வழிந்திருந்த ஒரு குப்பைத் தொட்டியின் அருகே அலங்கோலமாக சாகும் தறுவாயில் படுத்துக்கிடந்தாள் ஒரு வயதான பெண். தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவள் உடலெங்கும் ஈக்களும், கொசுக்களும் மொய்த்துக் கொண்டிருக்க, அவளிடமிருந்து வரும் துர்நாற்றத்தை பொறுக்க முடியாமல், மக்கள் முகம் சுளித்து நடந்தனர். தான் நடத்திவந்த தொண்டு நிறுவனத்துக்கு நன்கொடை பெறுவதற்காக அந்த வழியாக வந்த சகோதரி தெரசா, மரணப்படுக்கையில் ஒரு உயிர் துடித்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் பதறிப்போய் தூக்கினார். கை விரல்கள் அழுகி, அதிலிருந்து வழிந்து கொண்டிருந்த சீழ், இரத்தத்தை துடைத்து எந்த அசூயையுமின்றி அந்த பெண்ணை அப்படியே அள்ளிக் கொண்டார். அதைக் கண்ட சிலர், ‘‘அய்யோ... அவ எத்தனை மோசமானவன்னு உங்களுக்குத் தெரியாது. அவளுக்கு இது கடவுள் கொடுத்த தண்டனை’’ என்று சொன்னார்கள். அவர்களிடம், ‘‘பிறரை எடை போடுவதில் காலம் கழிக்காதீர்கள்... அன்பு செலுத்த நேரமிருக்காது’’ என்று மென்மையாக சொல்லிவிட்டு கிளம்பினார் தெரசா.

1910--ம் ஆண்டு அல்பேனியா நாட்டில் பிறந்த தெரசாவுக்கு கிறிஸ்தவ மதக்கோட்பாடுகளில் பெரும் ஈர்ப்பு ஏற்படவே, 17-வது வயதிலேயே கன்னியாஸ்திரியாக மாறினார். மதத்தின் சார்பாக கொல்கத்தாவுக்கு வந்து ஆசிரியப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். கல்வி கற்பிப்பதைவிட பள்ளிக்கு வெளியே ஏழையிலும் ஏழைகள் படும் துன்பங்களே அவர் மனதையும் உடல் நலத்தையும் பாதித்தது. 1946-ல் நோயை குணப்படுத்த டார்ஜிலிங்குக்கு ரயிலில் பயணம் செய்தபொழுதுதான், ‘ஏழைகளிடம் அன்பு செலுத்தவே, இறைவன் தன்னை படைத்திருக்கிறார்’ என்பதை உணர்ந்தார். உடனே இரண்டு ஆண்டுகள் செவிலியர் பயிற்சி எடுத்து, 1948-ல் பொதுநல தொண்டர்களுடன் கொல்கத்தா சேரிப்பகுதிகளில் முழுமையாக நுழைந்தார். ‘‘உண்மையில் பாதிக்கப்பட்டவர்களை ஆராய்ந்து பார்த்து உதவுவோம், அப்போதுதான் நம் சேவைக்கு மரியாதை கிடைக்கும்’’ என்று சொன்னவர்களை திரும்பிக்கூடப் பார்க்காமல் கண்ணில் தென்படுபவர்களுக்கு எல்லாம் அன்பை வழங்கினார்.


வாழ்வைவிட பலரது மரணம் ஆதரவின்றி மிகக் கொடுமையாக இருந்ததை கண்ணால் கண்டு, முதியவர்களை பராமரிப்பதற்கென, 'நிம்மதியான மரணம்' என தனி அமைப்பை ஏற்படுத்தினார் தெரசா. 12 சகோதரிகளுடன் தொடங்கப்பட்ட அந்த அமைப்பு, இன்று உலகம் முழுவதும் 100 நாடுகளில் சுமார் ஐம்பதாயிரம் சேவகர்களுடைய தொண்டுகளுடன் வளர்ந்து கொண்டிருக்கிறது.

அனைவரையும் அன்புடன் நோக்கும் தெரசா, உணவுப் பொருள் வீணாவதைப் பார்த்தால் மட்டும் கோபத்தின் உச்சிக்கே போய்விடுவார். பட்டினியுடன் இருக்கும் எத்தியோப்பியக் குழந்தைகளைப் பார்த்த பின்னர், ஒரு பருக்கைகூட வீணாவதை சகிக்கமுடிவதில்லை என வருந்தினார்.

1979-ல் சமாதானத்துக்கான நோபல்பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. அதனை ஆதரவற்றவர்கள் சார்பில் பெற்றுக் கொண்டார் தெரசா. வழக்கமாக பரிசு வழங்கும்போது நடத்தப்படும் விருந்து விழாவினை தடுத்து நிறுத்தி அதற்கென ஒதுக்கப்பட்டிருந்த தொகையினையும் ஆசிரமத்துக்காக வாங்கிக்கொண்டார். உலக மக்கள் அனைவருக்கும் அவர் விடுத்த வேண்டுகோள் இதுதான், ''எல்லோரும் உதவும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள், எல்லோருக்கும் உதவுங்கள். அன்பு செலுத்துவதில் ஜாதி, மதம் என பாகுபாடு பார்க்காதீர்கள். பிறரை எடை போடுவதில் காலம் தாழ்த்தாதீர்கள், அன்பு செலுத்த நேரமிருக்காது''.

இரண்டுமுறை இதயநோயால் பாதிக்கப்பட்டதால், தனக்குப் பின் ஆசிரமத்தை கவனிக்க புதிய தலைவருக்கான ஓட்டெடுப்பு நடத்தினார் தெரசா. அந்த ஓட்டெடுப்பில் எல்லா வாக்குகளுமே தெரசாவுக்கு ஆதரவாக இருக்க, ஒரே ஒரு வாக்கு மட்டுமே எதிர்த்து இருந்தது. ஆம், அந்த ஒரு ஓட்டு தெரசா போட்டதுதான். நிபந்தனையின்றி அன்பு செலுத்தியதால்தான் எதிர்ப்பு என்றால் என்னவென்றே அறியாமல் 1997-ல் மரணமடையும் வரை அவரால் வாழ முடிந்தது.

## 35. மனதில் உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்!'



1893-ம் வருடம். தென்னாப்பிரிக்காவின் ஆளரவற்ற ஒரு ரயில் நிலையத்தில் கடும் குளிரில் இரவைக் கழித்துக் கொண்டிருந்தான் 24 வயது இளைஞன். ரயில் பயணத்துக்கான முதல் வகுப்பு டிக்கெட் வைத்திருந்தும், நிறவெறி காரணமாக கீழே இறக்கப்பட்ட அராஜகத்தை நினைத்துத் துடித்தான். வழக்கறிஞர் தொழில் செய்யும் தனக்கே இந்த கொடுமை நிகழ்கிறது என்றால், படிக்காத இந்தியர்களுக்கு என்னவெல்லாம் அநியாயம் நிகழும் என எண்ணிப் பார்த்தான்.

இந்த அநியாயத்தை எதிர்த்து நிற்பதா அல்லது இந்தியாவுக்கு திரும்பிவிடுவதா என்ற இரண்டே கேள்விகள்தான் அவனிடம் அப்போது இருந்தது. இரவெல்லாம் சிந்தித்தவன், காலையில் சூரியன் கண் விழிப்பதற்குள் மிகத் தெளிவான போராளியாக மாறினான். அடிமைத்தனத்தையும் அராஜகத்தையும் எதிர்க்கத் துணிந்தான். போராட வேண்டுமாயின் பணபலம் மற்றும் ஆள்பலம் வேண்டும், உன்னிடம் இரண்டும் இல்லை என்பதால் தோற்றுவிடுவாய் என்று அவநம்பிக்கை விதைத்த நண்பர்களைப் பார்த்து, 'மனதில் உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்' என்று போராட்டத்தை தொடங்கினான். அதில் வெற்றிபெறவும் தொடங்கினான். ஆம்... பாரதத்தின் தந்தை என்றழைக்கப்படும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்திதான் அந்த இளைஞன். 21 ஆண்டுகள் தென்னாப்பிரிக்காவில் அவர் நடத்திய போராட்டத்தின் வெற்றியைக் கண்டுதான், இந்தியா அவரை கைநீட்டி அழைத்தது.

1869-ல் குஜராத் மாநிலம் போர்பந்தரில் ஒரு ஆச்சாரமான குடும்பத்தில் பிறந்தார் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. பன்னிரெண்டாவது வயதில் பார்த்த 'அரிச்சந்திரா' நாடகம், அவருக்குள் பெரும் மாற்றத்தை உருவாக்கியது. விசுவாமித்திரர் நடத்திய சோதனைகளை எல்லாம் 'மன உறுதியால் தாங்கிக் கொண்டேன்' என நாடகத்தில் அரிச்சந்திரன் சொன்னதைக் கேட்டு, உண்மை மட்டுமே பேசும் புதிய மனிதராக மாறினார். அவர் மன உறுதி மற்றும் நேர்மையை வெளிநாடுகளில் படிக்கச் சென்றபோதோ அல்லது கடும் நோயுடன் மரணப் போராட்டம் நடத்தியபோதோ எப்போதும் கைவிட்டதேயில்லை. ஒரு வழக்கறிஞராக தென்னாப்பிரிக்காவுக்கு சென்றவர், கோர்ட்டுக்குக் கொண்டு சென்ற வழக்குகளைவிட, கோர்ட்டுக்கு வெளியே பேசித் தீர்த்துவைத்த வழக்குகள்தான் அதிகம். தென்னாப்பிரிக்காவில் நடந்து கொண்டிருந்த நிறவெறியும் அடக்குமுறையும் காந்தியை ஒரு போராட்டக்காரராக மாற்றியது.

போராட்டம் என்றால் வெட்டு, குத்து என்று ரத்தம் சிந்திக் கொண்டிருந்த காலகட்டத்தில் உலகிலேயே முதன்முறையாக 'அகிம்சை' போராட்டத்தை அறிமுகப்படுத்தினார். ''ஆயுதம் கொண்டு தாக்குவதைவிட, எதிரியின் முன் உறுதியுடன் நின்று சாத்வீகமாக போராடுவதுதான் உண்மையான வீரம், எதிரியிடம் காட்ட வேண்டியது எதிர்ப்பை மட்டுமே தவிர, வன்முறையல்ல'' என்ற காந்திஜியின் அகிம்சை போராட்டத்தை ஆரம்பத்தில் கிண்டலும் கேலியும் செய்தார்கள். ஆனால் இந்த கோட்பாடுதான், சிதறிக்கிடந்த இந்திய சுதந்திரதாகத்தை ஒன்று சேர்த்து வலிமையாக்கியது. அதிக எண்ணிக்கையில் பெண்களை சுதந்திரப் போராட்டத்தில் இணைத்தது. ஆனாலும் இந்த போராட்டத்தின் வெற்றி குறித்து சந்தேகங்கள் எழுந்தபோது, ''மன உறுதியுடன் போராடினால், வெற்றி நிச்சயம்'' என்று உறுதியுடன் சொன்னார் மகாத்மா காந்தி.

1930-ம் வருடம். 61 வயதான காந்தி, உப்புக்கு வரி போட்ட ஆங்கில அரசாங்கத்தை எதிர்த்து 'தண்டி யாத்திரை'யை தொடங்கினார். 241 மைல் தூரத்தை 24 நாட்களில் கடந்த காந்தி, ஆயிரக்கணக்கான காவலர்கள் முன்னிலையில் தண்டியில் உப்பு எடுத்தார். நாடெங்கும் பல்வேறு தலைவர்கள் தலைமையில் நடந்த இந்தப் போராட்டத்தில் லட்சக்கணக்கான தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள். காந்தியின் மன உறுதியையும் அகிம்சையின் பலத்தையும் கண்டு மக்கள் மலைத்து நிற்க ஆங்கிலேயர்கள் பயந்து போனார்கள்.

1947-ம் வருடம். காந்தியின் இடைவிடாத போராட்டத்தால், இந்தியாவுக்கு கத்தியின்றி ரத்தமின்றி சுதந்திரம் கிடைத்தது. இந்தியாவின் தலைமைப் பொறுப்பு தேடி வந்தும், அதனை ஏற்றுக் கொள்ளாமல் தீண்டாமை, ஏழ்மை, மதக் கலவரம் போன்றவற்றுக்கு எதிராக மன உறுதியுடன் மீண்டும் போராட்டத்தை தொடர்ந்தார்.

'120 வயதுவரை வாழ்ந்தால் மட்டுமே நான் நினைத்திருக்கும் எல்லா காரியங்களையும் செய்து முடிக்க முடியும்' என்ற காந்திஜியை 78வது வயதில் மூன்று துப்பாக்கி குண்டுகளுடன் முடித்துவைத்தான் நாதுராம் வினாயக கோட்ஸே. காந்தி மறைந்தாலும் மன உறுதி எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கெல்லாம் வெற்றி உருவத்தில் அவரை தரிசிக்க முடியும்.